வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வாரமலர்

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 21.05.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 163 | பக்கங்கள் : 20




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



07
முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் 'முழுமையான விடுதலை' எப்போது கிடைக்கும்?



08
ராஜபக்ஷக்களின் எதிர்கால அரசியல் வியூகங்கள்



09
இனப்பாகுபாடும் இன ஒதுக்கலுமே எழுபது ஆண்டுகளில் இனப்படுகொலையானது!



10
செல்வச்சந்நிதி முதல் கதிர்காமம் வரை: உலகில் மிக நீண்ட ஆன்மீக பாதயாத்திரை !

# வடக்கு - கிழக்கில் விகாரைகளின் புனரமைப்பை உறுதிப்படுத்துங்கள்

## அஸ்கிரிய பீடம் ரணிலுக்கு அவசர கடிதம்

கொழும்பு, மே 21

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள விகாரைகள் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள விசேட பௌத்த தொல்பொருள் தலங்களின் புனரமைப்புப் பணிகளை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம், அஸ்கிரிய மகா விகாரை வலியுறுத்தியுள்ளது.**

**அஸ்கிரிய மகா விகாரையின் வரக்காகொட சிறி ஞானரத்ன தேரரினால், ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைமுறைப் படுத்தப்படும் தொல்பொருள் தலங்கள் சம்பந்தமான திட்டங்களை அவ்வாறே தொடர்ந்து முன்கொண்டு செல்லல் மற்றும் வெளித் தரப்புகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் உதவிகளை அதற்காகப் பயன்படுத்தல் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும் என அதில் கோரப்பட்டுள்ளது.

இனவாத மற்றும் மதவாத பிரச்னைகள் ஏற்படுவது போன்றதான பிம்பத்தை, நாட்டின் பல்வேறு

19

# யாழ்ப்பாணத்தில் நாளை கடமை ஏற்கிறார் வடக்கு ஆளுநர் சாள்ஸ்

யாழ்ப்பாணம், மே 21

ஜனாதிபதியால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் நாளை திங்கட்கிழமை காலை கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

நாளை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

19

# மன்னாரில் மாயமான மாணவி மீட்கப்பட்டார்!

மன்னார், மே 21

மன்னார்-முசலி பிரதேச செயலகப் பிரிவில் காணாமல் போன 15 வயதான மாணவி புத்தளத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார் என மாணவியின் தந்தை தெரிவித்துள்ளார்.

பண்டாரவெளி, மணற்குளம் என்ற முகவரியில் வசிக்கும் ரிகாஷா (வயது-15) என்ற மாணவியைக் கடந்த 18ஆம் திகதி காலையிலிருந்து காணவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இந்த மாணவி பண்டாரவெளி முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்று வருகிறார்.

19

# 10 பெரமுன எம்.பிக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது!

## எஸ்.எம்.சந்திரசேன குற்றச்சாட்டு

கொழும்பு, மே 21

பொதுஜன பெரமுனவின் பத்து சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார பாதிப்புக்கு தீர்வுகாண வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை தெரிவு செய்தோம். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் எடுத்த ஒருசில தவறான தீர்மானங்களினால் பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஜனாதிபதியை நாங்கள் தெரிவு செய்திருந்தாலும், பொதுஜன பெரமுனவை முழுமைப் படுத்திய வகையில் அமைச்

19

# ஏனைய மாகாணங்களுக்கும் விரைவில் புதிய ஆளுநர்கள்!

கொழும்பு, மே 21

நாட்டில் உள்ள 9 மாகாணங்களில் மூன்று மாகாணங்களுக்கு அண்மையில் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய மாகாணங்களுக்கும் புதிய ஆளுநர்களை நியமிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய 6 மாகாணங்களுக்கும் புதிய ஆளுநர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதியின்

19

# அரசியல் தீர்வுதிட்ட பேச்சு நிச்சயம் வெற்றியளிக்கும்

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

கொழும்பு, மே 21

"தமிழ்க் கட்சிகளுடன் நான் ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது."

-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் கூறுகை

19

# ஜனக ரத்நாயக்கவை பதவி விலக்க ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது!

## லக்ஷ்மன் கிரியெல்ல உறுதி

கொழும்பு, மே 21

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்காக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிராகவே வாக்களிக்கும். மக்களுக்கு நியாயமான விலையில் மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்க போராடியமைக்காகவே அவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன்

19

# ட்ரோன் மூலம் டெங்கு ஒழிப்பு

கொழும்பு, மே 21

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் செல்ல முடியாத உயரமான கட்டடங்களில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் நேற்று

19

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் குச்சவெளி காணியில் விமான படைத்தளம்!

## 298 ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைக்க ஏற்பாடுகள்

கொழும்பு, மே 21

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 298 ஏக்கர் காணியை விமானப் படைத்தளம் அமைப்பதற்கு வழங்கத் தயாராக இருப்பதாக இலங்கை

19






# ஆழமான கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள தவறினால் ஆபத்து

## இலங்கைக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 21

இலங்கை மிகவும் ஆழமான கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு தவறும் பட்சத்தில், எதிர்வரும் காலங்களில் எதிர்பாராத வகையில் மிகவும் உயர்வான பணவீக்க நிலைமைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும். இது வட்டி வீதங்களில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் கடன் ஸ்திரத்தன்மையையும் பாதிக்கும் என்று வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு எச்சரித்துள்ளது.

நீடிக்கப்பட்ட நிதி உதவிச் செயற்றிட்டத்தின் கீழ் 2.9 பில்லியன் டொலர் கடனை இலங்

19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

இந்தப் பத்தியில் நேற்றும் ஆளுநர்கள் பதவி விலக மறுத்தமை பற்றி எழுதியிருந்தேன். இன்றும் ஆளுநர் விவகாரம் தான் என்றாலும் இது ஒரு விவகாரமான விவகாரம்.

கிழக்கு மாகாண ஆளுநரையும் வடமேல் மாகாண ஆளுநரையும் மாற்றவேண்டாம் என்று உத்தரவாதம் பெற்றுக்கொண்டே கோட்டாபய பதவியிலிருந்து வெளியேறிய சங்கதியை நேற்று படித்திருப்பீர்கள்.

அந்த இரண்டு ஆளுநர்களும் பதவி விலக மறுத்ததைத் தொடர்ந்து அவர்களின் வழியில் நமது வடக்கு ஆளுநரும் பதவி விலக மறுப்புத் தெரிவித்துவிட்டு காத்திருந்தார்.

ஆனால், அவரையும் ஆளுநர் பதவியிலிருந்து வெளியேற்றினாலும் நிதி அமைச்சில் அவருக்கு முக்கிய பதவி ஒன்றை வழங்க ஜனாதிபதி ரணில் முடிவெடுத்திருந்தார் என்றும், ஆனால் அவரும் மற்றைய இரண்டு ஆளுநர்களுடன் இணைந்து பதவி விலக மறுத்ததால் தனக்கு கிடைக்கவிருந்த அந்தப் பதவியையும் பறிகொடுத்துவிட்டு நிற்கிறார் என்பதும் மற்றுமொரு சோகம்.

வடக்கின் ஆளுநர் பதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பறித்தெடுத்ததும், அவசர அவசரமாக அவர் கொழும்பு திரும்பவேண்டி வந்தது.

அதனால் அவர் ஆளுநர் மாளிகையில் தான் வைத்திருந்த பல பொருட்களை போட்ட போட்ட இடங்களில் வைத்துவிட்டு சென்றிருக்கின்ற விடயம் இப்போதுதான் வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது.

ஆளுநர் ஜீவன் தியாகராசா, நமது மத நம்பிக்கைகள் சிலவற்றில் அதீத நம்பிக்கை கொண்டவராம்.

தாம் வகிக்கின்ற பதவிகளில் தொடரவேண்டும் என்று விரும்பினால், அதற்காகவே நமது சைவ வழிபாடுகளில் சண்டியாகம் என்ற யாகம் ஒன்று செய்யப்படுவதுண்டு.

மிகவும் அரிதாகவே செய்யப்படும் இந்த யாகம், பொதுவாக மக்கள் நடமாட்டம் குறைந்த ஏதாவது கிராமப் புறங்களிலேயே செய்யப்படுவது வழக்கமாம்.

கடந்த ஏப்ரல் மாதமே ஆளுநர்கள் நால்வர் மாற்றப்படவிருக்கின்ற செய்தி அரசல் புரசலாக வெளியே வரத் தொடங்கியிருந்தது. கோட்டாபய தான் நியமித்த இரண்டு ஆளுநர்களை மாற்றவேண்டாம் என்று கேட்டிருந்ததாலும், அவர்களை மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டதால் அது குறித்து ரணில், கோட்டாவைச் சந்தித்து அவரின் அனுமதியைப் பெற்றபோதே ஆளுநர்கள் மாற்றப்படவிருக்கின்ற செய்தி வெளிவரத் தொடங்கியிருந்தது.

இந்தக் காலத்திலேயே, வடக்கு ஆளுநர் கொழும்பில் ரொறிங்ரன் முருகன் கோவிலில் இந்த சண்டியாகத்தை நடத்தியிருக்கிறார். அது ஒரு சிறிய ஆலயம். அதிகம் மக்கள் வழிபாட்டுக்குச் செல்வதில்லை என்பதால் அந்த ஆலயத்தில் இந்த சண்டியாகத்தை செய்த அவர், அதற்காக பம்பலப்பிட்டியிலிருந்து இந்துக் குருவானவர்களை அழைத்துச் சென்று பல லட்சம் ரூபா செலவில் இந்த யாகத்தை நடத்தியிருக்கிறார்.

நேற்று முன்தினம் அந்தக் கோவிலுக்குச் சென்ற வடக்கின் முக்கிய பிரமுகர் ஒருவரிடம் இந்தத் தகவலைத் தெரிவித்த அந்த ஆலயத்தின் குருக்கள், சண்டியாகம் செய்ததால் தமது கோவிலின் நிலத்தில் பதிக்கப்பட்டிருந்த 'ரைல்ஸ்கள்' தரையிலிருந்து கிளம்பி சேதமடைந்துவிட்டதாகவும், ஆனால் ஆளுநரை தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

அங்கே ஆலயத்தில்தான் இப்படியொரு பிரச்னை என்றால், இங்கே ஆளுநர் மாளிகையில் புதிய ஆளுநரை வரவேற்பதற்காக ஆளுநர் மாளிகையை சுத்தம் செய்தபோது, ஆங்காங்கே பல மந்திரிக்கப்பட்ட பொருட்களைக் கண்டிருக்கிறார்கள் சுத்திகரிப்பில் ஈடுபட்ட பணியாளர்கள்.

இதனால் அவற்றை உரிய சமய அனுட்டானங்களுடன் அழிப்பதற்காக நேற்று முன்தினம் சமய குரவர்கள் அழைக்கப்பட்டிருந்தனராம்.

ஒருவர் தனக்கு தனது எதிரிகளால் தீங்கு வந்துவிடக்கூடாது என்றும், அதற்காக தான் நம்புகின்ற கடவுள்களிடம் மன்றாடுவதும் பூசை வைப்பதும் சாதாரணமாக நடக்கக்கூடியதுதான்.

ஆனால் இவரோ, தான் விரும்புகின்ற பதவியில் தொடரவேண்டும் என்பதற்காக இத்தனை காரியங்களையும் செய்திருக்கிறார்.

'அரசனை நம்பி புருசனைக் கைவிட்டதுபோல' என்று ஒரு பழமொழி நமது பழக்கத்திலுண்டு. அது பலவாறாக வியாக்கியானப் படுத்தப்படுவதுண்டு.

ஆனால் அதற்கு இப்படியொரு அர்த்தத்தை நண்பர் ஒருவர் சொன்னதாக ஞாபகம். அரச மரத்தை சுற்றிவந்தால் பிள்ளைப் பேறு இல்லாத பெண்களுக்கு கருத்தரிக்க சந்தர்ப்பம் ஏற்படும் என்று கூறப்படுவதுண்டு. அதாவது அரச மரத்திலிருந்து வெளியேறும் காற்று தொடர்பாக சித்தர்கள் அவ்வாறு கூறியிருப்பதாக கூறப்படுவதுண்டு. அதனால் அரச மரத்தை சுற்றிவந்தால் மாத்திரம் கருத்தரிக்க முடியாது கணவனும் வேண்டும் என்பதை விளக்கவே அரசனை நம்பி புருசனைக் கைவிட்டது என்பார்கள்.

இவரோ, சண்டியாகத்தை நம்பி ரணிலை கைவிட்டதால் இப்போது எல்லாவற்றையும் இழந்துபோய் நிற்கிறார்.!

**- ஊர்க்குருவி**

# யாழ்.பல்கலைக்கழகத்தில் மூவர் பேராசிரியர்களாக பதவி உயர்வு






யாழ்ப்பாணம், மே 21

யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகவும், ஒருவர் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பேராசிரியர் ஒருவர் துறைக்குரிய இருக்கைப் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகவும், விவசாய பீடத்தைச் சேர்ந்த ஒருவரை இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை இன்று ஒப்புதல் வழங்கியதுடன், முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரைத் துறைக்கான இருக்கைப் பேராசிரியராக நியமிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று, சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றின் படி, முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தின் மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி (திருமதி) எஸ். எம். சி. மகேந்திரன் அலோசியஸ் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி பூ. ஐங்கரன் இரசாயனவியலில் பேராசிரியராகவும், விவசாய பீடத்தின் விவசாயப் பொருளியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. சூரியகுமார் விவசாயப் பொருளியலில் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இதேநேரம், முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தில் மனித வள முகாமைத்துவத் துறையில் பேராசிரியரும் (Professor in Human Resource Management) , மனித வள முகாமைத்துவத் துறைத் தலைவருமான பேராசிரியர் என் கெங்காதரன் மனித வள முகாமைத்துவத்துறைப் பேராசிரியராகப் (Professor of Human Resource Management) (துறைக்கான இருக்கைப் பேராசிரியர் - Cadre Chair professor) பதவி உயர்த்தப்படுவதற்கான தெரிவுக் குழுவின் பரிந்துரையைப் பரிசீலனை செய்த பேரவை அதற்கான அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது. (அ)



யாழ்.செல்வச் சந்நதி ஆலயத்திலிருந்து கடந்த 6ஆம் தேதி புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான யாழ் கதிர்காம பாதயாத்திரிகள் 15 தினங்களின் பின்னர் நேற்று திருமலை மாவட்டத்தை அடைந்தனர். (அ)

# யாழ் பல்கலையில் இன்று வில்லிசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், மே 21

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சி. செந்தூரனின் மாணவர் நித்தியானந்தன் மோகனதர்சனின் வில்லிசை அரங்கேற்றம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை முதுநிலை விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும் சிறப்பு விருந்தினராக யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் விஎஸ்பி துசிதரனும் கலந்து கொள்வர். நிகழ்வில் சென் ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் வணபிதா ந. ஜே. ஞானப்பொன்ராஜா ஆசியுரையையும் வடக்கு மாகாண கல்வித்திணைக்கள அழகியல் துறைக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா மதிப்பீட்டுரையையும் வழங்குவர்.

அரங்கக் கலைஞர்களாக விற்குரு -நி.மோகனதர்சன், பக்கப்பாட்டு - பே. பிரசன்னா, விற்கடம் - மு. சுலக்சன், ஹார்மோனியம் - த.றொபேட், மிருதங்கம் - சி. செந்தூரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

விற்குரு மோகனதர்சன் தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் சென் ஜோன்ஸ் கல்லூரி சார்பில் வில்லிசை நிகழ்ச்சியில் பங்கேற்று இரண்டு தடவைகள் தங்கப் பதக்கம் பெற்றவர் ஆவார். இவ்வில்லிசை அரங்கேற்ற நிகழ்ச்சி கலாவினோதன் அமரர் சின்னமணிக்கு அர்ப்பணமாக மேற்கொள்ளப் படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ)

## சிறுவர் பாதுகாப்புக்காக சமூக புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, மே 21

சிறுவர்களின் பாதுகாப்புக்காக சமூக புலனாய்வுப் பிரிவொன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பதிவாகிவரும் இளம் தலைமுறையினருடன் தொடர்புடைய சட்டவிரோத சம்பவங்களைக் கவனத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறுவர்களின் பாதுகாப்புக்காக சமூக புலனாய்வுப் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எமது எதிர்கால சந்ததியினரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையாக சகல பாடசாலைகளினதும் ஒத்துழைப்புடன் இந்த புலனாய்வுப் பிரிவு அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மைக் காலமாக நாட்டின் ஒட்டுமொத்த அமைப்பையும் பலவீனப்படுத்துவதற்கு வழிவகுத்த பிரச்னைகள் குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும். பொது சேவையின் தரத்தை உயர்த்துவதுடன் தற்போதுள்ள அமைப்பில் தரமான மாற்றத்தை ஏற்படுத்தவேண்டியுள்ளது.

புதிய பட்டதாரிகளின் ஆளுமை, ஆர்வம், அறிவு மற்றும் தலைமைப் பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டியது முக்கியத்துவமுடையதாகும். அனைத்து துறைகளிலும் சரியான நேரத்தில் சீர்திருத்தங்கள் அவசியமாகும்-என்றார். (அ)

# அதிநவீன நகராக இவ்வருடம் யாழ்ப்பாணமும் அபிவிருத்தி!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, மே 21

கண்டி மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கான அபிவிருந்தியை தொடர்ந்து யாழ்.மாவட்டமும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து மகாணங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

குறிப்பாக கண்டி நகரத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அதி நவீன நகரமாக மாற்றியமைக்க தேவையான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை நேற்று சந்தித்து ஆசிபெற்றுக் கொண்டதன் பின்னர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு கூறினார்.

கண்டியிலுள்ள பழைய சிறைச்சாலை மற்றும் தபால் நிலைய கட்டடத் தொகுதிகளின் சிறப்பம்சங்களை பாதுகாக்கும் வகையில், அப்பகுதிகளை சுற்றுலாப் பிரயாணிகளின் அவதானத்தை ஈர்க்கத்தக்க இடங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டமிடல்களை முன்னெடுக்கவிருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் வெற்றியடைந்ததன் பின்னர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர முடியும் என நான் நம்புகிறேன்.

அதன்பிறகு, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அதிக முதலீடுகள் தேவைப்படுகின்றன.

மேலும், அதிகளவான சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டிற்கு அழைத்து வர வேண்டும்.

திருகோணமலை புதிய நகரத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கண்டி பெருநகர அபிவிருத்தி திட்டத்தை இவ்வருடத்தில் ஆரம்பிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அதன் பின்னர் யாழ்ப்பாண பெருநகரமும் அபிவிருத்தி செய்யப்படும் - என்றார். (அ)

# தினேஸ் ஷாப்டரின் உடல் தோண்டியெடுக்கப்படவுள்ளது

கொழும்பு, மே 20

பிரபல வர்த்தகர் தினேஸ் ஷாப்டரின் உடலை எதிர்வரும் 25 ஆம் திகதி தோண்டியெடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

ஐவரடங்கிய விசேட வைத்திய குழாம் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அமைவாக, தினேஸ் ஷாப்டரின் உடலை தோண்டியெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சடலம் மீது இரண்டாவது தடவையாகவும் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

பொரளை பொது மயானத்தில் அவரது காரில் கழுத்து இறுகக்கட்டப்பட்ட நிலையில், கடந்த ஆண்டு டிசெம்பர் 15 ஆம் திகதி தினேஸ் ஷாப்டர் கண்டுபிடிக்கப்பட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், தினேஸ் ஷாப்டர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பிரதேச செயலக களஞ்சியசாலையில் திருட்டு!

மன்னார், மே 21

மன்னார் பிரதேச செயலகத்தின் களஞ்சியசாலையொன்றில் நடைபெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பிரதேச செயலகத்தின் களஞ்சியசாலையில் இருந்து அலுமினிய பார்கள், நான்கு எரிவாயு சிலிண்டர்கள், ஐந்து நீர் இறைக்கும் இயந்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுள்ளன. திருடப்பட்ட சொத்தின் பெறுமதி ரூ.114,984 என மன்னார் பொலிஸார் தெரிவித்தர்.

கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதிக்கும் 21ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மன்னார் பிரதேச செயலக நிர்வாக அதிகாரியினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை கொள்ளைச் சம்பவம் தொடர்பில் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

# ஓய்வுபெற்ற முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு மணி விழா



முல்லைத்தீவு, மே 21

முல்லைத்தீவு மாட்ட அரசாங்க அதிபருக்கு மணிவிழாவும் பிரியாவிடை நிகழ்வும் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.க.கனகேஸ்வரன் (நிர்வாகம்) தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கதிராமத்தம்பி விமலநாதன் தனது 60 ஆவது வயதில் அரச சேவையில் இருந்து நேற்றுடன் ஓய்வு பெற்றார்.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்ட அரசாங்க அதிபர்களும் ஒன்றாக பிரசன்னமாகி அரச அதிபரின் சேவைநலன் பாராட்டில் கலந்துகொண்டனர்.

இந்த பாராட்டுவிழாவில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் .அ.சிவபாலசுந்தரம், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் . பீ.ஏ.சரச்சந்திர, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.அ.ஸ்ரான்லி டி மெல், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன், வட மாகாண நில அளவையாளர் நாயகம் பொ. சிவானந்தன், வடமாகாண நீர்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள், மாவட்ட செயலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள் , ஏனைய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், சாரதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனையைத் தடுக்க நடவடிக்கை

கொழும்பு, மே 21

பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு ஆளாவதைத் தடுப்பதற்கும், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் விழிப்புணர்வை மேலும் விரிவுபடுத்துவதற்கும் ஏற்கனவே பின்பற்றப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளை மேலும் திறம்பட முன்னெடுப்பதற்கும் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கல்வி அமைச்சர் பிரேம ஜயந்த பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாடசாலை முறையின் தற்போதைய நிலை தொடர்பில் விரிவான கலந்துரையாடல் நேற்று கல்வியமைச்சில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இடம்பெற்றிருந்தது.

அத்துடன் பாடசாலை பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடை விநியோகம் தொடர்பிலான விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் டெங்கு தொற்று நோயை கட்டுப்படுத்தும் முறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பாடசாலைகளில் மதிய உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்து இங்கு கேட்டறிந்ததுடன், சத்துணவுத் திட்டம் எதிர்காலத்திலும் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தரம் ஒன்றிலிருந்து பாடசாலை மாணவர்களிடம் ஆங்கிலத்தில் பேசுவதற்கான நடைமுறை ஆரம்பமானது.

2023 ஆம் ஆண்டின் முதலாம் தவணை தொடக்கத்தில் இருந்து நடை முறைப்படுத்தப்படுவதுடன், தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு அதனை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. (அ)

# புதையல் தோண்டிய மூவர் கைது!

கொழும்பு, மே 21

பசறை - பிபில வீதி, 13ஆம் கட்டைப் பகுதியில், புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - ஹோமாகம பகுதியைச் சேர்ந்த, பூசாரியான 60 வயதுடைய பெண்ணொருவரும், 30 மற்றும் 40 வயதுடைய ஆண்கள் இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் உட்பட பூசைப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

# மின் கட்டணம் குறையலாம்!

கொழும்பு, மே 21

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின் கட்டணத் திருத்தத்தின்படி, குறைந்த மின்சாரம் பயன்படுத்துபவர்களின் ஆரம்ப அலகுகளிலும், ஹோட்டல் துறையிலும் மின்சார அலகின் விலை ஓரளவு குறையும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விரு வகைகளிலும் விலை குறைப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்ட நிலையில், மின் கட்டண திருத்தம் ஜூலை 01ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

குறைந்த மின் யுனிட்களை பயன்படுத்தும் குழுவில் சுமார் 17 லட்சம் பேர் உள்ளதாகவும், மின்கட்டண உயர்வால் மின் பயன்பாடு ஓரளவுக்கு குறைந்துள்ளதாகவும் இந்த விவாதத்தில் தெரியவந்துள்ளது.

டொலரின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் எரிபொருள் மற்றும் நிலக்கரி இறக்குமதி செலவு குறைவதன் அடிப்படையில் மின் கட்டணத்தை குறைக்க மின்சார சபை தீர்மானித்துள்ளது.

ஹோட்டல் தொழில்துறையின் மின் கட்டணம் 40 வீதம் குறைக்கப்படும் என்றும் அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# அனைத்து மதத் தலங்களையும் பதிவு செய்ய அரசு நடவடிக்கை

கொழும்பு, மே 21

அனைத்து மத ஸ்தலங்களையும் நிறுவனங்களையும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என புத்தசாசன அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

நாட்டின் பல பாகங்களிலும் அனுமதியின்றி ஏராளமான நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். பதிவு செய்யப்படாத மத ஸ்தலங்கள் மற்றும் நிறுவனங் கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# மருத்துவர்களால் அரசுக்கு சுமார் 20 கோடி ரூபா நட்டம்

## அமைச்சர் கெஹலிய தகவல்



**கொழும்பு, மே 21**

**பல்வேறு பயிற்சிகளுக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள 215 மருத்துவர்கள் மீண்டும் பணிக்கு திரும்பாத நிலையில் அரசாங்கத்துக்கு சுமார் 20 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

2022ஆம் ஆண்டில் 169 விசேட வைத்தியர்கள் மற்றும் வைத்தியர்கள் பயிற்சிக்காக சென்றுள்ளதுடன், இவ்வருடம் இதுவரையில் 46 விசேட வைத்தியர்களும் வைத்தியர்களும் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளனர்.

இவர்களை அழைத்து வரவோ அல்லது பணம் வசூலிக்கவோ ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் வைத்தியர் ஒருவரைப் பயிற்றுவிக்க சுமார் 6 இலட்சம் ரூபாவும், விசேட வைத்தியரைப் பயிற்றுவிக்க சுமார் இரண்டு கோடி ரூபாவும் செலவாகும் என சுகாதாரத் திணைக்களங்கள் தெரிவிக்கின்றன.

இலவசக் கல்வியை கற்ற பின்னர், சேவையை விட்டு விட்டு அரசாங்கச் செலவில் பயிற்சிக்கு சென்ற பின்னர் பணிக்கு திரும்பாமல் இருப்பதால் பாரிய அவல நிலையை ஏற்படுத்தியுள்ளதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ)

# முட்டை இறக்குமதியை விரிவுபடுத்த நடவடிக்கை

கொழும்பு, மே 21

இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதியை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் அந்த நாட்டில் உள்ள கோழிப்பண்ணைகளை ஆய்வு செய்வதற்காக பிரதிநிதிகள் குழுவொன்று இந்தியா சென்றுள்ளது.

சுகாதாரம் மற்றும் கால்நடை உற்பத்தித் திணைக்களத்தின் இரண்டு அதிகாரிகளும் அரச வர்த்தக பல்வேறு சட்டபூர்வ கூட்டுத்தாபனத்தின் அதிகாரி ஒருவரும் இந்தியாவுக்கு சென்றுள்ளனர் என அதன் தலைவர் ஆசிறி வலிசுந்தர குறிப்பிட்டார்.

இந்தியாவின் சென்னையில் அமைந்துள்ள பல கோழிப் பண்ணைகளை ஆய்வு செய்த பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கு திரும்ப உள்ளனர்.

தற்போது, இந்தியாவில் 03 கோழிப்பண்ணைகளில் இருந்து முட்டைகள் இறக்குமதி செய்யப்படுவதுடன், போதிய அளவு இல்லாததால், சில புதிய பண்ணைகளை அடையாளம் காண்பதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

அதன்படி நாளாந்தம் சுமார் ஒரு மில்லியன் முட்டைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# காலாவதியான ரின் மீன்களை விற்ற சீனப் பிரஜை உட்பட ஆறு பேர் கைது

கொழும்பு, மே 21

காலாவதியான ரின் மீன்களை விற்பனை செய்த சீனப் பிரஜை உட்பட ஆறு பேரை, பேலியகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ரின் மீன்களின் பெறுமதி 80 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் என பொலிஸார் கூறினர்.

இவற்றை விற்பனை செய்வதற்கு வேறொரு நிறுவனத்தின் பெயரையும் அவர்கள் பயன்படுத்தி உள்ளமை பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# மலையக மக்களின் உரிமைகளை கோரி யாழ்.பஸ் நிலைய முன்பாகப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 21

மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தி யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று அமைதியான முறையில் கவன ஈர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் பூர்த்தி செய்த நிலையில் தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் இந்த கவன ஈர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.



இதன்போது பல்வேறு கோரிக்கைகளை ஏந்திய பதாகைகளை தாங்கியவாறு போராட்டக்காரர்கள் அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொண்டனர்.

“மலையக மக்கள் சுதந்திரமாக வாழ காணி வழங்கு”, “மலையக மக்களை சிதைக்க வேண்டாம்”, “பதவிகளுக்கு மலையக மக்களை விற்காதே” போன்ற பதாகைகளை ஏந்தியவாறு இந்த போராட்டம் நடைபெற்றது. (அ)

# வட்டுக்கோட்டையில் கறுவா செய்கையை ஊக்குவிப்பதற்காக விசேட செயலமர்வு



யாழ்ப்பாணம், மே 21

வடக்கில் கறுவா செய்கையை ஊக்குவிக்கும் முகமான செயலமர்வொன்று நேற்று சனிக்கிழமை வட்டுக்கோட்டை பங்குரு முருகன் கோவில் சமூக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த செயலமர்வில் கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ.ஜெயசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, விளக்க உரை நிகழ்த்தினார்.

கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் பலரும் இந்த செயலமர்வில் கலந்து கொண்டு, கருத்துத் தெரிவித்ததுடன், பொதுமக்களின் கேள்விகள், சந்தேகங்களுக்கு பதிலளித்தனர்.

கறுவாச் செய்கையை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதற்கான செய்முறை விளக்கம் இங்கு வழங்கப்பட்ட அதேவேளை கறுவா கன்றுகளும் இலவசமாக வழங்கப்பட்டன. (அ)

# 300 இலங்கை மாணவர்களுக்கு மகாத்மாகாந்தி புலமைப்பரிசில்

கொழும்பு, மே 21

இலங்கை முழுவதிலும் உள்ள 25 மாவட்டங்களைச் சேர்ந்த 300 உயர்தரப் மாணவர்களுக்கு மகாத்மா காந்தி புலமைப் பரிசில்கள் இந்திய தூதுவர் கோபால் பாக்லே, கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த ஆகியோரால் வழங்கப்பட்டன.

இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் ஒரு மாணவருக்கு 2,500 ரூபாய் வழங்கப்படவுள்ளது. கோவிட் தொற்று காரணமாக இந்த ஆண்டு 2021-2022 என இரு தொகுதி மாணவர்களுக்கும் ஒரே சந்தர்ப்பத்தில் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு இதன்போது வாழ்த்து தெரிவித்த தூதுவர், இரு நாடுகளிலும் உள்ள இளைஞர்களின் பிரகாசமான எதிர்காலத்திற்காக கல்வித் துறையில் இரு தரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருங்கிய கலாசாரத் தொடர்புகளை எடுத்துக்காட்டிய அவர் , இந்தியாவில் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

எதிர்காலத்தில் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இலங்கையின் இளம் தலைமுறையினர் பெரும் பலமாக இருப்பார்கள் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, மகாத்மா காந்தி புலமைப்பரிசில் மட்டுமல்லாமல், மேலும் பல புகழ் பெற்ற நிறுவனங்களில் பல்வேறு உதவித்தொகைகள் மற்றும் வாய்ப்புகளை வழங்கியதற்காக இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த முயற்சிகள் இலங்கையின் மனித வள வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்ததாகவும், மாணவர்களுக்கான பாடப் புத்தகம் அச்சிடுவதற்கான ஆதரவை வழங்கியதற்காக இந்திய அரசுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# அமைச்சு பதவி கிடைக்காததால் மொட்டு கட்சியினர் அதிருப்தியா?

## அடியோடு மறுக்கிறார் ஜோன்ஸ்டன்

கொழும்பு, மே 21

அமைச்சு பதவி கிடைக்காததால் பொதுஜன பெரமுன கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தியில் உள்ளனர் என வெளியாகும் தகவல்களை அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ நிராகரித்துள்ளார்.

பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் 12 பேர்வரை அதிருப்தியில் உள்ளனர் என வும், அவர்கள் எதிரணியில் அமரவுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ள நிலையிலேயே, அந்த தகவல் உண்மை அல்ல என ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ குறிப்பிட்டார்.

அதேவேளை, தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ள போதிலும் மக்கள் நலன்கருதி அமைதிகாப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வேலைக்காக தென்கொரியா சென்ற 2726 இலங்கையர்கள்!

கொழும்பு, மே 21

இந்த ஆண்டு மே மாதம் வரை 2726 இலங்கை தொழிலாளர்கள் தென் கொரிய வேலை வாய்ப்பிற்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

நாட்டுக்கு அனுப்பப்பட்ட வேலை ஒப்பந்தங்களின்படி, 2694 இளைஞர்களும் 32 யுவதிகளும் உற்பத்தி, மீன்பிடி மற்றும் கட்டுமானத் துறைகளில் வேலைகளுக்காக வெளியேறியுள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் கொரிய வேலைகளுக்கு சுமார் 8000 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த அந்நாட்டு மனிதவளத் துறை ஒப்புக்கொண்டுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு நிலவரப்படி தற்போது நடைபெற்றுவரும் கொரிய மொழி தேர்வுக்கு 84886 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

ஈழநாடு
Eelanadu
21.05.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மே - 21

சிலவேளைகளில் தற்செயலான சம்பவங்கள் வரலாற்றில் ஆச்சரியங் களை ஏற்படுத்துவதுண்டு. தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் மே மாதம் அதிர்ச்சிகரமான திருப்புமுனைக்குரிய மாதமாகவே இருக்கின்றது. மூன்று தசாப்த காலமாக, பல்வேறு சவால்களை வெற்றி கொண்டு, நிமிர்ந்து நின்ற விடுதலைப் புலிகள் இயக்கம், 2009 மே மாதத்தில் முற்றிலுமாக அழிக்கப் பட்டது.

மே மாதம் தமிழர் அரசியல் நாட்காட்டியில் எப்போதுமே தவிர்க்க முடியாதவொரு இடத்தைப் பெற்றுக்கொண்டது. ஆனால் இது போன்றதொரு மே மாதத்தில்தான், தமிழ்த் தேசிய அரசியலை காலம் தோறும் தொடரப் போகும் சாபமொன்றும் பீடித்துக்கொண்டது.

1991, மே, 21இல், ராஜீவ் காந்தி, தற்கொலை குண்டுத் தாக்குதலில் கொல் லப்பட்டார். கொலைச் சம்பவத்தை ஆராய்ந்த டி.ஜி.பி.கார்த்திகேயன் தலை மையிலான புலன் விசாரணை குழுவினர், விடுதலைப் புலிகள் இயக்கமே, ராஜீவ்காந்தியை கொலை செய்ததாக உறுதி செய்தது. இந்தக் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் நிராகரிக்கவும் இல்லை. ஏனெனில் விடயங்கள் ஆதார பூர்வமாக வெளியாகிவிட்டன. 2002 இல்,விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், நீண்ட காலத்திற்கு பின்னர் பொதுவெளியில் தோன்றி னார். வன்னியில் சர்வதேச ஊடகங்களை சந்தித்தார். இதன்போது, ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பில் இந்திய ஊடகவியலாளர் கேள்வியெழுப் பியிருந்தார். இது பத்து வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஒரு துன்பியல் சம்பவம் என்றார். நாங்கள் அதனைச் செய்யவில்லையென்று பிரபாகரன் உறுதியாகக் கூறவில்லை. தாங்கள் தவறு செய்துவிட்டோமென்று பிரபாகர னால் கூறமுடியவில்லை. ஆனால் தங்களின் தவறை மறுதலிக்காமல், துன்பி யல் சம்பவமென்று கூறிக் கடந்து செல்ல முற்பட்டனர். அங்கு பேசிய அன்ரன் பாலசிங்கம், நாங்கள் சமாதான முன்னெடுப்பில் ஈடுபட்டிருக்கின்றோம் - எனவே கடந்த காலத்தை தோண்டவேண்டாமென்று கூறினார். ஆனால் அதே பாலசிங்கமே, பின்னர் கடந்த காலத்தைத் தோண்டினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இறுதி அத்தியாயம் எழுதப்பட்டுக் கொண் டிருக்கின்றது என்பதை-தெளிவாகப் புரிந்துகொண்ட, அன்ரன் பாலசிங்கம், 2006 இல், இந்திய தொலைக்காட்சியான என்.டி. தொலைக்காட்சிக்கு நேர் காணலொன்றை வழங்கியிருந்தார். அதில், விடுதலைப்புலிகள் இந்தியப் படைகளுக்கு எதிராக சண்டையிட்டது, அதனைத் தொடர்ந்து, ராஜீவ் காந்தியின் கொலை இடம்பெற்றதை குறிப்பிட்டு, மன்னிப்புடன் வருத்தம் தெரி வித்திருந்தார். கடந்த காலத்தை பெருந்தன்மையுடன் பின்னுக்கு வைத்து, இந்திய அரசாங்கமும், இந்திய மக்களும் இந்த விடயத்தில் தலையீடு செய்ய வேண்டுமென்று கோரியிருந்தார். யுத்தத்தின் முடிவை மாற்றியமைக்கக்கூடிய ஆற்றல் இந்தியாவுக்கு மட்டுமேயுண்டு என்பதை பாலசிங்கம் சரியாகவே அறிந்திருந்தார். எனினும் பாலசிங்கத்தின் முயற்சி கைகூடவில்லை. காலம் அதிகம் கடந்திருந்தது.

2015 இல், இலங்கையின் சமாதான முன்னெடுப்பின் நோர்வேயின் பங்க ளிப்பு தொடர்பில், மார்க் ஷெல்டர் எழுதிய, உள்நாட்டு யுத்தத்தின் முடிவுக்கு- என்னும் நூல் வெளியாகியிருந்தது. இந்த நூலில், அன்ரன் பாலசிங்கம் தன்னிடம் கூறிய விடயங்களை எரிக் சொல்ஹெய்ம் பகிர்ந்திருக்கின்றார். ராஜீவ் காந்தியை கொல்லும் புலிகளின் தீர்மானம் மிகப் பெரிய தவறாகுமென்று கூறிய பாலசிங்கம், இந்த விடயம், முற்றிலுமான நாசமாகுமென்றும் குறிப்பிட்டி ருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர், பிரபாகரன், அவரது இறுதி மாவீரர் தின உரையில், இந்திய பேரரசுடன் உறவுகளை ஏற்படுத்த விரும்பு வதாகக் குறிப்பிட்டிருந்தார். இந்தியாவின் தவிர்க்க முடியாத இடத்தை பிற் காலத்தில் பிரபாகரன் உணர்ந்திருக்கின்றார் - அதேபோன்று ஏனையவர்களும் உணர்ந்திருந்தனர். ஆனால் அதனை எவ்வாறு வெளிப்படுத்துவதென்று அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. ஏற்கனவே ஒரு பாரதூரமான தவறைப் புலிகள் செய்திருந்ததால், பிரபாகரனால் இந்தியாவை நெருங்க முடியவில்லை. அந்த இடைவெளியை நிரப்புவதற்கு பாலசிங்கம் முயற்சித்தார். அவரால் முடியவில்லை.

35 வருடங்களுக்கு பின்னரும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ், கிடைக்கப்பெற்ற 13ஆவது திருத்தச்சட்டம் ஒன்றுதான் ஈழத் தமிழர்களிடம் எஞ்சியிருக்கின்றது. அன்று விடுதலைப் புலிகள் நிராகரித்ததை தாண்டி புலிகளால் செயலில் எதனையும் நிரூபிக்க முடியவில்லை. புலிகளாலேயே முடியாமல் போனதை, புலிகளின் வெறும் விசுவாசிகள் என்போரால் எவ்வாறு சாத்தியப்படுத்த முடியும். முடியவே -முடியாதென்னும் யதார்த்தத்தை அடிக்கடி உணர்த்தும் வகையில், தமிழரின் அரசியல் காலம் நகர்ந்துகொண்டிருக்கின்றது.

# நல்லூர் கந்தன் பெருவிழா காளாஞ்சி யாழ் மாநகரசபையிடம் கையளிப்பு


படம் : ஐ.சிவசாந்தன்

*யாழ்ப்பாணம், மே 21*

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெரு விழா எதிர்வரும் ஓகஸ்ட் 21ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ள நிலையில், நல்லூர் கந்தன் பெருவிழாவுக்கான ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத் திற்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தல், வீதி தடை கள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய் தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ் மாநகரசபையினருக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி நேற் றைய தினம் பெருவிழா நாட் காட்டி அடங்கிய காளாஞ்சி ஆலயத்தினரால் கையளிக்கப் பட்டது.

இந்த வைபவத்தின் போது பாரம்பரிய முறைப் படி யாழ் மாநகரசபை வளாகத்தில் வாழை, தோர ணங்கள் கட்டி அலங்காரம் சிறப்பாக அமையப் பெற்றி ருந்தது.

(அ

# அரசில் இருந்து வெளியேறுவேன்!

## மொட்டு எம்.பி. எச்சரிக்கை

*கொழும்பு, மே 21*

"சமுர்த்தி வேலைத்திட் டம் இல்லாதொழிக்கப் படு மானால் இந்த அரசில் இருந்து நிச்சயம் வெளியேறு வேன்."-என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

"வறியவர்களின் பொரு ளாதாரத்தை மேம்படுத்துவ தற்காகவே சமுத்தி வேலைத் திட்டம் உள்ளது. அதனை இல்லாது செய்வதற்கு இடம ளிக்கப்படக்கூடாது. அதற்கு நான் எதிர்ப்பை வெளியிடு வேன்.

இது தொடர்பில் ஜனாதி பதியுடன் பேச்சு நடத்தி னேன். சமுர்த்தி வேலைத் திட்டம் இல்லாதொழிக்கப் படமாட் டாது, சமுத்தி அதிகாரிகளின் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படாது என ஜனாதிபதி உறுதியளித்தார். ஆனால் சமுர்த்தி முறைமை மறுசீரமைக்கப்படும்.

இந்த உறுதிமொழி மீறப்படுமானால் நான் அர சில் இருந்து நிச்சயம் வெளி யேறுவேன்.

சமுர்த்தி வேலைத்திட்டத் தில் உள்ள குறைப்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண் டும். அவ்வாறான திட்டங் களுக்கு ஒத்துழைப்பு வழங்கு வேன்."-எனவும் ஜகத் குமார குறிப்பிட்டார்.

(அ)

# காரைநகர்-ஊர்காவற்துறை போக்குவரத்து வழமைக்கு!

## யாழ்.ஒருங்கிணைப்புக் குழு துரித நடவடிக்கை

*யாழ்ப்பாணம், மே 21*

ஊர்காவற்துறை - காரை நகர் இடையிலான கடல் பாதை போக்குவரத்துச் சேவையைச் சில மணித்தியா லங்களில் வழமைக்கு திரும்பு வதற்கு தேவையான நடவ டிக்கைகளை யாழ் ஒருங்கி ணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா மேற்கொண்டார்.

குறித்த கடல் பாதை நேற்று முன் தினம் சேவை யில் ஈடுபட்டிருந்தவேளை யில் ஏற்பட்ட உடைவு கார ணமாக பயணிகள் அசௌ கரியங்களை எதிர்கொண்ட துடன், போக்குவரத்தும் தடைப்பட்டது.

இவ்விடயம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத் திற்கு பிரதேச மக்களினால் கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்நிலையில், சம்மந்தப் பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா பாதையை திருத்தம் செய்து மீண்டும் சேவையில் ஈடுபடுத் துவதற்கான ஆலோசனை களை வழங்கியதுடன், குறித்த அனர்த்தம் ஏற்பட்டமைக் கான காரணத்தினை ஆராய்ந்து விரிவான அறிக்கை சமர்ப் பிக்குமாறும் அதிகாரிகளி டம் கோரியிருந்தார்.

இந்நிலையில், சில மணித்தியாலங்களிலேயே திருத்தப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு போக்கு வரத்து வழமைக்கு திரும்பி யதாக பிரதேச மக்களினால் தெரிவிக்கப்பட்டது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -78

# நினைவில்... சிவரமணி என்றொரு கவி!

கணபதி சர்வானந்தா

எனக்கு உண்மைகள் தெரியவில்லை
பொய்களைக் கண்டுபிடிப்பதும்
இந்த இருட்டில்
இலகுவான காரியமில்லை...
தெருவில் அவலமும் பதற்றமுமாய்
நாய்கள் குலைக்கும் போது
பூட்டப்பட்ட கதவுகளை
மீண்டும் ஒருமுறை சரிபார்த்துவிட்டு
எல்லோரும் தூங்கப்போகும் நேரத்தில்
நான்
நாளைக்கு தோன்றுகின்ற சூரியன் பற்றி
எண்ண முடியாது.
இரவு எனக்கு முக்கியமானது
நேற்றுப் போல்
மீண்டும் ஒரு நண்பன் தொலைந்து போகக்கூடிய
இந்த இருட்டு
எனக்கு மிகவும் பெறுமதியானது.

– சிவரமணி.

பல புரட்சிகரமான சிந்தனைகளை எம் மத்தியில் விதைத்த அவர், தான் எழுதிய கவிதைகளுக்கூடாக இன்றும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

தாயகம் இணையத்தில் அவர் பற்றி அசோக் யோகன் கண்ணமுத்து எழுதிய எழுத்துகளில் இருந்து...

"ஈழத்தத் தமிழ் இலக்கியப் பரப்பில் தோன்றிய குறிப்பிடத்தக்க கவிஞராகவும் ஈழப் பெண் கவிஞர்களில் மிகவும் முக்கியமானவர் எனக் கருதப்படுபவருமாகிய சிவரமணியின் முப்பத்தி இரண்டாவது நினைவுநாளைக் கடந்து வந்திருக்கிறோம்.

"யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்" என எழுதிய சிவரமணி, போர்க்கால அழுத்தங்களால் தற்கொலை செய்துகொண்டார். 1991ஆம் ஆண்டு மே மாதம் 05ஆம் தேதியன்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனது வீட்டில் 23 வயது மட்டுமே நிரம்பிய சிவரமணி தற்கொலை செய்துகொள்வதற்கு முன், தான் எழுதிய அத்தனை கவிதைகளையும் தீயின் நாக்குகளுக்குத் தின்னக் கொடுத்துச் சாம்பலாக்கிவிட்டு, "எனது கைக்கெட்டியவரை எனது அடையாளங்கள் யாவற்றையும் அழித்துவிட்டேன்!" என்று ஒரு கடிதத்தையும் எழுதி வைத்திருந்தார். 23வயதேயான சிவரமணி அக்கால கட்டத்தில் எழுதிய கவிதைகள் அவரது ஆளுமையைப் பறைசாற்றின. தமிழின் மிகவும் முக்கியமான ஆளுமையாகப் பரிணமிக்கும் இயல்புகளைக் கொண்ட அவர் இன்றிருந்தால் மிகப் பெரும் கவி ஆளுமையாக இருந்திருப்பார். சிவரமணியின் கவிதைகளை மீள் வாசிப்புச் செய்வதும் அவரை நினைவுகூர்வதும் போரால் சிதைந்துபோன – பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு அவசியம். அவருடைய நம்பிக்கைகளும் நம்பிக்கையீனங்களும் எதிர்பார்ப்புகளும் ஆழமாகச் சிந்திக்கவும் உணரவும் வேண்டியவை.

யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்
எங்கள் குழந்தைகளை வளந்தவர்களாக்கி விடும்.
முகமற்ற மனித உடலும்
உயிர் நிறைந்த அவர்களின் சிரிப்பின் மீதாய்
உடைந்து விழும் மதிற் சுவர்களும் காரணமாய்
எங்களுடைய சிறுவர்கள் சிறுவர்களாயில்லாது
போயினர்.
நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து வெடித்த
ஒரு தனித்த துப்பாக்கிச் சன்னத்தின் ஓசை
எல்லாக் குழந்தைகளினதும் அர்த்தத்தை
இல்லாதொழித்தது.
எஞ்சிய சிறிய பகலிலோ
ஊமன்கொட்டையில் தேர் செய்வதையும்
கிளித்தட்டு மறிப்பதையும்
அவர்கள் மறந்து போயினர்.
அதன் பின்னர் படலையை
நேரத்துடன் சாத்திக்கொள்ளவும்
நாயின் வித்தியாசமான குரைப்பை
இனம் காணவும்
கேள்வி கேட்காதிருக்கவும்
கேட்ட கேள்விக்கு விடை இல்லாதபோது
மௌனமாயிருக்கவும்,
மந்தைகள் போல
எல்லாவற்றையும் பழகிக் கொண்டனர்.
தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவதும்
தடியையும் பொல்லையும் துப்பாக்கியாக்கி
எதிரியாய் நினைத்த நண்பனைக் கொல்வதும்
எமது சிறுவரின் விளையாட்டானது.
யுத்தகால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள் 'வளர்ந்தவர்கள்' ஆயினர்.

சிவரமணி, யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் பிறந்தவர். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி யிலும் வேம்படி மகளிர் கல்லூரியிலும் படித்தவர். சிவரமணியின் கவிதைகளையும்அவரது தோழியான கவிஞர் செல்வியின் கவிதைகளையும் சேர்த்து 'செல்வி சிவரமணி கவிதைகள்' என்ற பெயரில் சென்னை தாமரைச்செல்விப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

சுயாதீனமாக இயங்கிய பல பெண்கள் அமைப்புக்களுடன் சேர்ந்து நடைமுறைக்கு ஏற்பச் செயற்படத் தொடங்கிய சிவரமணி பெண்விடுதலை பற்றித் தீவிரமாகத் சிந்தித்தவர். அதனோடு மட்டும் நின்றுவிடாது ஒட்டு மொத்தமான சமூக விடுதலை பற்றியும், ஆரோக்கியமாகச் சிந்தித்து அதற்கான வழிவகைகளையும் தீர்க்கமாக முன்வைத்தார். 1985 ஆம் ஆண்டு தொடக்கம் அவரால் எழுதப்பட்ட கவிதைகளை உற்று நோக்கும் போது அவருடைய உண்மையான மன உணர்வுகளையும் அரசியல், சமூக, பொருளாதாரம் பற்றிய அவரது கருத்தும் ஆழ்ந்த நோக்கும் புலனாகின்றமையை நாம் அவதானிக்கலாம். – என சூரியகுமாரி பஞ்சநாதன் அவர்கள் "பதிவுகள்" என்ற இணையத்தில் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருக்கிறார். •

# இந்தவார ராசிபலன் 21.05.2023 - 27.05.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 07
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவிதியை

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

தொழிலில் புதிய வளர்ச்சியைக் காண்பீர்கள். பழைய கடன்கள் வசூலாகும். குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வீர்கள். பெற்றோரின் ஆதரவு மகிழ்ச்சியை அளிக்கும். உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வுக்கான பயிற்சியை மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு பிரச்னைகள் குறையும். விவசாயிகள் பொறுப்புடன் கடமைகளைச் செய்வார்கள். அரசியல் வாதிகளுக்கு எதிர்ப்புகள் குறையும்.கலைத்துறையினரின் திறமைகள் வெளிப்படும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

மற்றவர்களின் செயல்களில் தலையிடமாட்டீர்கள். புதிய முயற்சிகளிலும் வெற்றி பெறுவீர்கள். போட்டி, பந்தயங்களில் ஈடுபட வேண்டாம். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் சாதகமான சூழல் நிலவும். வியாபாரிகள் கூட்டாளிகளை அரவணைத்துச் செல்வார்கள். விவசாயிகள் புதிய குத்தகைகளைத் தேடிச் செல்வார்கள். அரசியல் வாதிகள் தொண்டர்களின் ஆதரவைப் பெறுவார்கள். கலைத்துறையினர் புதிய வாய்ப்புகளைப் பெறுவார்கள். பெண்கள் விவேகத்துடன் நடப்பார்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களை பெறுவார்கள்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

பழைய விஷயங்களைச் செயல்படுத்தத் தொடங்குவீர்கள். வீட்டிலும், வெளியிலும் புகழ் உயரும். நோய்கள் நீங்கும். பணவரவு உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலக வேலைகள் சுலபமாக முடிவடையும். வியாபாரிகள் புதிய முயற்சியை மேற்கொள்வார்கள். விவசாயிகள் புதிய விளைச்சலை எட்டுவார்கள். அரசியல் வாதிகள் மேலிடத்துடன் எச்சரிக்கையுடன் பழகுவார்கள். கலைத்துறையினர் புதிய நுட்பங்களைக் கற்பார்கள். பெண்மணிகள் தங்கள் கணவரிடம் நெருக்கம் காட்டுவார்கள்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

தொழிலில் இருந்த முட்டுக்கட்டைகள் விலகும். வழக்குகளிலிருந்து விடுதலை பெறுவீர்கள். மனக் குழப்பங்கள் தீரும். சுபகாரியங்கள் நடக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். வியாபாரிகள் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையுடன் இருப்பார்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் நன்றாக இருக்கும். அரசியல்வாதிகள் கவனமாக நடப்பார்கள். கலைத்துறையினர் முயற்சிகளில் வெற்றி பெறுவார்கள்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிடைக்கும். பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். உறவினர்களால் நன்மை கிடைக்கும். பயணங்களை மேற்கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் வேலைகளைக் குறித்த காலத்துக்குள் முடிப்பீர்கள். வியாபாரிகள் கூடுதல் வருவாயைக் காண்பீர்கள். விவசாயிகளுக்கு கடின உழைப்பால் அதிக லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் தொண்டர்களை அனுசரித்து நடப்பார்கள்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பழைய கடன்கள் தீரும். முகத்தில் பொலிவும் உடலில் உறுதியும் உண்டாகும். தொழிலை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களின் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். வியாபாரிகள் கடன் வாங்கியும் வியாபாரத்தைப் பெருக்குவார்கள். விவசாயிகள் புதிய குத்தகை எடுப்பார்கள். அரசியல்வாதிகள் தேவையற்ற சிந்தனைகளைக் குறைத்துகொள்வார்கள். கலைத்துறையினர் செயல்களில் வேகமும் ஆற்றலும் அதிகரிக்கும். பெண்கள் சேமிப்புகளைக் கூட்டுவார்கள். மாணவர்கள் வெற்றிக்காகத் திட்டமிட்டுவார்கள்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

முயற்சிகளைத் தள்ளிப் போடாமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். லட்சியத்தைவிட்டுக் கொடுக்க மாட்டீர்கள். குடும்பத்தில் குதூகலம் நிறையும். உத்தியோகஸ்தர்கள் அநாவசியப் பேச்சு பேச வேண்டாம். வியாபாரிகள் கவனத்துடன் இருப்பார்கள். விவசாயிகள் விளைச்சலில் உயர்வைக் காண்பார்கள். அரசி யல்வாதிகளுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.கலைத்துறையினர் புதிய ஒப்பந்தங்களைப் பெறுவார்கள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

எடுத்த காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உறவினர்கள் பாராமுகமாகவே இருப்பார்கள். பொருளாதார நிலையில் அபிவிருத்தி ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படுவார்கள். வியாபாரிகள் உழைப்புக்கேற்ற பலன் பெறுவார்கள். அரசியல்வாதிகள் கட்சிப் பணிகளை உடனுக்குடன் செய்து முடித்துவிடுவார்கள்.கலைத்துறையினர் வேறு பணிகளில் கவனம் செலுத்த வேண்டாம்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தொலைதூரத்தில் இருந்து செய்திகள் வந்து சேரும். பெற்றோரும் ஆதரவாக இருப்பார்கள். மனதில் உற்சாகம் கூடிவரும். உத்தியோகஸ்தர்கள் திட்டமிட்ட வேலைகளை வெற்றிக்கரமாக முடிப்பார்கள். வியாபாரிகளுக்கு கூட்டாளிகள் உதவி செய்வார்கள். விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைக்கும்.அரசியல்வாதிகள் தொண்டர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவார்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

எடுத்த காரியங்களை முடிப்பீர்கள். பயணங்களால் நன்மை ஏற்படும். பிரச்னைகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகஸ்தர்களின் சமயோஜித புத்தியை மேல திகாரிகள் பாராட்டுவார்கள். வியாபாரிகளுக்குத் திருப்பங்கள் ஏற்படும். விவசாயிகள் பூச்சிகொல்லிகளுக்குச் செலவு செய்வார்கள். அரசியல் வாதிகளுக்கு பாராட்டுகள் வந்து சேரும்.கலைத்துறையினர் கடமையை உணர்ந்து செயல்படுவார்கள்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். திட்டமிட்ட செயல்களை முன்கூட்டியே ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். பிறருக்கு உதவி செய்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும் உத்தியோகஸ்தர்களுக்கு வர வேண்டிய பணம் வந்து சேரும். வியாபாரிகள் வியாபாரத்தை விரிவுபடுத்துவார்கள். விவசாயிகள் பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்வார்கள். அரசியல்வாதிகளுக்கு புகழ் அதிகரிக்கும். கலைத்துறையினருக்குப் புதிய அங்கீகாரம் கிடைக்கும்.பெண்கள் கணவர் குடும்பத்தினரின் ஆதரவைக் காண்பார்கள்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

குடும்பத்தினரிடம் ஒற்றுமை மேம்படும். ஆன்மிகத்தில் ஈடுபடுவீர்கள். வருவாய் உயரும். நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வுகள் கிடைக்கும். வியாபாரிகள் செலவு விஷயங்களில் கவனமாக இருக்கவும். விவசாயிகள் கூடுதல் மகசூலைப் பெறுவார்கள். அரசியல்வாதிகள் எதிர்க்கட்சியினரின் திட்டங்களைப் புரிந்துகொள்வார்கள். கலைத்துறையினர் புதிய ஒப்பந்தத்தில் கவனமாக இருக்கவும். பெண்கள் பிறரிடம் சுமுகமாக இருப்பார்கள். மாணவர்கள் புதிய சாதனைகளைச் செய்வார்கள்.

# முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ‘முழுமையான விடுதலை’ எப்போது கிடைக்கும்?

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி 30 ஆண்டுகளாக சிறையில் இருந்த 7 பேரும் கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட் டனர்.

முதலில் பேரறிவாளன் விடுதலையைத் தொடர்ந்து சிறையிலிருந்த நளினி, முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

இதில் நளினி, ரவிச்சந்திரனை தவிர முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகிய 4 பேரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

சிறையிலிந்து விடுதலையான முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகிய நால்வர் காவல்துறையினர் பாதுகாப்புடன் திருச்சி சிறப்பு முகா முக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

6 மாதங்களுக்கு மேலாகியும் இவர்கள் 4 பேரும் திருச்சியில் சிறப்பு முகாமில் ஏன் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனக் கேள்வி எழுப்புகின்றனர் மனித உரிமை செயற்பாட்டாளர்கள்.



சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்த நளினி

**சிறப்பு முகாமில் வாழ்க்கை**

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டாலும் இவர்கள் வெளிநாட்டினர் என்பதால் தற்போது வரை திருச்சி மத்திய சிறையில் உள்ள சிறப்பு மூகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருச்சியில் இருக்கும் இந்தச் சிறப்பு முகாம் இலங்கை தமிழர்களுக்கான சிறப்பு முகாம் அல்ல. குற்றச்செயல்களில் கைது செய்யப்பட்டு, பிணையில் இருக்கும் வெளிநாட்டினரை தங்க வைக்க இந்தச் சிறப்பு மூகாம் பயன்படுத்தப்படுகிறது.

இங்கு இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி பிற நாட்டினரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்ட ஏழு பேர்

தற்போது முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகியோர் சொந்த நாட்டுக்கு செல்லவேண்டுமா அல்லது இந்தியாவிலே தங்கியிருக்க விருப்பமா என்பதைக் கேட்டு அவர்களைத் திருப்பிய னுப்ப அரசு முடிவெடுக்கும் என விடுதலைக்குப் பிறகு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டபோது திருச்சி மாவட்ட ஆட்சியர் தெரிவித்திருந்தார்.

ஆனால் தற்போதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் நால்வரும் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக பேசிய வழக்கறிஞரான புகழேந்தி, 31 ஆண்டுகள் சிறை தண்டனை முடிந்து வெளியே வந்த இந்த 4 பேரும் ஏன் இத்தனை நாட்களாக சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட வேண்டும் எனக் கேள்வி எழுப்பினார்.

“கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சாந்தன், முருகன் ஆகியோர் வேலூர் மத்திய சிறையிலிருந்தும், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகியோர் சென்னை புழல் சிறையிலிருந்தும் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனால் அங்கிருந்து திருச்சியிலுள்ள வெளிநாட்டினர் தங்க வைக்கப்படும் சிறப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு 6 மாதங்கள் ஆகியும் இன்னும் விடுதலை செய்யப்படாமல் சிறப்பு முகாமிலேயே தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர்.”

**விடுதலை ஏன் தாமதம்**

திருச்சி சிறப்பு முகாமில் உள்ள இந்த நால்வரும் ராஜிவ் காந்தி வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டிருந்தாலும் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்தவர்கள் என்பதால் அவர்களை மீண்டும் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவது தொடர்பாக சில நடைமுறைகள் உள்ளன.

குறிப்பாக இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதால் சொந்த நாட்டுக்கு செல்ல விருப்பமிருந்தால் இலங்கை அரசுடன் பேசி அனுமதி பெறவேண்டும். இந்தியாவிலேயே தங்க விரும்பினால் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்குரிய நடைமுறை செய்யவேண்டும்.

இதுமட்டுமின்றி வெளிநாட்டைச் சேர்ந்தவர்களைத் திருப்பியனுப்பும் விவகாரத்தில் உள்துறை அமைச்சகத்தின் அனுமதி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத் தால் முருகன் உள்ளிட்ட 4 பேரும் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக சிறப்பு மூகாமில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

முருகனின் மனைவியான நளினி, சிறப்பு முகாமிலிருந்து தனது கணவர் விடுதலை செய்யப்பட்ட பிறகு அவரை அழைத்துக்கொண்டு லண்டனில் வசிக்கும் மகளைக் காணத் திட்டமிட்டுள்ள நிலையில் 6 மாதங்களுக்கு மேலாகியும் தனது கணவரை விடுதலை செய்யாமல் வைத்திருப்பது குறித்து கவலை தெரிவித்தார்.



நீதிமன்ற உத்தரவின்படி சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட முருகன், இலங்கை நாட்டவர் என்பதால் முகாமுக்கு அழைத்துச் செல்லப்படும் முன்பாக தமது மனைவி நளினியை சந்தித்தார். (நாள்: நவம்பர் 12, 2022)

இது தொடர்பாக பேசிய நளினி, “30 ஆண்டுகள் சிறைவாசம் முடிந்து வெளியே வந்தாலும் என் கணவர் மற்றும் மகளுடன் சேர்ந்து வாழ முடியவில்லை. சிறப்பு முகாமில் உள்ள என் கணவரை அடிக்கடி சந்தித்துப் பேசி வருகிறேன்.

நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் நாம் எப்போது மகளுடன் இணைந்து ஒரே குடும்பமாக வாழப் போகிறோம் என்ற கேள்வியை மட்டுமே என்னிடம் கேட்கிறார். அவரை விரைவாக விடுதலை செய்ய அரசு உதவி செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது,” என்று கூறினார்.

**கேள்வி எழுப்பும் மனித உரிமை ஆர்வலர்கள்**

பல ஆண்டுகளாக சிறையில் இருந்தவர்களை சிறப்பு முகாமிலி ருந்து விடுதலை செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பளரான திருமுருகன் காந்தி தெரிவித்தார்.

“31 ஆண்டுகள் சிறைவாசம் முடிந்து வெளியே வந்த நபர்களை சாதாரண நபர்களைப் போலக் கருதி, அரசு நடைமுறைகளை தாமதம் செய்யக்கூடாது. நீண்ட நாட்களாக தாமதம் ஏற்படுவதைப் பார்க்கும்போது பின்னணியில் அரசியல் அழுத்தம் ஏதுமுள்ளதா என்ற கேள்வி எனக்கு எழுகிறது,” என்று அவர் தெரிவித்தார்.

ஏழு தமிழர் விடுதலை கூட்டியக்கத்தைச் சேர்ந்த வழக்கறிஞரும், மனித உரிமை ஆர்வலருமான முத்துகுமார் பேசும்போது, முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகியோரை சிறப்பு முகாமில் நீண்ட நாள் வைத்திருப்பது அவர்களுக்கு அளிக்கப்பட்ட விடுதலையின் பயனை கேள்விக்குள்ளாக்குவதாகத் தெரிவித்தார்.

“இந்தியாவிலேயே மிக நீண்ட நாட்களாக சிறையிலிருந்த கைதிகளில் ராஜிவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட இந்த 7 பேரும் அடங்கு வர்.

பெரிய அரசியல், சட்ட போராட்டங்களுக்குப் பிறகு இப்போதுதான் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் விடுதலைக்குப் பிறகு குடும்பத்துடன் கழிக்கவேண்டிய நாட்களை என்னவென்று தெரியாத ஏதோவொரு காரணத்திற்காக மீண்டும் சிறப்பு முகாமில் கழிக்கும் வகையில் காவல்துறை கண்காணிப்பில் தங்க வைக்கப்பட்டிருப்பது இந்த நால்வருக்கும் வழங்கப்பட்ட விடுதலைக்கு முரணானது,” என்று அவர் தெரிவித்தார்.



# ராஜபக்ஷக்களின் எதிர்கால அரசியல் வியூகங்கள்



வீரகத்தி தனபாலசிங்கம்

மூன்றரை வருடங்களுக்கு முன்னர் ராஜபக்சாக்கள் மீண்டும் பதவிக்கு வந்தபோது இலங்கையின் ஆட்சியதிகாரத்தில் இருந்து தங்களது குடும்பத்தை நீண்ட காலத்துக்கு அசைக்கமுடியாது என்று அவர்களுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. அவர்களின் அதிவிசுவாசிகள் குறைந்தது ஒரு இருபது வருடங்களுக்காவது தங்களது அரசியல் எசமான்கள் ஆட்சியில் இருப்பார்கள் என்று பேசினார்கள். தங்களில் யார்யார் அடுத்தடுத்து ஜனாதிபதியாக வருவது என்று ராஜபக்சாக்கள் ஒரு பட்டியல் போட்டு செயற்பட்டார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை பொறுத்தவரை மூத்த மகன் நாமல் ராஜபக்சவை அரியாசனம் ஏற்றுவதே அவரின் குறிக்கோளாக இருக்கிறது என்றபோதிலும், மகன் நாட்டின் உயர் பதவியை வகிப்பதற்கு உரிய அனுபவத்தைப் பெற்று தயாராகும் வரை தனது சகோதரர்களில் எவராவது ஒருவருக்கு அந்த வாய்ப்பை கொடுப்பதே அவர் தீட்டிய குடும்ப அரசியல் நிகழ்ச்சித் திட்டம். கோட்டாபய ராஜபக்சவுக்கு அடுத்து ஜனாதிபதியாக வருவதற்கு நம்பிக்கையைக் கொண்டிருந்தவர் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச.

ஆனால், ராஜபக்சாக்கள் குறுகிய காலத்திற்குள் தங்களது அரசியல் ஆதிக்கத்துக்கு ஆபத்து வரும் என்று கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டாரகள். தங்களுக்கு எதிராக சிங்கள மக்கள் கிளர்ந்தெழுந்ததை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. குறிப்பாக விடுதலை புலிகளை தோற்கடித்து உள்நாட்டுப்போரை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காக சிங்கள மக்கள் தங்களது குடும்பத்துக்கு என்றென்றைக்கும் கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்ற ஒரு எண்ணத்தை வளர்த்துக்கொண்ட ராஜபக்சாக்கள் ஆட்சியதிகாரம் மீது தங்களுக்கு ஒரு உரித்து இருப்பது போன்று நடந்து கொண்டார்கள்.



போர் வெற்றியை பயன்படுத்தி இடையறாது முன்னெடுத்து வந்த சிங்கள பௌத்த பெரும்பான்மை இனவாத அணிதிரட்டல் என்றென்றைக்கும் தங்களுக்கு கைகொடுக்கும் என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள். கடந்த வருடத்தைய 'அறகலய" மக்கள் கிளர்ச்சிக்கு தங்களது தவறான ஆட்சி முறையின் விளைவாக தோன்றிய - இலங்கை வரலாறு காணாத படுமோசமான பொருளாதார நெருக்கடியே காரணம் என்பதை இன்னமும் கூட ராஜபக்சாக்கள் ஒத்துக்கொண்டதாக இல்லை.

மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் வெளிநாட்டு சதி இருந்ததாக முன்னரும் அவர்கள் கூறியபோதிலும், அண்மைக் காலமாக அது குறித்து பேசுவதை கடுமையாக தீவிரப்படுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அதேவேளை எந்த தேர்தலையும் எந்த நேரத்தில் நடத்தினாலும் பொதுஜன பெரமுன வெற்றிபெறும். மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் என்றும் ராஜபக்சாக்களும் அவர்களின் பரிவாரங்களும் இடையறாது பேசிக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தங்களது கட்சியின் வேட்பாளராக பசில் ராஜபக்சவை நிறுத்துவதற்கான சாத்தியம் குறித்தும் அவரின் அதிவிசுவாசிகளான கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவாசம் போன்றவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள்.

பொதுஜன பெரமுன ஆரம்பிக்கப்பட்டு மிகவும் குறுகிய காலத்திற்குள் ஆட்சியைப் பிடிக்கக்கூடியதாக அதை கட்டியெழுப்பியவர் பசில் ராஜபக்ச என்றபோதிலும், இன்று ராஜபக்ச குடும்ப உறுப்பினர்களில் மக்களால் மிகவும் வெறுக்கப்படுபவராக அவரே விளங்குகிறார் எனலாம்.

இதுவரையில் கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்துவரும் பசில் ராஜபக்ச தலைவராக வருவதை அல்லது ஜனாதிபதி வேட்பாளராக அவரை நிறுத்தும் யோசனையை கட்சிக்குள் கணிசமான பிரிவினர் கடுமையாக எதிர்க்கிறார்கள். அவரின் தலைமையில் கட்சி தேர்தல்களில் படுதோல்வி அடையும் என்று அஞ்சும் அவர்கள் தங்களது எதிர்கால அரசியல் வாய்ப்புக்கள் குறித்து நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள். அதேவேளை மகிந்த ராஜபக்ச தொடர்ந்தும் தலைவராக இருந்தால் பொதுஜன பெரமுனவின் செல்வாக்கை மீளக்கட்டியெழுப்பமுடியும் என்ற அவர்களின் எதிர்பார்ப்பும் கூட நாட்டு மக்களின் உண்மையான மனநிலையை விளங்கிக்கொண்ட ஒன்றாக தெரிய வில்லை.

அதேவேளை, இரட்டைக் குடியுரிமையை கொண்ட பசில் ராஜபக்ச தனது அமெரிக்க குடியுரிமையை கைவிடுவது குறித்தோ அல்லது ஜனாதிபதி வேட்பாளராக வருவது குறித்தோ இதுவரையில் பகிரங்கமாக எதையும் கூறவில்லை. அவர் தொடர்பில் கட்சிக்குள் தோன்றியிருக்கும் முரண்பாடுகள் குறித்து மகிந்த ராஜபக்சவும் எதுவும் பேசுவதில்லை.



பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு மாற்றமும் கட்சியில் மேலும் பிளவுக்கு வழிவகுக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. பசில் ராஜபக்சவின் தலையீடுகள் காரணமாகவே ஏற்கெனவே பல முக்கிய அரசியல்வாதிகள் கட்சியில் இருந்து வெளியேறினார்கள். எது எவ்வாறிருந்தாலும் ராஜபக்ச சகோதரர்கள் தங்களுக்குள் அரசியல் ரீதியில் பிளவுபட்டுச் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது. அதேவேளை ஒரு ராஜபக்சவை தவிர வேறு எவரும் அந்த கட்சியின் தலைவராக வருவதும் கூட சாத்தியமில்லை.

மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு அதிகாரப் பதவிகளில் இருந்து இறங்கிய ராஜபக்சாக்கள் தங்கள் கட்சியின் செல்வாக்கை மீளக்கட்டியெழுப்புவதற்கு அண்மைய மாதங்களில் முன்னெடுத்த முயற்சிகள் பயனைத்தரவில்லை. இறுதியாக கொழும்பு கெம்பல் பூங்காவில் பொதுஜன பெரமுனவின் மேதினக் கூட்டத்தில் காலியாகக்கிடந்த கதிரை வரிசைகள் தங்களுக்கு மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய ஆதரவின் இலட்சணத்தை ராஜபக்சாக்களுக்கு தெளிவாக உணர்த்தியிருக்கவேண்டும்.

இதனிடையே மகிந்த ராஜபக்ச மீண்டும் பிரதமராக பதவியேற்பது குறித்த கதைகள் அடிக்கடி பேசப்படுகின்றன. கடந்த வாரமும் கூட அவ்வாறு ஒரு கதையை கேள்விப்படக்கூடியதாக இருந்தது. வழமை போன்றே சாகர காரியவாசம் அவ்வாறு பிரதமராக அவர் பதவியேற்கப்போவதில்லை என்று மறுப்பை வெளியிட்டார்.

தற்போதைக்கு பிரதமராகப் பதவியேற்கிறாரோ இல்லையோ அரசியலில் தொடர்ந்து இருக்கப்போவதாகவும் பொருத்தமான தருணம் வரும்போதே ஓய்வுபெறப் போவதாகவும் மகிந்த ராஜபக்ச எப்போதோ கூறிவிட்டார். ஜனாதிபதியாக தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முடிவுக்கு பிறகு அவர் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றிருக்க வேண்டும் என்று கடந்த வருடம் ராஜபக்ச குடும்பத்தின் மூத்தவர் சமால் ராஜபக்ச பாராளுமன்றத்தில் ஒரு தடவை கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜபக்சாக்களைப் பொறுத்தவரை அதிகாரத்தைக் கைவிட்டு இருப்பதென்பது அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியாத விடயம். அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டிருப்பதற்கு அவர்களுக்கு ஒரு அரசாங்கம் தேவைப்படலாம். ஆனால், மீண்டும் ஒரு ராஜபக்ச ஆட்சி நாட்டு மக்களுக்கு தேவையா? மீண்டும் அவர்களின் ஆட்சி என்ற யோசனை ஒரு கெடுதியான வேடிக்கை மாத்திரமல்ல கொடுமையான வேடிக்கையும் கூட என்று கடந்த வாரம் ஒரு அரசியல் அவதானி எழுதியிருந்தார்.

2015 ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பிறகு நான்கு வருடங்களில் மீண்டும் ஆட்சியதிகாரத்துக்கு ராஜபக்சாக்கள் வரக்கூடியதாக இருந்த நிலைவரத்துக்கும் மக்கள் கிளர்ச்சி அவர்களை அதிகாரத்தில் இருந்து தூக்கியெறிந்த பின்னரான தற்போதைய நிலைவரத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடு இருக்கிறது.



கடந்த காலத்திலும் இலங்கை அரசியல் சில உயர் வர்க்கக் குடும்பங்களின் ஆதிக்கத்தில் இருந்திருக்கிறது. ஆனால் மகிந்த ராஜபக்ச அதிகாரத்துக்கு வந்த பிறகு அவரது குடும்பம் அரசியலிலும் ஆட்சிமுறையிலும் அருவருக்கத்தக்க முறையில் மட்டுமீறிய ஆதிக்கத்தைச் செலுத்தியதைப் போன்று அந்த குடும்பங்கள் நடந்துகொண்டதாக கூற முடியாது. ராஜபக்சாக்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்ததைப் போன்று அந்த குடும்பங்களுக்கு எதிராக மக்கள் ஒரு போதும் செய்ததில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அரச நிருவாகத்தில் எதேச்சாதிகாரப் போக்கை படிப்படியாக அதிகரித்து வந்திருக்கிறது. ஆனால் ராஜபக்சாக்கள் ஜனாதிபதியாக வந்த பிறகுதான் அந்த எதேச்சாதிகாரம் உச்ச அளவுக்குப் போனது. தங்களிடம் அதிகாரங்களைக் குவித்து வைத்திருப்பது ஏதோ தங்கள் பிறப்புரிமை என்ற சிந்தனையில் அவர்கள் நடந்து கொண்டார்கள். ஆட்சிமுறை தொடர்பிலான முக்கிய தீர்மானங்களை சகோதரர்கள் மாத்திரமே ஒன்று கூடி எடுத்தார்கள். அதன் விளைவே நாட்டின் இன்றைய அவல நிலை.

ஊழல் மோசடி, அதிகார துஷ்பிரயோகம், சட்டத்தின் ஆட்சி சீர்குலைவு மற்றும் குடும்ப அரசியல் ஆதிக்கம் என்று ஆட்சிமுறையின் கெடுதியான போக்குகள் சகலவற்றையும் உருவகிப்பவர்களாக ராஜபக்சாக்கள் விளங்கினார்கள். இந்த நூற்றாண்டின் இதுவரையான இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் கூடுதல் வருடங்கள் அவர்களே அதிகாரத்தில் இருந்தார்கள்.

**மீண்டும் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்ற பேராசை ஒருபுறமிருக்க, கடந்த கால தவறுகளுக்காக தங்களை பொறுப்புக் கூறவைக்காத ஒரு அரசாங்கம் பதவிக்கு வருவதை உறுதிசெய்வதும் ராஜபக்சாக்களை பொறுத்தவரை முக்கியமானது.**

2005 தொடக்கம் இதுவரையான 18 வருடங்களில் இடையில் ஒரு நான்கு வருடங்களைத் தவிர மிகுதி காலப்பகுதியில் நாடு அவர்களின் ஆட்சியிலேயே இருந்தது. மகிந்த ராஜபக்ச 11 வருடங்கள் நிதியமைச்சராகவும் பதவி வகித்த அதேவேளை பசில் ராஜபக்ச பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்தது மாத்திரமல்ல, கோட்டாபய ஆட்சியில் இறுதியாக நிதியமைச்சராகவும் இருந்தார். அதனால் வங்குரோத்து நிலைக்கு நாட்டை இட்டுச்சென்ற தவறான பொருளாதார முகாமைத்துவத்தை பொறுத்தவரை ராஜபக்சாக்களுக்கே முக்கிய பொறுப்பு இருக்கிறது.

இவ்வாறாக சகல முனைகளிலும் நாட்டை படுமோசமான நிலைக்கு கொண்டுவந்து விட்டு தங்களுக்கு இருக்கும் பொறுப்புக்கூறல் கடப்பாட்டை அலட்சியம் செய்துகொண்டு மீண்டும் அதிகாரத்துக்கு வருவது குறித்து கனவு காணும் அவர்கள் இனிமேல் தங்களால் எதைச் சாதிக்கமுடியும் என்று நம்புகிறார்களோ தெரியவில்லை.

ராஜபக்சாக்களை பொறுத்தவரை, மீண்டும் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்ற பேராசை ஒரு புறமிருக்க, கடந்த கால தவறுகளுக்காக தங்களை பொறுப்புக் கூறவைக்கக்கூடிய ஒரு அரசாங்கம் பதவிக்கு வராமல் இருப்பதை உறுதிசெய்வதும் கூட முக்கியமானது. நாட்டு மக்களின் மனநிலையையும் பொருட்படுத்தாமல் அந்த குடும்பத்தின் எதிர்கால வியூகங்கள் அந்த நோக்கிலேயே அமையும் என்பதே விசித்திரமான உண்மை. ■

# இனப்பாகுபாடும் இன ஒதுக்கலுமே எழுபது ஆண்டுகளில் இனப்படுகொலையானது!

**பனங்காட்டான்**

முள்ளிவாய்க்கால் தமிழின பேரழிப்பின் பதினான்காவது ஆண்டு நினைவேந்தல் வழமையான உணர்வுபூர்வ நிகழ்வு என்பதற்கும் அப்பால் சர்வதேச மட்டத்தில் அரசியல் ரீதியாக சிறு அசைவையும் காட்டியுள்ளது.

2009ல் இரத்தத்தில் தோய்ந்த மண்ணை மக்கள் கண்ணீரால் நனைத்து, அந்த நிலத்தின்மீது அழுதும் உருண்டும் தொழுதும் தங்கள் வலியை தீர்த்துக் கொள்ள முனைந்ததை நினைவேந்தல் நாளில் காண முடிந்தது.

தாயகத்தின் நினைவேந்தல்களுக்கு நிகராக தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு இங்கே பதிவு செய்யப்பட வேண்டியது. கடந்த வருடம் காலிமுகத்திடலில் அரகலய போராட்டம் நடந்த வேளை இன மத பேதமின்றி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஸ்டிக்கப்பட்டது.

இம்முறை தலைநகரில் பொரளையிலுள்ள கனத்தை பொதுமயான சுற்றுவட்டத்துக்கு அருகாமையில் சிங்கள சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. காணாமலாக்கப்பட்ட மூத்த ஊடகவியலாளர் பிரகித் எக்னலியகொடவின் பாரியார் சந்தியா எக்னலியகொட மற்றும் சிங்கள இளையோர் பங்குபற்றிய இந்நிகழ்வில் மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை வா.சக்திவேலும் பங்கேற்றிருந்தார். இந்நிகழ்வை புலிகளை நினைவு கூரும் வைபவம் என்று கூறியவாறு குழப்புவதற்கு பௌத்த அமைப்புகளின் சிலர் முயன்றனர். அவர்களுக்கு இயைவாக பொலிசாரும் சேர்ந்து இதனை நிறுத்துவதற்கு கடுமையாக முற்பட்டனர். கலகம் அடக்கும் பொலிசாரும் குவிக்கப்பட்டனர்.

முள்ளிவாய்க்கால் தமிழின பேரழிவை அரசியல் மயமாக்காது மக்களின் படுகொலைக்கான ஒன்றாக ஏற்பாட்டாளர்கள் மேற்கொண்டதால் எண்ணியவாறு அதனை நடத்தி கஞ்சி வழங்கப்பட்டதுடன் நிறைவு செய்யப்பட்டது.

1983 யூலை 23ல் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் கொல்லப்பட்ட 13 இராணுவத்தினரின் சடலங்கள் இதே கனத்தை மயானத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்தே கொழும்பில் திட்டமிட்ட பாரிய இனஅழிப்பு மேற்கொள்ளப்பட்டது. இன்னும் இரண்டு மாதங்களில் அதன் நாற்பதாவது ஆண்டு நினைவேந்தலும் இடம்பெறவுள்ளது.

கடந்த வார முள்ளிவாய்க்கால் தமிழின பேரழிப்பினையொட்டி கனடிய அரச மட்டத்திலிருந்து வெளியான இரண்டு அறிக்கைகள் அனைத்துலக மட்டத்தில் முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளன.

கனடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ விடுத்த அறிக்கையில், "முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட்ட போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர் தங்கள் உயிரை இழந்துள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர். போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்க் கனடியர்களின் கதைகளை நான் அறிந்திருந்தேன். அதனால்தான் மே 18ஐ தமிழின படுகொலை நாளாக கடந்த ஆண்டு கனடிய நாடாளுமன்றம் பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது" என்று குறிப்பிட்டுள்ளதுடன் தமிழர்களின் உரிமைக்குக் குரல் கொடுப்பதை கனடா ஒருபோதும் நிறுத்தாது என்றும் பிரதமர் ரூடோ குறிப்பிட்டுள்ளார்.



கனடிய எதிர்க்கட்சித் தலைவரான கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லிவ்றே விடுத்துள்ள அறிக்கையில், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோதபாய ராஜபக்சவை கைது செய்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டுமென கோரியுள்ளார். இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்பதை இவரது அறிக்கையும் வலியுறுத்தியுள்ளதுடன், 2013ல் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய உச்சிமாநாட்டை கனடா புறக்கணித்ததையும் நினைவுபடுத்தியுள்ளார்.

> **இனப்பாகுபாடாகவும் இனஒதுக்கலாகவும் சிங்கள தேசம் தமிழர் மீது காட்டி வந்த பாரபட்சமும், நிலப்பறிப்பும் பின்னர் இனரீதியான தாக்குதலாகி, இறுதியில் சிங்கள அரச இயந்திரங்களால் தமிழினப் படுகொலையாக மாற்றம் பெற்றது. இதனை இனப்படுகொலை என அழுத்திக் கூறும் குரல்கள் முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் சர்வதேச அரங்கில் ஒலிக்க ஆரம்பித்துள்ளது.**

கனடிய உள்நாட்டு விவகாரங்களிலும் அரசியல் தீர்மானங்களிலும் எதிரும் புதிருமாக மோசமான வார்த்தைகளால் பொதுவெளியில் மோதிக் கொண்டிருக்கும் பிரதமர் ரூடோவும், எதிர்க்கட்சித் தலைவர் பொய்லிவ்றேயும் ஈழத்தமிழர் இனப்படுகொலை விடயத்தில் ஒரே கருத்துள்ளவர்களாக அறிக்கையிட்டு கனடிய ஈழத்தமிழரை ஆற்றுப்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது.

மே 18ம் திகதிக்கு முன்னரான ஒரு வாரத்தை தமிழின அழிப்பு கல்வி வாரமாக ஒன்ராறியோ மாகாண அரசின் உறுப்பினர் விஜய் தணிகாசலம் முன்மொழிந்த பிரேரணை சகல கட்சிகளினதும் ஏகோபித்த ஆதரவுடன் 2022ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டதையிட்டு கோபமடைந்துள்ள இலங்கை அரசும் அதன் ஆதரவாளர்களும், அதனை எதிர்த்து தொடர்ச்சியாக கனடிய நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் வேளையில், கனடியப் பிரதமரதும் எதிர்க்கட்சித் தலைவரதும் இனப்படுகொலையென சுட்டும் அறிக்கை இலங்கை அரசுக்கு மேலும் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது.



இதன் வெளிப்பாடாக கொழும்பிலுள்ள கனடியத் தூதுவரை அழைத்து இலங்கை அரசின் ஆட்சேபனையை வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளதுடன் கனடிய பிரதமரின் அறிக்கையையும் கண்டித்துள்ளார்.

கனடாவாழ் தமிழ் மக்கள் இனப்படுகொலை விடயத்தில் மேற்கொண்ட முன்முயற்சிகள் போன்று பூகோளப்பந்தின் சகல நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் ஊடாக இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை விஜய் தணிகாசலம் முன்வைத்திருப்பது அனைரதும் கவனத்துக்கு உட்படுத்தப்பட வேண்டியது.

வலி சுமக்கும் தமிழர் மனஉளைச்சலால் ஏற்படும் உணர்வு இடைக்கிடை தொய்வடைந்து போவதற்கான காரணம் என்ன என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். மாவீரர் நாள், மே 18 இன அழிப்பு நாள், யூலை மாத கறுப்பு வாரம், திலீபன் மற்றும் அன்னை பூபதியின் நினைவு நாள் போன்ற முக்கிய காலங்களில் மட்டும் உணர்வுபூர்வமாக இயங்கும் இவர்கள் மற்றைய நாட்களில் மறந்தவர்களாக இருப்பது ஏன்?

தமிழ் மக்களிடம் சரியான அரசியல் தலைமை இல்லாமையே இதற்கான காரணம். எடுத்ததற்கெல்லாம் தங்களுக்குள்ளேயே போட்டி அறிக்கை, கண்டன அறிக்கை, எதிர்ப்பு அறிக்கைகள் என்றே இவர்கள் காலத்தைப் போக்குகின்றனர். தமிழ் மக்களின் தனிப்பெரும் அரசியல் தலைமையான தமிழரசுக் கட்சி தொய்வு நோயாளி போலாகியுள்ளது. கட்சியின் உள்ளக கூட்டப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு சிங்கள பொலிசாரின் உதவியை நாடும் நிலைமை வெட்கக்கேடானது.

இந்த விண்ணாணத்தில் இலங்கை அரசுடன் தமிழ் கட்சிகள் ஒரே மேசையில் அமர்ந்து பேசப்போனால் எவ்வாறு பிரச்சனையைத் தீர்க்க முடியும்? இவர்களின் ஒற்றுமையின்மையும் பிளவுபாடும் சிங்களத் தலைமைகளுக்கு காலத்தை இழுத்தடிக்க வாய்ப்புக் கொடுக்கிறது. அத்துடன் பிரச்சனைகளுக்கான தீர்வை கானல்நீராக்கிக் கொண்டு போகிறது.

தமிழர் மீதான சிங்கள தேசத்தின் தாக்குதலை இனப்படுகொலை என அழைக்கலாமா என்ற கேள்வியும் தமிழ ரசுக் கட்சிக்குள் இருக்கிறது. இதற்கான விடைகாண எழுபது ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

1956 இலிருந்து தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை இனக்கலவரம் என்று அழைக்கவே இவர்கள் விரும்புகின்றனர். கலவரம் என்பது இரு பகுதியினரும் மோதிக் கொள்வது. காலாதிகாலமாக சிங்களவ ரால் தமிழர் தாக்கப்பட்டதை ஒப்புக்குக் கூட இனக்கலவரம் என்று கூறமுடியாது.

இனப்பாகுபாடு, இனஒதுக்கல், இனரீதியான தாக்குதல்கள் என ஆரம்பித்து உருவானவை 1958 மற்றும் 1983களில் இனஅழிப்பாக மாற்றம் பெற்றன. அரச இயந்திரங்கள் இதன் பின்னணியில் இயங்கியதால் இன அழிப்பு இலகுவாக நிறைவேற்றப்படுகிறது.

2009ல் முள்ளிவாய்க்காலில் தமிழரை அவர்களின் பூர்வீக மண்ணில் கொன்று குவித்ததையும் காணாமல் போகச் செய்ததையும் இனசங்காரம் என்றே கூற வேண்டும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் மே மாதம் 19ம் திகதியை போர்வீரர் தினமாக இலங்கை அரசே பிரகடனம் செய்து வெற்றிக் கொண்டாட்டம் நடத்துகிறது. வருடாவருடம் இந்நாளில் பல்லாயிரக் கணக்கான படையினருக்கு பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. இவ்வருடம் 3,750 படையினர் பதவி உயர்வு பெற்றுள்ளனர். இது, தமிழின சங்காரத்துக்காக சிங்கள தேசத்து படைகளுக்கு சிங்கள ஆட்சி பீடம் வழங்கும் அதி உயர் பரிசு.

தங்கள் பூர்வீக மண்ணில் தங்கள் பிறப்புரிமையைக் கேட்ட தமிழரை கொன்று குவித்து அதில் போர் வெற்றி கொண்டாடும் ஓர் அரசிடமிருந்து எந்த வகையில் அரசியல் தீர்வை எதிர்பார்க்க முடியும்? தமிழர் தேசம் சிந்தித்து செயற்பட வேண்டிய காலம் முள்ளிவாய்க்கால் மட்டுமல்ல. தமிழினப் படுகொலைகளை நித்தம் நித்தம் உரத்துக் கூறுவோம். ஒன்றாகக் கூறுவோம். இதனை நாங்கள் கூறவில்லையென்றால் வேறு யார் கூறுவது?

•

# செல்வச்சந்நிதி முதல் கதிர்காமம் வரை: உலகில் மிக நீண்ட ஆன்மீக பாதயாத்திரை !

## முருக பக்தை சண்முகப்பிரியாவின் நேரடி அனுபவம்!

அனந்த பாலகிட்ணர்



உலகில் மிக நீண்ட தூரத்தைக்கொண்ட ஓர் ஆன்மீக பாதயாத்திரையாக வடக்கே தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து இலங்கையின் தென் முனையிலுள்ள கதிர்காமம் கந்தன் நோக்கி ஆண்டு தோறும் இடம் பெறுகின்ற ஆன்மீக பாதயாத்திரை விளங்குகின்றது.

இப்பாதயாத்திரையின் முழுத்துாரமும் 815 கிலோ மீட்டர்களாகும். காலநிலை சுமுகமாக இருக்கும் பட்சத்தில் சுமார் ஐம்பது தினங்களில் பாதயாத்திரை கதிர்காமத்தை சென்றடைந்துவிடும் என்று கடந்த காலங்களில் பாதயாத்திரையை மேற்கொண்டோர் தெரிவிக்கின்றனர்.

தென்னிந்தியாவில் சபரி மலை ஐயப்பன் சந்நிதிக்கு ஆண்டுதோறும் பாதயாத்திரை மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் அந்த யாத்திரையின் முழுத்துாரமும் 45 கிலொ மீட்டர்களே யாகும்.

இம்மாதம் ஆறாம் திகதி (6) தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து அரோகரா கோஷத்துடன் கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை ஆரம்பமானது. தற்சமயம் யாழ் குடா பகுதியிலுள்ள பல ஆலயங்களையும் கடந்தவாறு இத்தல யாத்திரை கதிர்காமத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

யாழ் குடா நாட்டை கடந்ததும் பல்வேறு ஆலயங்களிலும் கதிர்காம பாத யாத்திரீகர்கள் தங்கிச்செல்வர். அச்சமயம் அவர்கள் சென்றடைகின்ற ஆலய சுற்றாடலில் உள்ள மக்கள் உரிய வகையில் அவர்களை உபசரித்து அனுப்பி வைப்பது வழக்கமாக இருந்து வருகின்றது.

இளநீர், மற்றும் குளிபானங்கள் என்பவற்றை வழங்குவதோடு பாதயாத்திரீகர்கள் தங்கிச்செல்கின்ற இடங்களை சென்றடையும் நேர காலத்தைப்பொறுத்து காலை, மதிய, இரவு நேர உணவு வகைகளும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

யாத்திரீகர்கள் இரவு வேளைகளில் தாம் சென்றடைகின்ற இடங்களில் காணப்படுகின்ற ஆலய மண்டபங்களிலேயே தங்கி இளைப்பாறி தமது யாத்திரையை காலை வேளையில் மீளவும் ஆரம்பிக்கின்றனர்.

உலகில் மிக நீண்ட ஆன்மீக பாதயத்திரையாக கருதப்படும் வடக்கிலிருந்து கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரையில் யாழ்ப்பாண மண்ணில் அவதரித்த அருளாளரான சிவயோக சுவாமிகளும் அவர் வாழ்ந்த காலத்தில் சென்றிருந்தார். அவரோடு சென்றவர்கள் பல அதிசயங்களுக்கு தாம் முகங்கொடுத்ததாகவும் குறிப்பிடுவதுண்டு. அடியார் கூட்டத்தோடு யோக சுவாமிகள் செல்வாராம். பின்னர் திடீரென ஓரிடத்தில் அவர் மறைந்து விடுவாராம். இதன் பின்னர் பல மைல்களுக்கப்பால் இருக்கின்ற இடத்தில் சிரித்தபடி “நான் உங்களை முந்தி வந்து விட்டேன்” என்று சிறுபிள்ளை போல சிரித்தபடி சித்தரான யோக சுவாமி கூறுவாராம்.

சிவயோக சுவாமிகளில் அதீத சீடர்களாக இரு ஆங்கிலேயர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் இலங்கையின் இறுதி ஆங்கிலேய மகாதேசாதிபதியாக இருந்த சோல்பரி பிரபுவின் புதல்வாரன ராம்ஸ் போத்தம் என்ப வர். இவர் சிவ யோக சுவாமிகளின் பக்தரான பின்னர் சாந்தா சுவாமி என்று யோக சுவாமிகளின் ஏனைய பக்தர்களால் அழைக்கப்பட்டார்.

மற்றயவர் ஓர் அமெரிக்கராவார். அவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் என்றழைக்கப்பட்டார். இந்த இருவரும் தாம் வாழ்ந்த காலப்பகுதியில ஆண்டு தோறும் செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமம் வரை பாத யாத்திரையை மேற்கொண்டிருந்தனர்.

ஓர் அருவி சிறிதாக ஊற்றெடுத்து பின்னர் ஓர் ஆறாக பிரவாகமெடுப்பது போலவே கதிர்காம பாதயாத்திரை செல்வச்சந்நிதியிலிருந்து ஆரம்பமாகி பின்னர் காடு, மேடு, குன்றுகள் கடற்கரையோரங்கள் என்பவற்றை கடந்து கதிர் காமத்தை சென்றடையும்.

கதிர்காம யாத்திரை ஆரம்பமான நேரம் முதல் கதிர்காமத்தை சென்றடையும் வரை யாத்திரீகர்கள் ஒருவரை ஒருவர் சுவாமி என்றே அழைப்பர். இதன் மூலம் ஒவ்வொருவரையும் ஒழுக்க சீலராகவே தாம் கருதுவதாக யாத்திரீகர்கள் கூறிக்கொள்கின்றனர்.

வயோதிபத்தை எட்டியோரும் பலவருட காலமாக கதிர்காம பாதயாத்திரையை மேற்கொண்டு வருகின்ற னர். கதிர்காம பாதயாத்திரை பற்றி நன்கறிந்து அதில் தாமும் பங்கு பற்ற வேண்டும் என்ற பெரு விருப்பத் தோடு யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகக்கொண்டிருந்த சண்முகப்பிரியா என்ற பெண்மணி மேற்கொண்டிருந்தார். இவர் பல காலம் லண்டனில் வாழ்ந்தவர்.

வடக்கு-கிழக்கு யுத்தம் முறுக்கேறியிருந்த காலப் பகுதியில் 2004ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமம் வரை சண்முகப்பிரியா அடியார் கூட்டத்தோடு கதிர்காம பாத யாத்திரையை மேற்கொண்டிருந்தார். பின்னர் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஆங்கிலத்தில் ஒரு சிறிய கைநுாலாகவும் அவர் வெளியிட்டிருந்தார்.

அவரோடு பற்றிக் ஹரிகன் என்ற அமெரிக்கரும் கதிர்காம பாதயாத்திரையில் கலந்து கொண்டிருந்தார். பற்றிக் ஹரிகன் பிறப்பில் ஒரு கிறிஸ்தவரான போதிலும் பின்னர் ஒரு அதீத முருக பக்தராக மாறியதோடு கதிர்காம பாத யாத்திரை பற்றி மேற்கத்தேய நாட்டினர் பலருக்கு அவர் எடுத்துக் கூறி தம்மோடு மேலை நாட்டினர் பலரையும் அவர் கதிர்காம பாதயாத்திரையில் இணைத்திருந்தார்.

கதிர்காம யாத்திரையை முன்னின்று வழிநடத்திச் செல்பவர் கையில் செல்வச்சந்நிதியில் பாதயாத்திரை ஆரம்பமாவதற்கு முன்னர் பூசை செய்து ஆராதிக்கப்பட்ட உயரமான வேலை எடுத்துச்செல்வார். இவரே ஏனையோருக்கு வழிகாட்டியாக பாதயாத்திரையை வழிநடத்திச்செல்வார்.

வடக்கு-கிழக்கு யுத்தம் எண்பதுகளின் ஆரம்ப பகுதியில் தீவிரமடைந்திருந்தபோது கதிர்காம பாதயாத்திரை திருகோணமலையிலிருந்தே ஆரம்பமாகியிருந்தது.

இதனையடுத்து இருபது ஆண்டுகளின் பின்னர் 2004ம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி மீளவும் செல்வச்சந்நிதி கதிர்காம பாத யாத்திரை ஆரம்பமாகியிருந்தது. அச்சமயம் யாழ்ப்பாண குடாநாடு ஆயுதப்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்தபோதிலும் முழு அளவில் யுத்தம் நிறைவுக்கு வரவில்லை. இதன் காரணமாக பல்வேறு தருணங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளிடமும் ஆயுதப்படைகளிடமும் அவர்களது கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களூடாக அனுமதி பெற்றே செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாக கூறியுள்ளார் சண்முகப்பிரியா.

காடுகளூடாக செல்லும் போது கிழக்கிலங்கையின் பல பகுதிகளில் சிறிதும் பெரிதுமாக பல முருகன் ஆலயங்கள் இருந்ததாக சண்முகப்பிரியா தெரிவிக்கின்றார்.

களைப்புற்ற பாத யாத்திரீகர்கள் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் ஆறுகள், குளங்களிலிருந்த நீரையே பாவித்ததாகவும் ஆனால் எவருமே எவ்வித உடல் உபாதைகளுக்குமுள்ளாகவில்லை என்பதையும் சண்முகப்பிரியா குறிப்பிட்டுள்ளதோடு ‘அவனருளாலே அனைத்தும் அவன் செயல்’ என்றே அவர் தெரிவித்துள்ளார்.



அனைத்துவிதமான நிலப்பிரதேசங்களை மட்டுமல்ல. அனைத்து இன மக்களையும் சந்தித்தவாறே நடந்து செல்கின்ற பாத யாத்திரீகர்களுக்கு அன்போடு உபசாரம் செய்யப்படுவதையும் அறிய முடிகின்றது.

கிழக்கிலங்கை ஊடாக கானகப்பகுதிகளைக்கடந்து செல்லும் போது தமிழர்களான பூர்வீக வேடுவ சமூகத்தைச்சேர்ந்த சிலரும் பாதயாத்திரையில் கலந்து கொள்வதோடு சிறு காயங்கள் மற்றும் உடல் உபாதைகளுக்குள்ளாகும் பாதயாத்திரீகர்களுக்கு வேடுவ சமூகத்தைச் சேர்ந்த இத்தமிழன்பர்கள் தாவரங்களிலிருந்து பெறப்படுகின்ற இயற்கை மருத்துவத்தை மேற்கொள்கின்றனர்.

கிழக்கிலங்கையில் பாத யாத்திரீகர்கள் நடந்து செல்லும் பகுதியில் பெரும்பாலானவை கடற்கரையோரங்களாகவும் அவற்றை அண்டிய கானகப்பிரதேசங்களாகவுமே இருக்கின்றன. எனவே இரவில் இளைப்பாறி துாங்க வேண்டிய நிலை ஏற்பட்டால் கடற்கரையோர மணல் பகுதிகளிலும் இல்லையேல் காடுகளுக்குள் காணப்படுகின்ற மரங்களற்ற வெளியான பகுதிகளில் மரக்கட்டைகளை அடுக்கி தீமூட்டி பாதயாத்திரீகர்கள் உறங்கி விடுகின்றனர். அப்போது தொலைவில் மயில்கள் அகவும் சத்தம், யானைகள் பிளிறும் சத்தம் உட்பட பலதரப்பட்ட பறவைகள் விலங்கினங்கள் எழுப்புகின்ற ஓசைகளை கேட்கக்கூடியதாக இருக்கும் என்பதையும் அறிய முடிகின்றது.

இரவில் ஓய்வெடுக்கும் வேளைகளில் நெடுங்கால பாதையாத்திரை அனுபவம் கொண்டவர்கள் தமது அனுபவங்கள் பற்றி கூறுவர். ஒருதடவை பாத யாத்திரீகர்களில் கானகத்தின் நடுவே இயற்கை உபாதையை கழிக்கச்சென்ற சமயம் அவரோடு வந்தவர்கள் நெடுந்துாரம் சென்றுவிட்டனர். அப்போது இயற்கை உபாதையை கழித்தவர் தன்னோடு வந்தவர்கள் நீண்ட துாரம் சென்றுவிட்டதையும் தாம் வழி தவறிவிட்டதையும் அறிந்து செய்வதறியாது நின்றுள்ளார். அச்சமயம் ஒரு சிறுவன் அவர் முன்னே தோன்றி அவருக்கு முன்பாக கதைத்தபடி ஓட்டமும் நடையுமாக சென்றுள்ளான். அப்போது அச்சிறுவனைத் தொடர்ந்து சென்ற போது தமக்கு முன்பாக சென்று கொண்டிருந்த அடியார் கூட்டத்தை கண்டு பின்னர் அவர்களோடு இணைந்து கொண்டதாக வழியைத்தவற விட்டவர் தெரிவித்திருந்தார். அச்சிறுவனின் வடிவில் முருகனே வந்திருந்ததாகவும் அவர் கூறியிருந்தார்.

கிழக்கிலங்கையில் உகந்தை முருகன் ஆலயத்துக்கு அருகே இரவில் பஜனைப்பாடல்களைப் பாடிக்கொண்’டிருந்தபோது தனக்கு ஏற்பட்ட ஓர் அபூர்வமான அனுபவத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றார் சண்முகப்பிரியா.

ஒரு அடியவர் திடீரென வானத்தை நோக்கி நீண்டதொரு ஒளிக்கதிர் நகரந்து செல்வதைக் காண்பித்துள்ளார். அந்த ஒளிக்கதிர் ஒரு மயில் இறகின் வடிவில் காணப்பட்டதை சண்முகப்பிரியா கண்டுள்ளார். அச்சமயம் அடியார் கூட்டத்தில் இருந்த ஒருவர் இந்த அற்புத நிகழ்வு மிக அரிதாகவே அடியார்களுக்கு தென்படுவதாகவும் அவ்வாறு நகர்ந்து சென்ற மயில் இறகின்

(18ஆம் பக்கம் பார்க்க)





# ஒட்டோக்களுக்கு கட்டண மீற்றர் கட்டாயமானதா?

யாழ்.மாவட்டத்தில் முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை அதிகளவில் உள்ள போதிலும் வாடகை முச்சக்கர வண்டியில் சேவை பெறும் பொதுமக்கள் அன்றாடம் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். அதிலும் குறிப்பாகக் கட்டண அறவீடு என்பது முச்சக்கர வண்டிச் சேவை பெறும் மக்களைப் பெரிதும் பாதிக்கின்றது. குறிப்பாக நியாயமற்ற கட்டண அறவீடு என்பது மக்களை மிகவும் பாதிக்கின்றது. எனவே இந்த முச்சக்கரவண்டி உரிமையாளர்களின் கட்டண அறவீடு முறையை கட்டுப்படுத்துவதற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரால் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து யாழ்.மாவட்டத்தில் கட்டண மீற்றர் பொருத்தாத முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபடமுடியாது என ஒரு அறிவித்தல் வெளியாகியுள்ளது.இந்த அறிவித்தல் தொடர்பில் முச்சக்கர வண்டி சாரதிகளின் நிலைப்பாடு என்ன?, ஏனைய தரப்பினர்கள் இதற்கு என்ன கூறுகின்றார்கள் என பார்ப்போம்.



## பல பிரச்னைகளுக்கு தீர்வு

**ஆ.சிவபாலசுந்தரன்**
*அரச அதிபர்*
*யாழ் மாவட்டம்*

யாழ்.மாவட்டத்தில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணமானி பொருத்தாக முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டாது.

யாழ்.மாவட்டத்தில் வாடகைக்குச் செலுத்தும் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டண மீற்றர் பொருத்தாமையினால் முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணங்கள் அதிகளவில் வசூலிக்கப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன.

அதுபோல வாடகை முச்சக்கர வண்டியைச் செலுத்துபவர்கள் மரியாதைக்குரிய ஆடைகளை அணிந்து நல்ல பழக்க வழக்கங்களைக் கொண்டிருக்கவேண்டும்.

அத்தோடு பதிவு செய்யப்படாத வாடகை முச்சக்கர வண்டிகளும் யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் தொல்லையாக இருப்பதாக மாநகர சபையினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே பதிவு செய்யப்படாத முச்சக்கர வண்டிகளை பதிவு செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல மிக முக்கியமாக 2017 ஆம் ஆண்டு முதலாம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்தின் ஒழுங்கு விதி அதாவது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிக்கு அமைய நாடு முழுவதிலும் கட்டணம் வசூலிப்பதற்கு முச்சக்கர வண்டிகளுக்கு உரிய கட்டண மீற்றர் பொருத்தப்பட வேண்டும்.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## வரவேற்கத்தக்க விடயம்

**வ.பார்த்தீபன்,**
*யாழ்.மாநகர சபை உறுப்பினர்*



அரசாங்க அதிபரின் முச்சக்கர வண்டிகளில் கட்டண மீற்றர் பொருத்தவேண்டும் என்ற அறிவித்தல் மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

ஏனெனில் கடந்த காலங்களில் இந்த அறிவிப்புகள் பல தடவைகள் வெளியிடப்பட்டன. ஆனால் அது நடைமுறைக்கு வருவதில் பல சிக்கல்கள் காணப்பட்டன.

இம்முறை எப்படியாவது அரசாங்க அதிபரின் முயற்சி வெற்றி அளிக்கவேண்டும். அதற்கு எங்கள் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், சாரதிகள் ஒத்துழைக்கவேண்டும் என்பது எமது கருத்தாகும்.

பல இடங்களில் பல சாரதிகள் நியாயமான கட்டணங்களை அற விடுகின்றநேரத்திலும் ஒரு சிலரின் கட்டண உயர்வு காரணமாக பொதுமக்கள் கடந்த காலத்தில் பல முறைப்பாடுகளைத் தெரிவித்திருக்கின்றனர். அந்த வகையில் மிகுந்த பொருளாதார நெருக்கடி நிலையில் மக்கள் வாடிக்கொண்டிருக்கும்வேளை இந்த முச்சக்கர வண்டி கட்டண விலையேற்றம் என்பது மக்களுடைய தலையில் மீண்டும் சுமையை ஏற்படுத்துவதாக அமையும்.

அதே நேரம் முச்சக்கர வண்டி சாரதிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தவேண்டுமாக இருந்தால் இரண்டு தரப்புகளையும் சமாளிக்கும் வகையில் இந்த கட்டண மீற்றர் பொருத்துவதன் மூலம் அதனை சராசரியாக பேண முடியும்.



## மீற்றர் கட்டணத்தால் எமக்குத்தான் பாதிப்பு

**வாமதேவா**
*முச்சக்கர வண்டிச் சாரதி,*
*யாழ்.நகர்*

முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்துவதனால் தற்போது பொருளாதார நெருக்கடி உள்ள நிலைமையில் கிடைக்கின்ற வருமானம் மிகவும் குறைவாகவே இருக்கும்.

குறிப்பாக ஆயிரம் ரூபா பெறுமிடத்தில் 500 ரூபா பெறவேண்டிய நிலை ஏற்படும்.

குறிப்பாக மீற்றர் கட்டணத்தில் கிடைக்கும் வருமானத்தினால் நாம் நமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாது. குறிப்பாக முச்சக்கரவண்டிகள் அன்றாடம் 500 தொடக்கம் 600 வரை வருமானம் பெறுபவர்களாக காணப்படுகின்றார்கள். அவ்வாறான நிலைமையில் இந்த மீற்றர் பொருத்துவதனால் அந்த இலாபம் கூட கிடைக்காத நிலை காணப்படப்போகின்றது.

இதனால் பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படும். ஆனால் அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் இந்த நடைமுறையை கொண்டு வந்தால் நாங்கள் வேறு தொழி லுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படும்.

குறிப்பாக நமது தொழில் பழைய மாதிரி அல்ல. இப்பொழுது அனைத்துப் பொருள் பண்டங்களும் விலையேற்றம் ஏற்பட்டுவிட்டது. குறிப்பாக ரயர், ஓயில், எரிபொருளின் விலைகள் அதிகரித்துள்ளன. எமக்கு மீற்றர் பொருத்துவதனால் இலாபம் கிடைக்காது. அதனால் இந்த நடவடிக்கை சற்று ஆராயப்ப வேண்டும்.

## பொதுமக்களுக்கும் பாதிப்பு



**ஜீவா,**
*முச்சக்கர வண்டி சாரதி, யாழ்.நகர்*

ஆரம்பத்தில் நாங்கள் இந்த கட்டண மீற்றர் பூட்டி சேவையில் ஈடுபட்டோம். அதனால் பொதுமக்கள் பலர் நட்டமடைந்ததன் காரணமாக நாங்கள் அந்த மீற்றர் நடைமுறையை நிறுத்தினோம். ஆனால் மீண்டும் அந்த மீற்றரை பொருத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஆரம்பக் கட்டணம் 120 ரூபா எனக் குறிப்பிடுகின்றார்கள். அதனால் எமக்கு இந்த இலாபமும் கிடைக்கப்போவதில்லை. இதனால் பொதுமக்களுக்கும் பாதிப்புதான். அதேபோல நாங்கள் வழமைபோலக் கட்டணம் பேசி செல்வது எமக்கு இலாபத்தை தரும்.

இந்த கட்டண மீற்றர்களால் பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படும். குறிப்பாக சிறுசிறு தூரங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்கு இந்த மீற்றர் கட்டணத்தினால் பாதிப்பு ஏற்படும்.



## இலாபமற்ற செயற்பாடு

**வெஸ்லி**
*அச்சுவேலி*

நான் ஒரு முச்சக்கர வண்டிச் சாரதி. ஓகஸ்ட் மாத முதலாம் திகதியிலிருந்து முச்சக்கர வண்டிக்கு மீற்றர் பூட்டுமாறு கூறுகின்றார்கள். மீற்றர் பூட்டுவது என்பது பெரிய விடயம் இல்லை. வழமையாக யாழ்.நகரை பொறுத்தவரை சிறு சிறு ஓட்டங்களால் நூறு, இருநூறு ரூபா கிடைக்கும். ஆனால் இந்த மீற்றர் பொருத்துவதால் எமக்கு அதிகளவில் இலாபம் கிடைக்காது. அத்தோடு தற்போதைய பொருளாதார நெருக்கடி நேரத்தில் இந்த மீற்றர் பொருத்தி நாங்கள் ஓட்டோ செலுத்துவதினால் எந்த வித இலாபமும் ஏற்படாது. குறிப்பாக கொழும்பு மற்றும் ஏனைய புறநகர் பகுதிகளில் இந்த நடவடிக்கை சாத்தியப்படும். ஆனால் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை இது சாத்தியமற்ற விடயம். குறிப்பாக பொதுமக்களுக்கு நன்மை ஏற்படும் எனக் கருதலாம் நன்மையும் ஏற்படலாம்-தீமையும் மேற்படலாம். அதாவது ஒரு மீற்றர் பூட்டிய முச்சக்கர வண்டியில் செல்வதனால் சில சந்தர்ப்பங்களில் பொதுமக்களுக்கு இலாபம் ஏற்படக்கூடும். ஆனால் அதே நேரம் பாதிப்புகளும் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

## எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலை



**த.விக்னேஸ்வரன்,**
*முச்சக்கர வண்டி சாரதி, யாழ்.நகர்*

கட்டண மீற்றர் பொருத்துவதனால் எமக்கு இலாபம் குறைவு. தற்போதைய விலைவாசியின் காரணத்தினால் மீற்றர் பொருத்தி ஓடுவதால் எமது குடும்பச் செலவை வழமைபோல கொண்டு போகக்கூடிய நிலை ஏற்படாது. தற்போது நாங்கள் எமது குடும்பத்தில் மூன்று நேர உணவுக்குக்கூட மிகவும் கஷ்டப்படும் நிலைமையில் உள்ளோம்.

நாம் உழைக்கும் பணம் அனைத்தும் பொருளாதார விலையேற்றத்தின் காரணமாக அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதில் கடும் இடர்பாடு ஏற்படுகின்றது. குறிப்பாக எரிபொருள், ஓயில் மற்றும் ரயர் விலை ஏற்றம் காரணமாக எமது முச்சக்கர வண்டிகளை அன்றா டம் ஓடி உழைத்து அதனை பராமரிப்பதிலும் பாரிய சிக்கல் காணப்படுகின்றது.



## ஹிந்தியில் ஜோ

நடிகை ஜோதிகா தமிழில் முதன்மை கதாபாத்திரங்களில் மட்டும் நடித்து வருகிறார். தற்போது புதிதாக ஒரு ஹிந்தி படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

விகாஸ் பால் இயக்கும் புதிய படத்தில் நடிகர் அஜய் தேவ்கான் தயாரித்து, நடிக்கிறார். இதில் நடிகர் மாதவன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இதில் நடிகை ஜோதிகா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கி றார். 25 ஆண்டுகளுக்கு பிறகு ஹிந்தி திரையுலகுக்கு திரும்பியுள்ளார் ஜோதிகா .




## போர் தொழில் முதல் பார்வை

அசோக்செல்வன், சரத்குமார் நடிக்கும் ‘போர் தொழில்’ படத்தின் முதல் தோற்றத்தை படக்குழு வெளியிட்டுள்ளது. இதில் சரத்குமார் ஒருபுறம் துப்பாக்கியுடனும், மறுபுறம் அசோக் செல்வன் புத்தகத்தை வைத்திருக்கும் வகையில் வடிவமைக்கப்படுள்ளது.

அசோக்செல்வன் நடிப்பில் கடந்த 2022ஆம் ஆண்டு வெளியான படம் ‘நித்தம் ஒரு வானம்’. இந்தப் படத்தைத் தொடர்ந்து அவரின் நடிப்பில் உருவாகியுள்ள படம் ‘போர் தொழில்’. விக்னேஷ் ராஜா இயக்கியுள்ள இப்படத்தில் சரத்குமார், நிகிலா விமல் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்தப் படம் ஜூன் 09ஆம் திகதி வெளியாகவுள்ளது.

## திகதி உறுதியே

பிரசாந்த் நீல் இயக்கத்தில் பிரபாஸ் நடிக்கும் ‘சலார்’ படத்தின் வெளியீட்டு திகதியை படக்குழு மீண்டும் உறுதி செய்துள்ளது. படத்தின் வெளியீடு தொடர்பான வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் படக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

‘கேஜிஎஃப் 2’ படத்துக்குப் பிறகு பிரசாந்த் நீல் இயக்கும் இந்தப் படத்தில் பிரபாஸ், ஸ்ருதிஹாசன், பிருத்விராஜ், ஜெகபதி பாபு உட்பட பலர் நடிக்கின்றனர். சுமார் 400 கோடி (இந்திய) ரூபாயில் உருவாகும் இந்தப் படம், செப். 28ஆம் திகதி தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாள மொழிகளில் வெளியாகிறது.







## மூன்று நாயகிகள்

நடிகர் ஜெயம் ரவி தற்போது சைரன், எம். ராஜேஷ் படங்களில் நடித்து வருகிறார். இதைதொடர்ந்து புதுமுக இயக்குநர் புவனேஷ் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். இந்த படம் சுமார் 100 கோடி (இந்திய) ரூபாய் செலவில் பிரமாண்டமாக உருவாகிறது.

இந்தப் படத்தில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக மூன்று நடிகைகள் நடிக்கவுள்ளனர். அதன்படி,கீர்த்தி ஷெட்டி மற்றும் மலையாள நடிகை கல்யாணி பிரியதர்ஷன் ஒப்பந்தம் ஆகியுள்ளனர். மூன்றாவது நடிகைக்கான தேடல் நடைபெற்று வருகிறது.




**திரைப்படம் - யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தயாரிப்பு - சந்திரா ஆர்ட்ஸ்**
**இயக்கம் - வெங்கட கிருஷ்ண ரோகந்த்**
**இசை - நிவாஸ் கே பிரசன்னா**
**நடிப்பு - விஜய் சேதுபதி, மேகா ஆகாஷ், மகிழ்திருமேனி**

இலங்கை தமிழர்களான எங்களைப் பற்றிய கதைகள் கொண்ட திரைப்படங்கள் தமிழ் திரையுலகில் மிகமிகக் குறைவு. இது நம்மைப் பற்றிய - நம்மவரைப் பற்றிய கதை தான். இலங்கையிலிருந்து அகதியான ஒருவரையும் அவரின் இலட்சியம் நோக்கிய பற்றியதும் தான் கதை.

இந்த உலகத்தில் நடக்கும் போர், அதனால் பாதிப்படையும் அப்பாவி மக்கள், போருக்குப் பிறகு தங்கள் வாழ்க்கையை இழக்கும் மக்கள், வாழ வழி தேடி அகதிகளாகப் பயணிக்கும் மக்கள் என போரால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவரின் வாழ்க்கைப் பயணத்தை மட்டும் படத்தில் சொல்லியிருக்கிறார் இயக்குநர் வெங்கட கிருஷ்ண ரோகந்த்.




லண்டனுக்கு சென்று இசைக் கல்லூரியில் படிக்க வேண்டும் என்ற ஆசையுடன் இலங்கையில் இருந்து சிறுவனாகக் கிளம்பும் புனிதன் (விஜய் சேதுபதி), இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார். சில வருடங்கள் தண்டனை அனுபவித்து ஓர் இளைஞனாக கள்ளத் தோணி ஏறி இந்தியாவுக்கு செல்கிறார் புனிதன். கேரளாவில் சில வருடங்கள் தங்கியிருந்து முறையான இசையைப் பயின்று லண்டனில் நடக்கும் ஓர் இசைப் போட்டியில் கலந்து கொள்ள முயற்சிக்கிறார். ஆனால், எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதற்கான ஆதாரத்தை அவரால் வழங்க முடியாமல் போகிறது. மற்றொருவரின் உதவியால் ‘கிருபாநதி’ என வேறொருவர் பெயரில் இலங்கை அகதி என்ற அடையாளத்தைப் பெற கொடைக்கானல் செல்கிறார். அங்கு அதற்கான சான்றிதழை அவர் பெற்றாரா இல்லையா என்பது தான் படத்தின் மீதிக் கதை.

படத்தின் மையக் கதை என்பது மேலே குறிப்பிட்டதுதான். ஆனால், இதில் கிளைக்கதைகளாக விஜய் சேதுபதிமீது மேகா ஆகாஷ் காதல், விஜய் சேதுபதியை பழி வாங்கத் துடிக்கும் காவல் துறை அதிகாரி மகிழ் திருமேனி என அவற்றிற்கும் இயக்குநர் முக்கியத்துவம் கொடுத் துள்ளதால் உணர்வுபூர்வமான கதை தடம் மாறி வர்த்தக மையமாக மாறிவிட்டது.

கிருபாநதி என்கிற புனிதன் கதாபாத்திரத்தில் விஜய் சேதுபதி. அவ்வப்போது இலங்கைத் தமிழ் பேசுகிறார். இதுதான் அவரை இலங்கைத் தமிழர் என கொஞ்சம் ஏற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால், அவருடைய தோற்றத் துக்குப் பொருத்தமில்லாத ஒரு தலைமுடி எதற்கு என்று தெரிய வில்லை. இசைக் கலைஞர் என்று தெரிய வேண்டுமென்றால் நீளமான முடி இருக்க வேண்டுமா என்ன ?

தன் கதாபாத்திரத்தில் எப் போதுமே மிகவும் ஈடுபாட்டோடு நடிக்கும் விஜய் சேதுபதியை இந்தப் படத்தில் அப்படிப் பார்க்க முடிய வில்லை. ஏதோ கடமைக்கு நடித்துக் கொடுத்தது போல நடித்திருக்கிறார். இருப்பினும் உச்சக் காட்சியில் விஜய் சேதுபதி பேசும் வசனம் உருக்கம்.

விஜய் சேதுபதியுடன் மோதலில் ஆரம்பமாகும் சந்திப்பு மேகா ஆகாஷுக்கு பின்னர் காதலாக மாறிவிடுகிறது. காதல் காட்சிகள் இல்லை என்றாலும் காதல் ஜோடி பொருத்தமாக இல்லையே. காவல் துறை அதிகாரியாக மகிழ் திருமேனி, இலங்கை அகதியாக கனிகா, பங்குதந்தையாக மறைந்த நடிகர் விவேக் மற்ற கதாபாத்திரங்களில் கொஞ்சம் கவனிக்க வைக்கிறார்கள்.

ஒரு சில உணர்வுபூர்வமான காட்சிகளில் பின்னணி இசையில் கூடுதல் அழுத்தம் சேர்க்கிறார் நிவாஸ் கே. பிரசன்னா. இசைக் கலைஞர் பற்றிய படம் என்பதால் பாடல்கள் சிலவற்றை சிறப்பாகக் கொடுத்திருக்கலாம்.

ஓர் உணர்ச்சிபூர்வமான கதை, ஆங்காங்கே உணர்ச்சிகளாகவும் மீதி காட்சிகளில் வேறு விதமாகவும் என தடம் மாறிய திரைக்கதையால் படத்தில் ஒன்ற முடியவில்லை. முறைகேடு செய்து முன்னேறத் துடிக்கும் நாயகன் எப்படி ரசிகர்களின் மனதில் இடம் பிடிப்பார் என்ற கேள்வியும் வருகிறது



## மீண்டும் வரும் தருண்

தமிழில் ‘புன்னகை தேசம்’, ‘எனக்கு 20 உனக்கு 18’ படங்களின் மூலம் பிரபலமான நடிகர் தருண் நீண்ட இடைவெளிக்குப் பிறகு தற்போது ஒரு வெப் சீரிஸில் நடித்து வருகிறார்.

மணிரத்னத்தின் ‘அஞ்சலி’ படத்தின் குழந்தை நட்சத்திரமாக தமிழில் அறிமுகமானவர் தருண். அதன் பிறகு ‘காதல் சுகமானது’, ‘புன்னகை தேசம்’, த்ரிஷ ாவுடன் ‘எனக்கு 20 உனக்கு 18’ ஆகிய படங்கள் மூலம் பிரபலமானவர். எனினும், சில காலம் திரையுலகை விட்டு ஒதுங்கியிருந்தார்.

இந்த நிலையில், இணைய தொடர் ஒன்றின் மூலம் அவர் திரையுலகுக்கு திரும்புகிறார். இதனை அவரது தாயாரும் நடிகையுமான ரோஜா ராஜாமணி பேட்டி ஒன்றில் உறுதி செய்துள்ளார்.



# குட்டி மலிங்க

நடப்பு ஐ. பி. எல். தொடரில் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சென்னை அணியின் செல்லப் பிள்ளையாகவே மாற்றியிருக்கிறார் மதிஷ பத்திரண.

டோனி உள்பட பல முன்னணி வீரர்களும் ரசிகர்களும் பத்திரணவைப் பாராட்டி வருகின்றனர். பத்திரணவுக்கு மலிங்கவின் பந்துவீச்சு பாணி இருப்பதால் எல்லோரும் 'குட்டி மலிங்க' என்று அழைக்கின்றனர்.

இம்முறை பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் சென்னை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி யைத் தழுவி இருந்தது. கடைசி மூன்று பந்தை அடித்து பஞ்சாப் அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்த சிக்கந்தர் ராசா அன்றைய ஆட்டத்தில் பத்திரணவை எதிர்கொண்ட அனுபவம் குறித்துப் பகிர்ந்திருக்கிறார்.

அதில்,"பத்திரண ஒரு தரமான திறமைசாலி. மலிங்கவை எதிர்கொள்வது என்பது கடினமான ஒன்றுதான். ஆனால் அன்று பத்திரணவை எதிர்கொள்வது அதைவிட சற்று கடினமாக இருந்தது. ஏனென்றால் மலிங்கவின் கை பக்கவாட்டிலிருந்து வரும். பத்திரணவின் கை இன்னும் கீழ் திசையில் இருந்து வருகிறது. பத்திரண மிகவும் தந்திரமாக விளையாடுகிறார்.

சென்னைக்கு எதிரான அன்றைய ஆட்டத்தில் 145 கி.மீ வேகத்தில் பந்தை வீசியிருந்தார். அவர் வீசும் பந்தை எதிர்கொண்டு விளையாடுவதே மிக கடினமாக இருந்தது. ஆனால், கடவுளின் புண்ணியத்தால் என்னால் அந்தக் கடைசி மூன்று பந்தை அடிக்க முடிந்தது" என்று கூறியிருக்கிறார்.

# ஒரு ரூபாய்கூட கொடுக்கக்கூடாது!

இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் மும்பை இந்தியன்ஸ் அணியின் வீரர் ஆர்ச்சரை கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட காயத்திலிருந்து முழுமையாக குணமடையாத ஜோப்ரா ஆர்ச்சரை இந்த ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணி ஏலத்தில் எடுத்து 5 போட்டிகளில் விளையாட வைத்திருந்தது.

ஆனால் மீண்டும் காயம் ஏற்பட்டதால் மருத்துவரை அணுகுவதற்காக பெல்ஜியம் சென்று பின்பு மீண்டும் விளையாடி தற்போது இங்கிலாந்துக்குத் திரும்பிவிட்டார்.

இந்நிலையில் இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் ஜோப்ரா ஆர்ச்சரை கடுமையாக விமர்சித்திருக்கிறார். ஜோப்ரா ஆர்ச்சர் குறித்து பேசிய கவாஸ்கர், "ஆர்ச்சர் காயம் அடைந்திருக்கிறார் என்பது தெரிந்தே மும்பை அணி அவரை வாங்கியது. அவரை மிகப்பெரிய தொகை கொடுத்து வாங்கிய அணிக்கு அவர் என்ன கொடுத்தார். அவர் உடல் தகுதியுடன் இல்லையென்றால் அதை அணியிடம் தெரிவித்திருக்க வேண்டும். உடல் தகுதி இல்லாமல் சம்பளத்தை பெற்றுக் கொண்டு, அவரின் நாட்டுக்கு செல்கிறேன் என்று சென்றுவிட்டார்.

அவர் கடைசி வரை தனது ஐ. பி. எல். அணிக்காக இருந்திருக்க வேண்டும். ஆனால், அதைச் செய்யவில்லை. இதுபோன்ற ஒரு வீரருக்கு ஒரு ரூபாய் சம்பளம்கூட கொடுக்கக்கூடாது. ஆர்ச்சர் அவரின் சம்பளத்தில் பாதியை தொண்டு நிறுவனத்துக்குக் கொடுக்க வேண்டும். ஒரு வீரர் தன் அணி பிளே ஓவ் சுற்றுக்கு செல்கிறதா இல்லையா என்று தெரியும் வரை அணியில் இருக்க வேண்டும். ஒருவேளை பிளே ஓவ் சுற்றுக்கு செல்லவில்லை என்றால் ஒரு வாரம் முன்னதாக தாராளமாக நாட்டிற்கு போகட்டும்" என்று கூறியிருக்கிறார்.





# யாரும் எதிர்பாராத வீரர்!

ஐ. பி. எல். கிரிக்கெட் 2008ஈஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றது. எத்தனையோ வீரர்கள் வருகிறார்கள் இருந்த இடம் தெரியாமல் போய் விடுகிறார்கள், சுப்பர் ஸ்ரார்கள் மட்டும் வணிக காரணங்களுக்காக தொடர்ந்து இருந்து வருகின்றனர். ஐ. பி. எல். தொடரில் முதல் சதம் எடுத்த இந்திய வீரர் மனீஷ் பாண்டே பெயருக்கு இன்னும் ஆடி வருகின்றார். பால் வல்ஹாட்டி என்ன ஆனார் என்று தெரியவில்லை, அஸ்னோட்கர், பழனி அமர்நாத், 42 வயதில் வந்து கலக்கிய சுழல் வீரர் என்று எத்தனையோ விளிம்பு நிலை கிரிக்கெட் வீரர்கள் வந்தார்கள் சென்றார்கள்.

இந்நிலையில், ஐ. பி. எல். தொடரில் இது வரையிலுமேகூட அதிக ஸ்ட்ரைக் ரேட் வைத்திருப்பவர், அதாவது கிரிக்இன்போ புள்ளி விவரங்களின்படி குறைந்தது 500 பந்துகளையாவது ஆடியவர்கள் என்ற வகையில் அதிக ஸ்ட்ரைக் ரேட் வைத்திருக்கும் வீரர்கள் பட்டியல் நமக்கு ஆச்சரியமளிப்பதாக இருக்கும்.

கிறிஸ் கெயில்தான் ஐ. பி. எல். வகை கிரிக்கெட்டின் ஆளுமை வீரர். சுற்றிச் சுற்றி விளாசி சாத்தியிருக்கின்றார். இவரிடம் 'வாங்காத' பந்துவீச்சாளர் ஏறக்குறைய இல்லை என்றே கூறி விடலாம். அஸ்வின் இவரை அதிக முறை வீழ்த்தியிருக்கின்றார் என்று கூற முடியும். கிறிஸ் கெய்லின் ஐ. பி. எல் ஸ்ட்ரைக் ரேட் 148.96 என்று இருக்க அவர் ஸ்ட்ரைக் ரேட் பட்டியலில் 9ஆம் இடத்தில் இருக்கிறார்.

இவருக்கு மேலே இங்கிலாந்தின் அதிரடி மன்னன், ராஜஸ்தான் றோயல்ஸ் தொடக்க வீரர் ஜோஸ் பட்லர் 148.59 என்ற ஸ்ட்ரைக் ரேட்டை வைத்துள்ளார். இவருக்கும் மேலே இப்போதைய ஐ. பி. எல் நட்சத்திர நாயகன் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 149.20 என்ற ஸ்ட்ரைக் ரேட்டை வைத்துள்ளார்.

ஆனால் முதல் ஸ்ட்ரைக் ரேட்டை வைத்திருப்பவர் யார் தெரியுமா? மேற்கிந்தியத் தீவுகளின், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி வீரர் அந்த்ரே ரஸல் என்றால் நம்ப முடிகிறதா? ரஸலின் ஸ்ட்ரைக் ரேட் 174.67. இவர்தான் முதல்நிலை. இதுவரை ஐ. பி. எல் தொடரில் 1291 பந்துகளைச் சந்தித்து 2,255 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இவருக்கு அடுத்த இடத்திலும் நாம் எதிர்பார்க்காத ஒரு வீரர்தான் உள்ளார், இவரும் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்தவர்தான், கொல்கத்தா அணிக்காக ஒரு தொடரில் தொடக்க வீரராக இறங்கி அனைத்து பந்துவீச்சாளர்களையும் சாத்தி எடுத்த சுனில் நரைன்தான் அது. சுனில் நரைனின் ஐ. பி. எல் துடுப்பாட்ட ஸ்ட்ரைக் ரேட் 160.03.

இவருக்கு அடுத்த இடத்தில் 157.42 ஸ்ட்ரைக் ரேட் கிளென் மக்ஸ்வெல், நிகோலஸ் பூரண் 156.16 ஸ்ட்ரைக் ரேட்டுடன் அடுத்த இடத்திலும் வீரேந்திர சேவாக் 155.14 என்ற ஸ்ட்ரைக் ரேட்டில் ஓட்டங்களை ஐபிஎல் தொடர்களில் எடுத்துள்ளார்.

# இலங்கை நலனுக்காக உலகளாவிய தமிழர் அமைப்பு

## மாகாணசபை தேர்தலை நடத்துமாறும் வலியுறுத்து!!

புலம்பெயர் மடல்

“இந்த ஆண்டு (2023) இறுதிக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு உலகின் எந்தப் பகுதியிலும் வாழும் அனைத்துத் தமிழர்களும் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும். முக்கிய விடயங்களைத் தொகுத்து, இந்த முக்கியமான பிரச்சாரத்திற்கு ஆதரவளிக்க புலம்பெயர் மக்களை அழைக்க விரும்புகிறோம்.”

இவ்வாறு இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களுக்கான அரசியல் உரையாடல், ஒற்றுமை, ஸ்திரத்தன்மை மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக உலகளாவிய நலன் விரும்பிகளால் புதிதாக உருவாக்கப் பட்ட அமைப்பின் செய்திக்குறிப்பு தெரிவிகின்றது.

இந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான அவுஸ்திரேலியாவில் வதியும் திரு. இராஜரட்ணம் சிவநாதன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

புலம்பெயர் தமிழர்களில் பெரும்பாலானோர் இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தலையிட ஆர்வம் காட்டவில்லை என நாங்கள் நம்புகிறோம். அவர்கள் தங்கள் குடும்பங்களின் நல்வாழ்வு மற்றும் அவர்களின் செழிப்பு, குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் உண்மையான அக்கறை கொண்டுள்ளனர்.

ஏற்கனவே புலம்பெயர் சமூகம் தனிநபர்களாகவும் சிறு சமூக அமைப்புகளாகவும் பல வழிகளில் பங்களித்து வருகின்றது. புலம்பெயர் நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவர்களின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்து வருகிறது.

இருப்பினும், நிரந்தரமான மற்றும் நிலையான பொருளாதார முதலீட்டுத் திட்டங்களான சிறு தொழில் தொடங்குதல், தொடர்ச்சியான வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் புதுமையான கல்வி நிறுவனங்கள் ஆகியவை குறைவாகவே உள்ளன.

விடுமுறை இல்லங்களை கட்டுவதற்கான வாய்ப்புகள் மற்றும் அவர்களின் ஓய்வு காலத்தில் அதிக நேரத்தை செலவிடுவதற்கான ஊக்கத்தொகைகள் குறைவு.

ஒரு சில பெரிய முதலீட்டாளர்கள் சில பொருளாதார நடவடிக்கைகளிலும் தொண்டு பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் பெரும்பாலான புலம்பெயர்ந்தோர் 1980 மற்றும் 1990 களில் இலங்கையை விட்டு வெளியேறி தற்போது ஓய்வு பெற்றுள்ளனர். அல்லது ஓய்வு பெற உள்ளனர். அவர்கள் நிரந்தரமாக இலங்கைக்கு திரும்ப



வாய்ப்பில்லை ஆனால் அதிக நேரத்தை அங்கேயே செலவிட விரும்புகிறார்கள்.

இந்த மக்கள் பெரிய முதலீட்டாளர்கள் அல்ல, ஆனால் அவர்கள் ஒரு சிறிய முதலீட்டைக் கொண்டு வர முடியும். அவற்றில் பல ஆயிரம் உள்ளன. மேலும், அவர்களில் பெரும்பாலோர் தொழில் வல்லுநர்கள் அல்லது வெற்றிகரமான தொழில்முனைவோர். எனவே, அவர்கள் வரும்போது, பங்களிக்கத் தேவையான திறன்களை அவர்களுடன் கொண்டு வருகிறார்கள்.

தற்போதைய போக்கை மாற்றியமைக்க, புலம்பெயர் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்ற உணர்வு இருக்க வேண்டும். இலங்கையும் ”தங்களுடைய சொந்த நிலம்” என்று அவர்கள் உணர விரும்புகிறார்கள். அதே சமயம், அவர்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்து, நியாயமான வருமானத்தை எதிர்பார்க்கலாம்.

எண்ணங்களும் அணுகுமுறையும் மாற வேண்டும். கடந்த பதினான்கு ஆண்டுகளில் தமிழர்கள் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் சமூகத்தை முன்னோக்கி கொண்டு செல்லவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தற்போதைய அரசியல் யதார்த்தத்தின் கீழ், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகவும் முறையாகவும் அமுல்படுத்துவதன் மூலம் செயற்படும் மாகாண சபையினால் மட்டுமே இதனை அடைய முடியும் என பெரும்பாலான புலம்பெயர் தமிழர்கள் கருதுகின்றனர்.

2023 மே 15 ஆம் திகதி ஜனாதிபதியிடம், தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், வடக்கு மற்றும் கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை ஒரு திட்டவட்டமான கால எல்லைக்குள் நடத்துவதற்கும் உறுதியான அர்ப்பணிப்பை வழங்குமாறு ஏற்கனவே வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

மாகாண சபைத் தேர்தல் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் முதலீடுகள் மற்றும் ஈடுபாடுகளை ஈர்ப்பதற்காக ஒன்றிணைந்து செயல்படுவது பற்றிய விவரங்களைப் பற்றி விவாதிக்க இலங்கை நலனுக்காக உலகளாவிய தமிழர் அமைப்பு ( WWTS ) இலங்கைக்கு விஜயம் செய்ய ஆர்வமாக உள்ளது.

---




## வியுக்தியார் பதில்கள்

**கே. பாலச்சந்திரன் அரியாலை, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** ‘இலங்கை தமிழரசு கட்சிக்கு யார் தலைமை ஏற்றாலும், நானும் சிறிதரனும் ஒன்றாகவே செயல்படுவோம். எம்மை யாராலும் பிரிக்க முடியாது” என்று இலங்கை தமிழரசு கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளாரே. இதனை நீங்கள் நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** அவர் அப்படிச் சொல்லும்போது சிறிதரனும் பக்கத்தில் தானே இருந்தார். அவர் மறுக்காத போது நாம் நம்பித்தானே ஆகவேண்டும். ஆனால் இதிலிருந்து ஒரு விடயம் மட்டும் நிச்சயமாக தெரிகின்றது. தமிழரசுத் தலைவராக வேறு யாரோதான் வரப்போகின்றார்கள். அதனால்தானோ தெரியவில்லை, இவர்கள் இருவரும் இப்போது ஒன்றிணைகின்றனர். ஒன்றிணைவதில் தான் அவர்களுக்கு அதற்கு முன்னரும் ஒன்றிணைந்த அனுபவம் இருக்கின்றதுதானே?

---

**அன்ரன் ரமேஸ், எமில்நகர், மன்னார்.**

**கேள்வி:** ஜனாதிபதிக்கும் தமிழ் எம்.பி.க்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை பல்வேறு விடயங்கள் குறித்து பேசப்பட்டபோதிலும் எதுவித தீர்க்கமான முடிவும் இன்றி முடிவடைந்திருக்கின்றதாமே. இந்த லட்சணத்தில் ஜனாதிபதியோ இந்த ஆண்டு இறுதிக்குள் தீர்வுகாணப்பட்டுவிடும் என்று வேறு நம்பிக்கை தருகிறாரே. ஏதாவது நடக்கும் என்று நீங்களாவது நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** இப்படித்தான் நல்லாட்சி அரசின் காலத்தில் சம்பந்தன் ஐயாவும் பொங்கலுக்குள் தீர்வு, தீபாவளிக்குள் தீர்வு என்று சொல்லிக்கொண்டிருந்தார். இவையெல்லாம் மக்களுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுப்பதற்காகவே சொல்லப்படுபவை என்பது நமக்குத் தெரிந்ததுதானே. ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் பிறக்கின்றபோது தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்வது போலத்தான் இது. அது சரி ஜனாதிபதி - தமிழ் எம்.பி.க்களுடனான பேச்சில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை என்று சொல்கிறீர்களே, அவர்கள்தான் அடுத்து ஜூன் மாதம் மீண்டும் கூடி பேசுவதென்று ‘தீர்க்கமான” முடிவைத்தானே எடுத்திருக்கிறார்கள்.

**கே. விஸ்வராஜா, செல்வா வீதி, மட்டக்களப்பு.**

**கேள்வி:** ஏற்றுமதி மற்றும் மருத்துவ நோக்கங்களுக்காக கஞ்சா பயிர்ச் செய்கையை சட்டப்பூர்வமாக்குவது தொடர்பான சிறப்பு அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாமே. அப்போ இனி சஞ்சாவுடன் அங்கு ஒருவர் கைது, இங்கு ஒருவர் கைது என்பதுபோன்ற செய்திகளை இனி நாங்கள் பத்திரிகைகளில் பார்க்கமுடியாது என்கிறீர்களா?.

**வியுக்தியார்:** கஞ்சாவை பயிரிட்டாலும் அதனை என்ன விலைக்கு பயிரிட்டவர்கள் விற்பனை செய்வார்களோ தெரியவில்லை. அதனால் கேரளாவில் விற்கும் விலையிலும் பார்க்க இங்கே அதிக விலைக்கு விற்கப்படும் என்றால், இலங்கையில் ஒரு இடத்தில் வாங்கிய கஞ்சாவிற்கான ரசீதுடன் கேரளாவில் வாங்கிய கஞ்சாவை உத்தியோகபூர்வமாக கொண்டுபோவார்கள் நம்மவர்கள். என்ன இனி கைது செய்திகள் நிச்சயம் வராது என்று நம்பலாம்.

---

**கே. புவிராஜா மட்டுவில், சாவகச்சேரி.**

**கேள்வி:** சிவில் உடை தரித்த இராணுவத்தின் பங்களிப்புடன் பிக்கு ஒருவரின் பிரசன்னத்துடன் யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட வளாகத்தில் மிகப் பெரியளவில் இவ்வாண்டு வெசாக் கொண்டாடப்பட்டது.

மருத்துவபீட வளாகத்துக்கு சென்ற 10இற்கும் மேற்பட்ட சிவில் உடை தரித்த இராணுவத்தினர் மேடை அமைத்தல், அலங்கார வேலைகளில் ஈடுபட்டிருந்தனராமே. பல்கலைக்கழகத்தில் ராணுவத்தினரை அனுமதித்தது தவறான முன்னுதாரணம் தானே?

**வியுக்தியார்:** முதலில் நாம் ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும். வெசாக் கொண்டாட்டம் என்பது ஒரு மத ரீதியான கொண்டாட்டம்தான். அப்படியொரு மதரீதியான கொண்டாட்டத்தில் பிக்கு கலந்து கொள்வது தவிர்க்க முடியாதது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடத்தில் கல்வி கற்பவர்களில் ஐம்பது வீதத்திற்கும் அதிகமானவர்கள் சிங்கள மாணவர்கள். அவர்கள் தமது மதவழிபாட்டை கொண் டாடுவதில் தவறில்லை. இலங்கை இராணுவத்திடம் மேடை அலங்காரங்கள், மேடை வசதிகள் உண்டு. அவற்றை வெசாக் கொண்டாட்டத்திற்கு தந்துதவுங்கள் என்று மாணவர்கள் கேட்டால் அவர்கள் தாராளமாக கொண்டுவந்து போட்டுக்கொடுப்பார்கள். அப்படி மேடை போடுவதற்காக வந்த இராணுவத்தினர் சிவில் உடையில் வந்ததை நாம் பெரிதுபடுத்த வேண்டியதில்லையே. பல்கலைக்கழகம் கல்வி கற்பதற்கான இடம்தானே இங்கே படையினருக்கு என்ன வேலை என்று நீங்கள் கேட்கலாம். புலிகளின் மாவீரர் தினத்தை நாம் நினைவுகூர்வதுபோல, சிங்கள மாணவர்கள் இறந்து போன படையினரை நினைவு கூர புறப்பட்டால் அதனை என்னசொல்லி நாம் தடுப்பது?

ஈழநாடு



# பணச்சடங்கு

ஆசி கந்தராஜா

நாகலிங்கம் மாஸ்டர் மனைவியுடன் சிட்னிக்கு வந்து மூன்று மாதமாகிறது. இது அவர்களது முதல் வருகை மட்டுமல்ல முதலாவது விமானப் பறப்பும்கூட. முப்பத்தைந்து வயதைத் தாண்டியும் திருமணமாகாமல் 'டிமிக்கி' விடும் மகனுக்கு, ஒரு கால்க்கட்டுப் போடும் வைராக்கியத்துடன் ஒரு வருஷ விசாவில் சிட்னிக்கு வந்திருக்கிறார்கள். நாகலிங்கம் மாஸ்டர் விரும்பியிருந்தால் ஆஸ்திரேலியாவுக்கு நிரந்த ரமாகக் குடிபுகுந்து, தமிழ் மூத்த பிரசைகள் சங்கம், கலை இலக்கியப் பேரவை, தமிழர் கூட்டமைப்பு, இந்துக் கோவில்கள் என பல்வேறு தமிழ், சமூக, சமைய அமைப்புக்களின் தலைவராகியிருக்க முடியும். அந்த அளவுக்கு வல்லமையுள்ள மனுஷன் அவர். பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக வாழ்க்கையைத் துவங்கி, படிப்படியாக உயர்ந்து முதலாம் தர பாடசாலை அதிபராக பத்து வருடங்கள் ஊரில் பணிபுரிந்த பின்னர் இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறார். அவரது மனைவி பூமணி டீச்சரும் குறைந்தவரில்லை. ஆரம்ப பாடசாலை ஒன்றின் தலமை ஆசிரியர். அத்துடன் ஊரிலுள்ள மாதர் சங்கத்தின் நிரந்தர தலைவியும்கூட!



வன்னிச்சமர் உக்கிரமடைந்த காலத்தில் சிட்னிக்கு வந்த குமாரசுவாமி வாத்தியார் ஆஸ்திரேலியாவில் இப்பொழுது நிரந்தரப் பிரசை. பயிற்றப்பட்ட தமிழாசிரியர் என்ற கோதாவில் இப்பொழுது சிட்னியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் சம்மேளனத்தின் ஆலோசகர். அவருக்கும் மனைவிக்கும் சென்ரலிங் பென்ஷனும் கிடைக்கிறது. கொழுத்த காசு. இலங்கையில் கிடைக்கும் வாத்தியார் பென்ஷன் காசு, இந்தக் கணக்கில் வராதது. குமாரசுவாமி வாத்தியாரின் மகனுக்கு அடுத்த மாதம் சிட்னியில் கலியாணம். மனைவி, மகன் சகிதம் நேரில் வந்து நாகலிங்கம் மாஸ்டரை திருமணத்துக்கு அழைத்திருந்தார்.

திருமண அழைப்பிதழ், கால் கிலோ நிறை வரும். பல வர்ணக் கற்கள் பதிக்கப்பட்டு, பட்டுக் குஞ்ச அலங்காரத் துடன் படு டாம்பீகமாக அது அமைக்கப்படிருந்தது. தபால் மூலம் அழைப்பிதழை அனுப்பினால் பல்லின தபால் சேவகர்கள் மத்தியில் அது தொலைந்து போக வாய்ப்புள்ளதால், முடிந்த வரை அனைவருக்கும் நேரடி யாகவே கொடுத்தார்கள். நாகலிங்கம் மாஸ்டருக்கு அழைப்பிதழ் கொடுக்க மனைவி மகனுடன் வீடு தேடி வந்தது பழைய நட்புக்காக. நட்பென்றால் சும்மா நட் பல்ல. இளமைக் காலங்களில் 'அப்படிஇப்படி' என ஊரில் பல திருவிளையாடல்களை நடத்திய நட்பு. பிற்காலத் தில் ஆசிரியர் சங்கம், கூட்டுறவு இயக்கம், கிராம அபிவி ருத்திச் சங்கம் போன்ற அமைப்புக்களில் ஒரு கன் னைக்கு நின்று காய் நகர்த்தி, ஊரைக் கட்டியாண்ட வர்கள். இன் னும் சிறப்பாகச் சொன்னால் மதிப்புக்குரிய பிரமுகர்கள்!

குமாரசுவாமி வாத்தியார் கொடுத்த அழைப்பு மடலுக்குள் ஐந்து இதழ்கள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு சடங்குகளுக்கான அழைப்பு மட்டைகள். டிலக், மெகிந்தி, சங்கீத், மாங்கல்யம், ரிஷெப்ஷன் என அர்த்தம் விளங்காத சில வார்த்தைகள். இத்தனைக்கும் குமாரசாமி வாத்தியாரின் சம்பந்தியும் புலம்பெர்ந்த ஈழத் தமிழர்தான். அதுமட்டுமல்ல ஆஸ்திரேலியத் தமிழர் கலாசாரப் பேரவையின் நிரந்தரத் தலைவரும்கூட. 'வெள்ளையர்கள் மட்டும்' என்ற கொள்கை ஆஸ்திரேலிய அரசால் கடைப்பிடிக்கப்பட்ட காலத்தில், பின்தங்கிய கிராமங்களில் பணிபுரிய வைத்தியர்கள் தேவைப்பட்டபோது குடிபுகுந்த கொழும்பு கறுவாக்காட்டு 'டமிழர்'. கால ஓட்டத்தில் மெல்ல சிட்னி நகருக்கு இடம் பெயர்ந்து பிரபல மகப்பேறு வைத்தியராகச் செல்வச் செழிப்புடன் வாழும் இவர், கண் வைத்தியராக சமீபத்தில் பயிற்சி முடித்த குமாரசுவாமி வாத்தியாரின் மகனை மருமகனாக்கிக் கொண்டதில் வியப்பில்லை.

அன்றைய இரவுச் சாப்பாட்டின் போது கலியாணத்துக்கு என்ன பரிசு கொண்டு போவது என்ற பேச்சை ஆரம்பித்தார் பூமணி டீச்சர். குடும்ப அந்தஸ்துக்கு ஏற்ற வகையில் நல்லதொரு பரிசுப்பொருள் கொண்டுபோக வேண்டுமென்றும் அதில் மகனின் கௌரவமும் அடங்கி இருக்கிறது எனவும் நியாயங்களை அடுக்கினார். மனைவி சொன்னதில் உண்மை இருந்தாலும் நாகலிங்கம் மாஸ்டரின் சிந்தனையில் மனக் கணக்கொன்று ஊர்ந்தது. இன்றைய நிலவரப்படி (2018) நூற்று இருபது இலங்கை ரூபாய்களை மாத்தினால்தான் ஒரு ஆஸ்திரேலிய டாலர் பெற்றுக்கொள்ளலாம். இந்த நேரம் பார்த்து மகனும் அலுவலக வேலைக்காக நியூசீலாந்துக்குப் போய் விட்டான். திரும்பி வர இரண்டு மாதங்களாகும். மகன் இருந்திருந்தாலும் அவனிடம் காசு கேட்க பூமணி டீச்சர் விட்டிருக்கமாட்டார். பெத்த பிள்ளை என்றாலும் காசு விஷயத்தில் கடமைப்படக் கூடாது என்ற கொள்கை அவரது.

'நூறு டாலருக்கு குறைய, பரிசுப் பொருள் வாங்குவது மரியாதையில்லை' எனச் சொன்ன பூமணி டீச்சர், நித்திரைக்கு முன்னர் அருந்தும் சுக்குக் காப்பி தயாரிக்க சமையலறைக்குள் நுழைந்தார்.

மாஸ்டரின் மனதில் தற்போதைய 'எக்ஸ்சேஞ் ரேட்' முகம்காட்டி மறைந்தது. குறைந்தது பன்னீராயிரம் ரூபா வேணும். பொல்லாலை அடிச்ச காசு. ஒண்டும் செய்யேலாது, என மனதை திடப்படுத்த முயன்றவருக்கு, ஊரில் நடந்த பழைய சடங்கு சம்பிரதாயங்கள் கறுப்பு வெள்ளை சினிமாப் படக் காட்சிகள் போல விரிந்துகொண்டே போனது.

சென்ற நூற்றாண்டின் எழுபதுகள் வரை திருமணம், வீடு குடிபுகுதல், சாமத்தியச் சடங்கு, அந்திரட்டி போன்ற சடங்குகளுக்கு தகுதிக்கு ஏற்றபடி 'அரிசி பச்சை' என்ற பெயரில், குத்தரிசியும் கறிமொந்தன் வாழைக் குலையும் கொடுத்தனுப்புவது பிரதேச வழமை. வசதி குறைந்தவர்கள் வாழைக் குலைக்குப் பதிலாக பூசணிக்காய் கொடுத்தனுப்புவார்கள். சடங்கு வைப்பவர்கள் எத்தனை கொத்து அரிசி வந்தது? வாழைக் குலை யில் எத்தனை வாழைக்காய்? பூசணிக்காய் பெரிதோ சிறிதோ? எனக் கணக் கெழுதிக் கொள்வார்கள். அரிசி பச்சை கொடுப்பதிலும் சில சம்பிரதாய முறைகள் உண்டு. நார்க் கடகத்தில் குத்தரிசியை அளந்து போட்டு, அதற்கு மேலே வாழைக் குலையை வைத்து 'அதற்குரிய' பெண் மணி ஒருவர் சுமந்து போவார். அவருடன் அரிசிபச்சை அனுப்பும் வீட் டுச் சிறுவனோ சிறுமியோ கூடச் செல்ல வேண்டும். அப்படி செல்லும்போது சடங்கு வீட்டுக் குரிய நாவிதரோ, சலவைத் தொழிலாளியோ கடகத்தில் கையை வைத்தால் அரிசியும் பச்சையும் அவர்களுக்குரியது. இந்த வகையில் ஒருதரம் பிடிப்பதற்கே அனுமதியுண்டு.

அரிசிபச்சை பற்றிய இன்னொரு நினைவும் மாஸ்டரின் மனதில் சுழன்றடித்தது. அது விதானையார் வீட்டுக் கலியாணத்தில் நடந்த சங்கதி. மாலைக் கருக்கலில் நாகலிங்கம் மாஸ்டர் அனுப்பிய 'ஆமான' மொந்தன் வாழைக் குலையையும் பத்துக் கொத்து மொட்டைக் கறுப்பன் கைக்குத்தரிசியையும் விதானையார் வீட்டுப் படலையடியில் வைத்தே நாவிதர் முருகேசு பிடித்துவிட்டார். அத்துடன் அவர் சும்மா இருந்திருக்கலாம். போனஸ்ஸாக அரிசிபச்சை சுமந்துபோன வள்ளியம்மையின் மார்பில் பட்டும் படாமலும் கைவைக்க, வள்ளியம்மை நாவிதரின் வேட்டியை உருவி நாலு சாத்துச் சாத்தியது அந்தக் காலத்து ஈஸ்றமன் கலர் வசுக்கோப்பு.

நல்ல துணிச்சல்காரி வள்ளியம்மை, என்ற நினைப்பில் நாகலிங்கம் மாஸ்டர் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டார்!

வள்ளியம்மை நல்ல சிவப்பி. அழகானவள். குறுக்குக் கட்டில் அவளது வசீகரம் சுண்டி இழுக்கும். புருஷன் கந்தையா உசாரில்லாத ஒரு 'சோணையன்' என்று ஊரில் பெயரெடுத்தவன். நாகலிங்கம் மாஸ்டரின் தோட்டம் வயல்களைக் குத்தகைக்கு எடுத்துச் செய்தாலும் பெரிய வருமானமில்லை. இதனால் மாஸ்டர் வீட்டில் வள்ளியம்மை தொட்டாட்டு வேலை செய்தாள்.

ஒரு காலத்தில் பணச்சடங்கும் கிராமங்களில் வெகு பிரபல்யம். குடும்பத்தில் பணக்கஷ்டம் என்றால் சொந்தங்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் சொல்லி, பணச்சடங்கு நடத்துவார்கள். சடங்கு நடக்கும் மூன்று நாள்களும் பனை மரத்தில் கட்டிய மைக்செற் குழாய் கால நேரமின்றி சினிமாப் பாடல்களை ஒலிபரப்பும். பணச் சடங்குக்கு வரும் உறவுகள் வைக்கும் மொய்ப் பணத்தில் அந்த வீட்டின் அவசர தேவைகள் ஓரளவு தீர்ந்துவிடும்.

இந்த வகையில் ஊரில் கொடுத்த மொய்ப் பணத்தைத் திரும்பப் பெற கந்தையாவும் வள்ளியம்மையும் பணச்சடங்கு வைத்தார்கள். அதற்காக நடந்த 'பலகாரச் சூடு ' இனிய நினைவுகளை நோக்கித்தள்ள, அன்றைய மைமல் பொழுதில், அழகுக்கான அத்தனை தேவதைகளும் ஆசீர்வதித்த கோலத்தில் அவள் தன் முன்னால் நின்ற காட்சியை நாகலிங்கம் மாஸ்டர் அசைபோட்டார்.

திடீரென கந்தையா, அரசாங்கம் குடுத்த காணியில் கமம் செய்யவென குடும்பத்துடன் விசுவமடுவுக்குப் போய்விட்டான். வள்ளியம்மை முதல் முறையாக கருவைச் சுமந்தகாலமது. 'நிறைமாத கர்ப்பிணியை உடனே அழைத்துக் கொண்டு போகவேண்டுமா'? என பூமணி டீச்சர் மறித்துப்பார்த்தார். கந்தையா கேட்கவில்லை. அதன் பின்னர் அவர்கள் ஊருக்குத் திரும்பவில்லை.

வள்ளியம்மையின் நினைவுகள் சிட்னிக் குளிருக்கு இதம் சேர்க்க, கடந்த கால சம்பவங்களில் உலாவந்து கொண்டிருந்த மாஸ்டரை சூடான சுக்குக் காப்பியுடன் வந்து தட்டி எழுப்பினர் பூமணி டீச்சர்.

'இஞ்சை பாருங்கோ, ரிஷெப்ஷன் அழைப்பிதழ் மட்டையிலை 'நோ பொக்ஸ் ஹிவ்ற் பிளீஸ்' (No box gift please) எண்டு எழுதியிருக்கு. சின்ன எழுத்திலை இருக்கிறதாலை எங்கடை கண்ணிலை அது தட்டுப்படேல்லை. அவையளிட்டை இருக்கிற காசுக்கும் வசதிக்கும் மற்றவையின்ரை சில்லறைப் பரிசுப் பொருள்கள் என்னத்துக்கு'? எனச் சொல்லி, பரிசுப் பொருள் வாங்கும் பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைத்தார் பூமணி டீச்சர்.

கலியாண நாளும் வந்தது!

இது நாகலிங்கம் மாஸ்டரும் மனைவியும் வெளிநாட்டில் கலந்து கொள்ளும் முதல் கலியாணம். சிட்னி ஒப்ரா ஹௌசுக்கும் ஹாபர் பாலத்துக்கும் இடையிலுள்ள பூங்காவில் தாலிகட்டும் சடங்கு. பூங்கா அருகேயுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் றிஸெப்ஷன். மேட்டுக் குடிமக்கள் பலரும் ஒன்று கூடும் இடத்தில், தாங்களும் சோடைபோகக் கூடாது என்ற நினைப்பில் இருவரும் கனகச்சிதமாக உடையணிந்து கொண்டார்கள். குமாரசுவாமி வாத்தியாரும் தன் நண்பன் நாகலிங்கம் மாஸ்டரை கௌரவிக்கும் வகையில் மணமேடை அருகே அவர்களுக்கு இடம் ஒதுக்கியிருந்தார்.

பூங்காவில் மேசை விரிப்புடன் கூடிய வட்ட மேசைகள் அடுக்கப்பட்டிருந்தன. மேசையைச் சுற்றி பத்து நாற்காலிகள் துணியால் போர்த்தப்பட்டு, பட்டுக் குஞ்சம் கட்டப்பட்டிருந்தது. மேசை விரிப்புக்கு தோதாக பீங்கான் கோப்பை, கத்தி, முள்ளுக் கரண்டிகளுடன் நொறுக்குத் தீனிகளும் வைத்திருந்தார்கள். ஆனால் வந்தவர்கள் கொண்டுவரும் பரிசுப் பொருள்களை அடுக்கி வைக்க அங்கு இடம் ஒதுக்கப்படவில்லை. இதைக் கவனித்த பூமணி டீச்சர், அழைப்பு மடலில் எழுதியிருந்த 'வசனத்தை' தான் சரியாகப் புரிந்து கொண்டதை எண்ணித் திருப்திப்பட்டார்.

மணமேடையில் மணமகனுக்கு காப்புக் கட்டும் சடங்கு நடந்தது. நாதஸ்வர தவில் வித்வான்கள் காம்போதியைத் தொடர்ந்து மோகன ராகம் வாசிக்க ஆரம்பித்தார்கள். வட்ட மேசையைச் சுற்றி இருந்தவர்கள் இவை எதையும் பொருட்படுத்தாமல் தங்களுக்குள் அரட்டை அடித்து ஊர் வம்பளந்து கொண்டிருந்தார்கள். திடீரென ஒரு இளைஞன், 'பாட்டு, பாட்டு' என்றபடி மைக்செற் வைத்திருந்த மூலைக்கு விரைந்தான். மறுகணம் ஒலிபெருக்கியில் குத்துப்பாட்டு ஒன்று ஹிந்தி மொழியில் ஒலித்தது. 'ஏ. ஆர். ரஹ்மான் சமீபத்தில் இசையமைத்த பாடல் அது' எனச் சொன்னார் ஒருவர். அனைவரும் குத்தாட்ட இசைக்கு ஏற்ப தாளம் போட ஆரம்பித்தார்கள். திடீரென பூங்காவின் ஒரு மூலையில் இருந்து பெண்களின் குரவைச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ரஹ்மானின் பாடலுக்கு ஆடியபடி வட இந்திய ஆடை அலங்காரத்துடன் மணப்பெண்ணும் தோழிகளும் மணமேடையை நோக்கி வந்தார்கள். 'இது குஜராத்தி ஸ்டைல்' என எக்கவுண்டன் மயில்வாகனம் மனைவிக்குச் சொன்னார்.

நாகலிங்கம் மாஸ்டருக்கு இவையெல்லாம் புதினமாகவும் புதுமையாகவும் இருந்தது. மோகன ராகத்துள் மூழ்கியிருந்த பூமணி டீச்சரால் குத்துப்பாட்டையும் மணமகளின் ஆட்டத்தையும் ரசிக்க முடியவில்லை. கோபத்தில் மூக்கு விடைக்க ஹாபர் பாலத்தில் ஊர்ந்து சென்ற றெயில்-கோச்சைப் பார்த்துக் கொண்டிருந்தார். 'பாட்டும் ஆட்டமும் நல்லாயிருக்கு' என மனைவிக்குச் சொல்லத் திரும்பிய நாகலிங்கம் மாஸ்டர், மனைவியின் முக பாவனையைக் கண்டதும் அடக்கிக் கொண்டார்.

ஒருவழியாக தாலி கட்டு முடிந்து, மணமக்களை வாழ்த்த வரிசை நீண்டது. கலியாணத்தை முன்னின்று நடத்திய பெடியன் பட்டுத் துணியால் போர்த்தப்பட்ட பெட்டி ஒன்றை மண மேடையில் வைத்தான். மண மேடைக்கு வந்தவர்கள் அனைவரும் வாழ்த்திய கையோடு பெட்டிக்குள் ஒரு என்வலப்பைச் செருகி இறங்கினார்கள். அப்பொழுதுதான் வாழ்த்து மட்டையில் எழுதியிருந்த ஆங்கில வசனத்தின் அர்த்தம், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியருக்குப் புரிந்தது.

'காசைத் தாங்கோ என நேரடியாய் சொல்லாமல் நாசூக்காய் சொல்லி இருக்கினம்' என நினைத்தவர் 'நோ பொக்ஸ் ஹிவ்ற் பிளீஸ்' (No box gift please) என்ற வசனத்தின் வெவ்வேறு பரிமாணங்களை நெட்டுருச் செய்தபடி, மனைவியின் றியக்ஷன் அறிய பூமணி டீச்சர் பக்கம் திரும்பினார்.

'கந்தையாவும் வள்ளியம்மையும் காசுக் கஷ்டத்தில் வைத்த பணச்சடங்கு மாதிரியெல்லோ இது இருக்கு' என கணவனின் காதுக்குள் குசுகுசுத்த பூமணிடீச்சரை இடைமறித்து, இது 'நவீன பணச் சடங்கு' எனத் திருத்தினார் நாகலிங்கம் மாஸ்டர்.

என்வலப் கொண்டுவராததால் இருவரும் மணமேடைப் பக்கம் போகவில்லை. விஷயத்தைச் சொல்ல, குமாரசுவாமி வாத்தியாரிடம் சென்றார்கள்.

'வரிசையிலை காத்து நிக்கிற கொஞ்சப்பேரை, சாப்பிட அனுப்பினால் மண மேடையில் கூட்டம் குறையும்' என்ற ஆலோசனையை முன்மொழிந்தபடி, எதிர்பாராத விதமாக அங்கு வந்து சேர்ந்த இளைஞனை, நாகலிங்கம் மாஸ்டருக்கு அறிமுகம் செய்தார் குமாரசுவாமி வாத்தியார்.

'இந்தத் தம்பி எங்கடை ஊர்ப் பெடியர்தான். வள்ளியம்மையின்ரை மகன். கேற்றறிங் பிஸ்னஸ்ஸில் இங்கு கொடிகட்டிப் பறக்கிறார்' என்றார்.

'அப்படியா'? என நாகலிங்கம் மாஸ்டர் விழிகளை உயர்த்தி பெடியனைப் பார்த்தார்.

அதே சாயல்...!

சிறிது நேரம் அவனையே பார்த்துக்கொண்டு நின்றவர், திடீரென உறைந்துபோய் அருகிலிருந்த கதிரையில் அமர்ந்துவிட்டார்.

அப்படியும் இருக்குமோ? என, சடுதியாக அவர் மனதில் ஒரு பொறி தட்டியது.

மறுகணம் சிட்னிக் குளிரையும் மீறி, நாகலிங்கம் மாஸ்டருக்கு உடம்பு வேர்த்தது.




- ஐங்கரன் விக்கினேஸ்வரா

## சுயநிர்ணயத்துக்காக போராடும் மேற்கு பப்புவா

# இந்தோனேசியா ஆதிக்கத்தில் பழங்குடிகளின் தாயகம்:

## நியூசிலாந்து விமானியின் பணய விவகாரம்:

நியூசிலாந்து விமானியை பணயக் கைதியாக வைத்திருக்கும் மேற்கு பப்புவா இயக்கம், இந்தோனேசியா கைப்பற்றி ஆக்கிரமித்துள்ள தங்கள் பிராந்தியத்தின் சுதந்திரத்தை அங்கீகரிக்கும் வரை அவர் தங்கள் பிடியிலிருந்து விடுவிக்கப்பட மாட்டார் என்று கூறியுள்ளது.

2023 பெப்ரவரி 7இல் இந்தோனேசியாவில் மேற்கு பப்புவா போராளிகள், பிலிப் மெஹர்டென்ஸ் என்ற நியூசிலாந்து விமானியை பணயக்கைதியாக பிடித்தனர். இந்தோனேசிய விமான நிறுவனமான சுசி ஏர் (Susi Air) பப்புவாவிற்கு உள்ளேயும் வெளியேயும் விமானங்களை இயக்குகிறது. இவ்விமானியும் இந்த நிறுவனத்தில் பணியாற்றி உள்ளார்.

நியூசிலாந்து விமானியை பணயக்கைதியாக பிடித்ததை மேற்கு 'பப்புவா தேசிய விடுதலை இராணுவம்' பொறுப்பேற்றுள்ளது. அவர்கள் தங்கள் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக அனைத்து வெளிநாட்டினரையும் குறிவைப்பதாகக் கூறியுள்ளனர்.

பிப்ரவரி 15 ஆம் தேதி, விமானியின் புகைப்படங்களில் அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதையும், பப்புவா இயக்கத்தைச் சேர்ந்த ஆயுதமேந்திய கிளர்ச்சியாளர்களால் பாதுகாக்கப்படுவதையும் காட்டியது.

இந்தோனேசிய அரசால் பப்புவா பிராந்தியத்தின் சுதந்திரத்தை அங்கீகரிக்கும் வரை அவர் பிடியிலிருந்து விடுவிக்கப்பட மாட்டார் என்று கூறியுள்ளனர்.

**மேற்கு பப்புவா சுதந்திர இயக்கம்:**

பப்புவா இயக்கம் (Free West Papua movement)என்பது மேற்கு நியூ கினியாவை அடிப்படையாகக் கொண்ட சுதந்திர இயக்கமாகும். தற்போது இந்தோனேசியாவால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தை பிரிக்க நீண்ட காலமாக



கோருகிறது.

நீண்ட காலமாக தொடரும் போரில் மத்திய பப்புவா மாகாணங்களில் இந்தோனேசியாவின் இராணுவத்தால் 500,000 மேற்கு பப்புவான் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் கற்பழிக்கப்பட்டுள்ளனர், பலர் சித்திரவதை செய்யப்பட்டு வலுக்கட்டாயமாக காணாமல் போயுள்ளனர்.

அங்கு தொடரும் இனவெறி பாகுபாட்டால் பேச்சு சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை மனித உரிமைகள் பாரியளவில் மீறப்பட்டுள்ளது. ஆச்சரியப்படும் விதமாக ஆஸ்திரேலியா மற்றும் நியூ கினியாவின் நிலப்பரப்புகள் கடல் மட்டத்தால் மட்டுமே பிரிக்கப்பட்டிருந்தாலும், பப்புவான்களும் பழங்குடியின ஆஸ்திரேலியர்களும் குறைந்தது 25,000 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வருக்கொருவர் தொடர்புள்ளதாக தெரிகிறது.

மேற்கு பப்புவா ஆனது பப்புவா நியூ கினியாவில் இருந்து வேறுபட்ட பிரதேசமாகும். பப்புவா இந்தோனேசியாவில் உள்ள ஒரு மாகாணம் ஆகும். மற்றும் பப்புவா தீவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது.

இரண்டாம் உலகப் போரின் போது, நெதர்லாந்தின் கிழக்கு இந்தியத் தீவுகள் (பின்னர் இந்தோனேசியா) ஜப்பானியப் போர் முனையில் எண்ணெய் வழங்குவதற்காக அதிபர் சுகர்னோவால் வழிநடத்தப்பட்டது. பின்னர் 17 ஆகஸ்ட் 1945 இல் இந்தோனேசியா குடியரசாக சுதந்திரம் அறிவிக்கப்பட்டது.

நெதர்லாந்தின் நியூ கினியா (மேற்கு நியூ கினியா, பின்னர் ஒரு நெதர்லாந்து கிழக்கிந்தியத் தீவுகளின் ஒரு பகுதி) மற்றும் ஆஸ்திரேலிய நிர்வாகப் பகுதிகளான பப்புவா மற்றும் பிரிட்டிஷ் நியூ கினியா ஆகியவை ஜப்பானிய கட்டுப்பாட்டை எதிர்த்தன. பசிபிக் போரின் போது அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலியப் படைகளுடன் கூட்டாளிகளாக செயற்பட்டு இருந்தன.

இந்தோனேசியா மேற்கு பப்புவான் பிரதேசத்தை கைப்பற்றி 40 ஆண்டுகளுக்கும் மேலாகியும், பழங்குடி பப்புவான்கள் இன்னும் சுயநிர்ணயத்திற்காக போராடுகிறார்கள். இந்தோனேசியா 1969 இல் மேற்கு பப்புவாவை அதிகாரப்பூர்வமாக கையகப்படுத்தியது. சுதந்திரம் குறித்த போலி வாக்கெடுப்பில் உள்ளூர் மக்களில் ஒரு சிலரே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். இதன் பின் இந்தோனேசியா மேற்கு பப்புவாவை அதிகாரப்பூர்வமாக கையகப்படுத்தியது.

ஆஸ்திரேலியாவின் வடக்கே நியூ கினியா தீவின் மேற்குப் பகுதி ஒரு காலத்தில் டச்சு காலனியாக இருந்தது. ஆனால் நெதர்லாந்து 1950 களில் திரும்பப் விலகத் தயாராகத் தொடங்கியதும், 1961 ஆம் ஆண்டில் மேற்கு பப்புவான்கள் சுதந்திரத்தைப் பற்றி விவாதிக்க ஒரு மாநாட்டை நடத்தினர். இதன்பின் மேற்கு பப்புவான் மக்கள் "உதய நட்சத்திரம்" கொடியை தங்கள் சுதந்திரத்திற்காக உயர்த்தினர்.

**இந்தோனேசியா கைப்பற்றிய பழங்குடிகளின் தாயகமே மேற்கு பப்புவா ஆகும். நீண்டகாலமாக சுயநிர்ணயத்திற்காக போராடும் மேற்கு பப்புவா பிரச்சனை தற்போது சர்வதேச ஊடகங்களில் நியூசிலாந்து விமானி பணய விவகாரம் மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது**

ஆனால் புதிதாக சுதந்திரமடைந்த இந்தோனேசியா இந்த மாகாணத்தின் மீது தனது உரிமையை வலுக்கட்டாயமாக வலியுறுத்தத் தொடங்கியது. பின்னர் இந்தோனேசியா, மற்றும் பழங்குடி மக்களுக்கு இடையே பாரிய மோதல் வெடித்தது.

**போலி வாக்கெடுப்பும் கைப்பற்றலும்:**

1962 ஆம் ஆண்டில், இந்த பிராந்தியப் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க 'நியூயார்க் ஒப்பந்தம்' என அழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் ஒப்பந்தம் ஒன்று வரையப்பட்டது. மேலும் மேற்கு பாப்புவான் ஆலோசனை அல்லது ஒப்புதல் இல்லாமல் இந்தோனேசியா மே 1963 முதல் மேற்கு பப்புவாவின் தற்காலிக நிர்வாகியாக தன்னை நியமித்தது. ஐ.நா. உடன்படிக்கையின் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால், அனைத்து மேற்கு பப்புவான்களும் சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பில் வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் 1969 இல் வாக்குப்பதிவு நடத்தப்பட்டபோது, அது சுதந்திரமான மற்றும் நியாயமானதாக இருக்க வில்லை. ஏறக்குறைய அனைத்து பழங்குடி பப்புவான்களும் இந்த வாக்கெடுப்பை நிராகரித்தனர். இதை 'தேர்வு இல்லாத செயல்" என்று அழைக்கின்றனர். மேலும் பலர் இன்றுவரை புதிய சுயநிர்ணயத்திற்கான உண்மையான வாக்கெடுப்பைக் கோருகின்றனர்.




**சுயநிர்ணயத்திற்கான வாக்கெடுப்பு:**

இந்த தவறான வாக்கெடுப்பு மேற்கு பப்புவான்களின் சுதந்திரத்திற்கான அழைப்புக்கு அடிப்படை முடக்கமாக அமைந்தது. பூர்வீக மேற்கு பாப்புவான்கள் இந்தோனேசிய இராணுவம் மற்றும் காவல்துறையினரால் தினசரி கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றனர். மேலும் பலர் தொடர்ந்து அச்சத்தில் வாழ்வதாக தெரிவிக்கின்றனர்.

1963 முதல் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர்.

சுதந்திரத்திற்காக கிளர்ச்சி செய்பவர்கள் வெளிப்படையாக அதிகளவில் சித்திரவதை செய்யப்படுகிறார்கள்.

மேற்கு பாப்புவா பகுதியில் சுதந்திரத்திற்கான ஆயுதமேந்திய இயக்கம், இந்தோனேசிய பாதுகாப்புப் பணியாளர்களுடன் ஆயுத மோதல்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்தோனேசியா அதன் 'பிராந்திய ஒருமைப்பாட்டை' பாதுகாப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏன் எனில் - மேற்கு பப்புவாவில் உள்ள மிகப்பெரிய துறைமுகமான 'ஃப்ரீபோர்ட்' மெக்மோரன் தங்கம் மற்றும் தாமிரச் சுரங்கம் நாட்டின் மிகப்பெரிய வரியும், இலாபம் ஈட்டும் ஒன்றாகும்.

**ஆஸ்திரேலியாவின் அரசியல் கூட்டாளி இந்தோனேசியா?**

மேற்கு பப்புவா ஒரு காலத்தில் டச்சு கிழக்கிந்தியத் தீவுகளின் ஒரு பகுதியாக இருந்ததால், அது இன்றைய சுதந்திரமான இந்தோனேசிய குடியரசின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று இந்தோனேசியா தனது பங்கிற்கு வாதிடுகிறது. முக்கியமாக இரண்டு பெரிய ஆஸ்திரேலிய அரசியல் கட்சிகளும் இந்த நிலைப்பாட்டில் அவர்களை ஆதரிக்கின்றன.

ஆஸ்திரேலியாவிற்கு இந்தோனேசியா ஒரு முக்கியமான அரசியல் கூட்டாளியாகக் கருதப்படுகிறது. மேலும் இரு தரப்பிலிருந்தும் அரசியல்வாதிகள் தங்கள் இந்தோனேசிய சகாக்களுடன் நட்பு போக்கைக் கொண்டுள்ளனர்.

ஆனால் ஆஸ்திரேலியாவில் ஒரு குறிப்பிடத்தக்க மேற்கு பப்புவான் சமூகம் மற்றும் மேற்கு பப்புவான் சுதந்திரத்தை ஆதரிப்பவர்களின் பெரிய வலையமைப்பைக் கொண்டுள்ளது. மேற்கு பப்புவான் சுதந்திர இயக்க ஆதரவான இந்த அமைப்பு இரு நாடுகளைச் சேர்ந்த ஆர்வலர்களுக்கு இடையிலான சமரசம் பேண நீண்ட காலம் முயல்கிறது.

வெளிநாட்டில் உள்ள தலைவர்களின் மேற்கு பப்புவா அமைப்பு சுதந்திரத்திற்கான சர்வதேச ஆதரவிற்காக பாடுபடும் அதே வேளையில் பிரதேசத்தில் உள்ள பிரச்னைகள் பற்றிய விழிப்புணர்வை பரவலாக ஏற்படுத்துகிறது.

1963 ஆம் ஆண்டு இந்தோனேசிய நிர்வாகம் இங்கு தொடங்கும் வரை நெதர்லாந்து மற்றும் அதன் நியூ கினியா காலனியின் போருக்கு முந்தைய உறவு, பப்புவான் சிவில் மற்றும் பிற சேவைகளை மேம்படுத்தி இருந்தது. பின்னர் அவர்களின் பிரதேசங்கள் சுதந்திரத்திற்காக ஒன்றிணைவதற்கு முட்டுக்கட்டையாக ஆஸ்திரேலிய - அமெரிக்காவின் நலன்களுக்காக இரண்டு பிராந்தியங்களையும் தனித்தனியாக வைத்திருந்தன.

ஐக்கிய நாடுகளின் சாசனம் மற்றும் பொதுச் சபை தீர்மானம் 1514 இன் படி மேற்கு நியூ கினியா மக்கள் சுயநிர்ணய உரிமையை அனுமதிக்க வேண்டும் என்று கோருகிறது. இதனையே நெதர்லாந்தும் தொடர்ந்து வலியுறுத்துகிறது.

மேற்கு பப்புவா போராளிக் குழுக்கள், ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 1 அன்று மேற்கு பப்புவாவின் மார்னிங் ஸ்டார் கொடியை உயர்த்துகின்றன, அதை அவர்கள் 'பாப்புவான் சுதந்திர தினம்" என்று அழைக்கிறார்கள். இதைச் செய்பவர்கள் மீது தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்படலாம் என்றும், இந்தோனேசியாவில் ஏழு முதல் இருபது ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் இந்தோனேசிய காவல்துறை எச்சரித்துள்ளது.

சுயநிர்ணயத்திற்காக போராடும் மேற்கு பப்புவா மக்கள் நீண்டகாலமாக இக்கொடுமைகளுக்கு எதிராக போராடி வருகின்றனர். இந்தோனேசியா மேற்கு பப்புவான் பிரதேசத்தை கைப்பற்றி 40 ஆண்டுகளுக்கும் மேலாகியும், பழங்குடி பப்புவான்கள் இன்னும்மும் தங்களின் சுயநிர்ணயத்திற்காக போராடுகிறார்கள். ■

# ‘லண்டனில் இருந்து விமல்’ நூல் அறிமுகவிழா யாழ் பல்கலையில்



யாழ்ப்பாணம், மே 21

‘லண்டனில் இருந்து விமல்’ எனும் நூல் அறிமுக விழா யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் யாழ்.பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று மாலை 5.00 மணியளவில் இடம்பெற்றது.

பிரபல ஒலிபரப்பாளரும் ஊடகவியவியலாளருமான விமல் சொக்கநாதனால் எழுதப்பட்ட இந்த நூலின் அறிமுக உரையை கவிஞர் சோ.பத்மநாதனும், நூல் பற்றிய கருத்துரையை எழுத்தாளர் கோகிலா மகேந்திரன், யாழ்,பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன்,யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா சிறிகணேசன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

சிறப்புரையை உலக அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத்தும், நூலாசிரியர் விமலின் பன்முகத்தன்மை எனும் தலைப்பில் முன்னாள் நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் மூத்த ஊடகவியலாளருமான பரமேஷ்வரன் சிவராம கிருஷ்ணனும், ஆக்கியோன் அறிமுகத்தை ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி கருணா சிவாஜியும், என் எண்ணத்திரையில் விமல் எனும் தலைப்பில் டான் தொலைக்காட்சியின் தலைவர் எஸ். குகநாதனும் உரை ஆற்றினர்.

செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் நூலை வெளியிட்டு வைக்க சுபாஷ் தனியார் விருந்தினர் விடுதியின் உரிமையாளர் முதற் பிரதியினை பெற்றுக்கொண்டார்.

# கறுப்புப் பட்டியலில் கண் சொட்டு மருந்து

கொழும்பு, மே 21

இலங்கையில் கண் சத்திரசிகிச்சைக்குப் பின்னர் பயன்படுத்தப்படும் ப்ரெட்னிசோலோன் என்றகண் சொட்டு மருந்தை கறுப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

முன்னதாக, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ப்ரெட்னிசோலோன் கண் சொட்டு மருந்து பல சிக்கல்கள் பதிவாகியதையடுத்து, உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பயன்படுத்துவதை நிறுத்துமாறு அனைத்து மருத்துவமனை பணிப்பாளர்களுக்கும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் நடத்தப்பட்ட ஆய்வகச் சோதனைகள் இந்த கண் சொட்டு மருந்து மாசுபட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளரான வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

குறித்த மருந்துப் பொருட்கள் தொடர்பான கொடுப்பனவுகளை செலுத்தாமல் இருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ப்ரெட்னிசோலோன் கண் சொட்டு மருந்துக்கு பதிலாக மியன்மாரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்தைப் பயன்படுத்த உள்ள நிலையில் கண் சத்திர சிகிச்சைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (அ)

# மின்னல் தாக்கி ஒருவர் மரணம்!

கொழும்பு, மே 21

பதுளை - ரிதிமாலியத்த காவல்துறை பிரிவிற்குட்பட்ட மொறான பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன் தினம் மாலை இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

அந்தப் பகுதியிலுள்ள வடிகாலுக்கு அருகில் குறித்த நபர் நின்றிருந்த சந்தர்ப்பத்தில் மின்னல் தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மின்னல் தாக்கியதில் அவரது கையடக்க தொலைபேசியும் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)






# சு.கவை விட்டுச்சென்றவர்களை மீள இணைக்க பேச்சுவார்த்தை!

## மைத்திரிபாலவின் வீட்டில் நடந்தது

கொழும்பு, மே. 21

**அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ள அமைச்சர்கள் மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தை ஒன்றை முன்னெடுத்துள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.**

டென்சில் கொப்பேகடுவ வீதியில் அமைந்துள்ள சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வீட்டில் இந்தக் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, ஜகத் புஷ்பகுமார மற்றும் லசந்த அழகியவண்ண உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளதோடு, சுதந்திரக் கட்சியின் சார்பில் மைத்திரிபால சிறிசேன, தயாசிறி ஜயசேகர, ஷான் விஜயலால் டி சில்வா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தங்களுக்கான உறுப்புரிமை தடையை நீக்குமாறும் கட்சியுடன் இணைந்து மீண்டும் செயல்படத் தயாராகவுள்ளதாகவும் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட அமைச்சர்கள் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்போது சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள், "சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சியில் இருக்கும்போது அதன் உறுப்பினர்களால் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெறமுடியுமா?, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு எதிராக கொண்டுவரப்பட உள்ள பிரேரணைக்கு எதிராக கட்சி வாக்களிக்கும். அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்து கொண்டு, இந்த பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க முடியுமா?" எனவும் வினவியுள்ளனர்.

மேலும், சுதந்திரக் கட்சிக்கு மீண்டும் வருவதாக இருந்தால் அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகளில் இருந்துகொண்டு இவற்றை செய்ய முடியாது எனவும் சுதந்திர கட்சியினர் அமைச்சர்களுக்கு எடுத்துரைத்துள்ளனர்.

இதேவேளை, இந்த கலந்துரையாடல் எந்தவிதமான இணக்கப்பாடுமின்றி முடிவடைந்துள்ளதாக அறிய முடிகிறது.

# நல்ல அரசியல் விளையாட்டுக்களை எதிர்காலத்தில் நாங்கள் பார்க்கலாம்

## மொட்டுக் கட்சி எம்.பி கூறுகிறார்

கொழும்பு, மே 21

நல்ல அரசியல் விளையாட்டுக்களை எதிர்காலத்தில் பார்க்கலாம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

அரசாங்கத் திலிருந்து கொண்டு வரப்பிரசாதங்கள் இல்லை என்பதற்காக எதிர்க் கட்சிக்குச் செல்வதும், அமைச்சுப் பதவிகளுக்காக அரசாங்கத்தில் இணைவதும் தவறு எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வீழ்ந்து கிடக்கும் நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டியெழுப்ப முயல்வதாகத் தெரிவித்த அவர், அடுத்த ஒரு வருடம் அல்லது ஒன்றரை வருடங்களுக்காவது ஜனாதிபதிக்கு எந்தவிதமான நிபந்தனைகளுமின்றி ஆதரவளிக்க வேண்டும் எனவும் கூறினார்.

நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவும் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவேண்டும் என அவர் கோரினார்.

எது எவ்வாறாயினும், சஜித் அணியிலிருந்து அரசாங்கத்தில் இணைவார்களே தவிர, அரசாங்கத்திலிருந்து சஜித் அணிக்கு எவரும் செல்லப் போவதில்லை. எதிர்காலத்தில் அரசியலில் நல்ல விளையாட்டுக்களைப் பார்க்க கூடியதாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை

கொழும்பு, மே 21

பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்பவும், பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளவும் அவசியமான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வியமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவரால் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பாடசாலை கட்டமைப்பின் தற்போதைய நிலைமையை ஆராய்வதற்கான குறித்த கலந்துரையாடலில், அமைச்சின் செயலாளர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட ஏனைய அனைத்து பணிக்குழாம் அதிகாரிகள் கலந்து கொண்டதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

# கருவுற்ற 2 புள்ளிமான்களை கொலை செய்தவர்கள் கைது!

கொழும்பு, மே 21

கருவுற்றிருந்த இரு புள்ளிமான்களை கொன்று இறைச்சி கடத்தலில் ஈடுபட்ட இருவரை ஹோரத்கம வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் கைது செய்தனர்.

பொல்பித்திகம - கிரிபாமுனேகம பிரதேசத்தில் வைத்து இந்த இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்கள் இருவரும் கிரிபாமுனேகம பிரதேசத்தில் உள்ள தோட்டத்தில் மரத்தில் தொங்கிய புள்ளிமான்களை இறைச்சியாக்கிக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சோதனையின்போது, விற்பனைக்கு தயார் செய்து குளிர்சாதனப் பெட்டியில் மறைத்து வைத்திருந்த 9 கிலோ மான் இறைச்சி மீட்கப்பட்டது. (அ)

# அரச மரியாதையுடன் இறுதிக் கிரியைகள் செய்யவே அமைச்சுப் பதவி கேட்கிறார்கள்!

கொழும்பு, மே 21

மூளைச்சாவடைந்தவர்களே தங்களுக்கு அமைச்சுப் பதவிகள் வேண்டுமென கேட்பதாகத் தெரிவித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் நளின் ஹேவகே, தங்களது இறுதிக் கிரியைகளை அரச மரியாதையுடன் செய்வதற்கே இவர்கள் அமைச்சுப் பதவிகளைக் கோருவதாகவும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தில் உள்ளவர்கள் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என கூறுகிறார்கள். இவ்வாறு கூறுபவர்கள் கடந்த 40, 50 வருடங்கள் அமைச்சரையில் இருந்தார்கள். ஆனால் எதனையும் செய்யவில்லை.

சிலரது மூளை அரைவாசியல்ல முழுவதுமாக சாவடைந்துள்ளது. ஆனாலும் அமைச்சுப் பதவிகளைக் கேட்கிறார்கள். அரச மரியாதையுடன் தங்களது இறுதிக் கிரியை களைச் செய்வதற்கே இவர்கள் அமைச்சுப் பதவிகளை கேட்கிறார்கள்.

நாட்டில் தற்போது ஜேரோம் நாடகம் நடிக்கப்படுகிறது. அரசியல்வாதிகளுக்கு செய்வதற்கு ஒன்றுமில்லை என்கின்றபோது, இதுபோன்ற இன, மதவாதங்களையே கையில் எடுக்கிறார்கள்-என்றார்.

(அ)

# வெளிநாட்டில் வேலை தருவதாகக் கூறி 81 இலட்சம் மோசடி செய்த பெண் கைது

கொழும்பு, மே 21

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை பெற்றுத் தருவதாக கூறி சுமார் 81 இலட்சம் ரூபாவை ஏமாற்றி மோசடி செய்த பெண் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை நடத்தி வரும் சந்தேக நபர், இஸ்ரேல் மற்றும் கட்டார் ஆயிக நாடுகளில் தாதியர் சேவை மற்றும் ஹோட்டல் துறையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி 33 பேரை ஏமாற்றியமை விசாரணையின் மூலம் வெளியாகியுள்ளது.

ஹலவத்தை நீதிமன்றில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேக நபரை கைது செய்வதற்கான உத்தரவு கிடைத்திருந்த நிலையில், நிகவெரட்டியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

ஏமாற்றியவர், ஹலவத்தை பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடைய பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# செல்வச்சந்நிதி...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடிவிலான அந்த ஒளிக் கதிர் கதிர் காமக் கந்தன் வடக்கே செலவச்சந்நிதி ஆலயத்திலிருந்து மகோற்சவத் துக்காக கதிர்காமம் நோக்கிச்செல்வதையே குறிப்பதாக இருப்பதாகவும் கூறினார். அச்சமயம் பக்தி பரவசத் தோடு அனைவரும் அரோகரா கோஷம் எழுப்பி அந்த ஒளிக்கதிரை வழிபட்டனர் என்கிறார் சண்முகப்பிரியா.

பாத யாத்திரீகர்கள் தாம் செல்லும் கானக பாதை களில் எதிர்ப்படும் சிற்றாறுகள், கடல் பகுதிகள், என்பவற்றில் குளித்து செல்கின்றனர். பாதையாத்திரை சென்று கொண்டிருக்கின்ற கானகங்களை அண்டிய குக் கிராமங்களில் வாழ் வோரின் பெயர்கள் சிங்களவர்களானாலும் தமிழர்களானாலும் வள்ளி, கந்தா என்ற பெயர்களையே பெரிதும் கொண்டதாக இருக்கின்றன.

இறுதியாக யால காட்டுப் பிதேசத்தையும் கடந்து செல்வச்சந்நிதியிலிருந்து ஏறத்தாள ஐம்பது தினங்களையும் 815 கிலோ மீட்டர் தூரத்தையும் பூர்த்தி செய்த திருப்தியில் பாத யாத்திரீகர்கள் கதிர்காமத்தை அண்டி ஓடுகின்ற மகாவலி நதியில் குளித்து பரவசமடைகின்றனர்.

இதனையடுத்து அரோகரா கோஷம் வானைப் பிளக்க கதிர்காம கந்தன் சந்நிதியை அடைகின்றனர் பாத யாத்திரீகர்கள்.

அவர்களுக்கு விசேட ஆராதனைகளோடு வரவேற் பளிக்கப்படுகின்றது. பக்தி பரவசத் தோடு அரோகரா கோஷம் எழுப்பியவாறே பாதயாத்திரீகர்கள் தமது புனித யாத்திரையை நிறைவு செய்கின்றனர். இவர்களோடு தாமும் ஒருவராக கதிர்காமக்கந்தனை மனமுருகி வழிபட்டு நின்றதாக பக்தி பரவசத்தோடு குறிப்பிடு கின்றார் தாம் ஆங்கிலத்தில் எழுதிய நூலில் சண்முகப்பிரியா.

# ஊடகவியலாளரிடம் 1 பில்லியன் இழப்பீடு கோரும் எதிர்க்கட்சி தலைவரின் மனைவி

கொழும்பு, மே 21

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் மனைவி ஜலனி பிரேமதாஸவுக்கு, யூரியூப்பில் ஒளிபரப்பான நேர்காணலில் எதிராக அவதூறான கருத்துகளை வெளியிட்டதாக, அவரது ஆலோசனையின் பேரில் அவரது சட்டத்தரணி ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கீர்த்தி ரத்நாயக்க என்ற நபரால் நேர்காணல் செய்யப்பட்டு யூரியூபில் சேர்க்கப்பட்டுள்ள குறித்த காணொளியில் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களால் சஜித் பிரேமதாஸவின் மனைவியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, குறித்த காணொளியை உடனடியாக நீக்குமாறும், அவ்வாறு செய்யப்படாவிட்டால், 14 நாட்களுக்குள் ஒரு பில்லியன் ரூபாவை இழப்பீடாக செலுத்துமாறும் சமுதித்த சமரவிக்ரமவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மன்னிப்பு கோரவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு மன்னிப்பு கேட்கத் தவறினால் அல்லது காணொளியை நீக்கத் தவறினால், குற்றவியல் ரீதியாகவும், சிவில் ரீதியாகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

(அ)

## ஆழமான...

கைக்கு வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, அந்த நிதியை முழுமையாக பெற்றுக்கொள்வதற்குரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்வதில் இலங்கை அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் மீள்செலுத்துகை நெருக்கடியை உரியவாறு கையாள்வதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு ஆய்வறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஸ்திரத்தன்மை குறித்த மதிப்பீட்டின் பிரகாரம், கடந்த 2022ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128 சதவீதமாக காணப்பட்ட கடன்களின் அளவு 2028ஆம் ஆண்டில் 101.3 சதவீதத்தினால் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று 2022 - 2023ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வட்டிவீதமானது 2.5 அடிப்படைப் புள்ளிகளால் வீழ்ச்சியடையும் என்றும், இவ்வாண்டின் இறுதியில் வட்டி வீதப் பெறுமதி கடந்த 2019ஆம் ஆண்டில் காணப்பட்டதையொத்த நிலையை அடையும் என்றும் மேற்குறிப்பிட்ட மதிப்பீட்டில் எதிர்வு கூறப்பட்டிருப்பதாக வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டின் அடிப்படையில் தற்போது இலங்கை 100 கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டியிருப்பதாகவும், கடந்த ஏப்ரல் மாத இறுதியில் 25 கடப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பதாகவும், அதன் ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு, அவற்றில் 10 கடப்பாடுகள் குறித்த தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படாததன் காரணமாக அவற்றின் வெற்றிகரமானதன்மை குறித்து மதிப்பீடு செய்ய முடியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஸ்திரத்தன்மை குறித்த மதிப்பீட்டின்படி, மூன்று வருடங்களுக்குள் நாட்டின் அரச கடன்களின் அளவு கொவிட்-19 பெருந்தொற்றுக்கு முன்னர் காணப்பட்ட நிலையை அடையும் என்றும், கடந்த ஆண்டு 9.7 சதவீதமாக காணப்பட்ட பொதுக் கடன்களுக்கான வட்டி வீதம் 2028ஆம் ஆண்டில் 6.7 சதவீதமாக வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்தோடு, இலங்கை மிகவும் ஆழமான கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு தவறும் பட்சத்தில், எதிர்வரும் காலங்களில் எதிர்பாராத வகையில் மிகவும் உயர்வான பணவீக்க நிலைமைகளுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்படும் என்றும், இது வட்டி வீதங்களில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் கடன் ஸ்திரத்தன்மையையும் பாதிக்கும் என்றும் வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு எச்சரித்துள்ளது. (அ)

## ட்ரோன்...

ட்ரோன் கமெராக்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டன.

அத்தகைய கட்டடங்களில் நுளம்புகள் தொற்றக்கூடியவை தண்ணீர் நிற்கும் இடத்திற்கு ட்ரோன் கமெராவைப் பயன்படுத்தி பி.ரி.ஐ துகள்களும் தெளிக்கப்பட்டன.

நாட்டில் தற்போது டெங்கு பரவும் சூழ்நிலை குறையும் வரை இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது.

இதன்படி, கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய இடங்களில் உள்ள ஒவ்வொரு வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கும் உரிய ட்ரோன் கமெராக்களை நாளாந்தம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை...

ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் ஏறக்குறைய 75 வருடங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் டொச்செ வெல்லெ ஒலிபரப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளது, இது உலகின் மிகப்பெரிய பிராந்தியத்தை உள்ளடக்கியது. குறுகிய அலை மற்றும் நடுத்தர அலைகளை ஒளிபரப்புகிறது. தற்போது, உலகில் இவ்வகையான ஒரே ஒளிபரப்பு நிலையம் ஓமானில் உள்ளது. அது முழுநேரமும் இயங்கவில்லை.அதன்படி, இலங்கையில் அதன் இருப்பிடம் காரணமாக, உலகின் பெரும்பகுதி இந்த ஒளிபரப்பு நிலையத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றது.

குறைந்த செலவில் நீண்ட தூரம் செல்லும் இந்த அலைவரிசைகளை தற்போது உலகின் பல்வேறு நாடுகள் மதம் மற்றும் பிற பிரசார நடவடிக்கைகளில் பயன்படுத்துவதாகவும், தற்போதைய வானொலியின் கீழ் சுமார் 75,000 அமெரிக்க டொலர்கள் வருமானமாகப் பெறுவதாகவும் கூறுகிறார்கள்.

இந்த பகுதி வலுவான அலைகள் இருக்கும் பகுதி என்றும் பெயரிடப்பட்டது.

நிலைமை இவ்வாறு இருக்கையில்-

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் கொள்கை முடிவின்படி, 2021 ஆம் ஆண்டில் வருமானம் ஈட்டுவதற்காக பயன்படுத்தப்படாத வளங்களை அதிக உற்பத்தி வழியில் பயன்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அதன்படி, அமைச்சின் ஒப்புதலுடன், வானொலிக் கூட்டுத்தாபனம் முறையான நடைமுறைகளைப் பின்பற்றி கனேடிய நிறுவனத்துடன் இணைந்து சூரிய சக்தித் திட்டத்தை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன்படி, குறித்த காணியை இலவச மானியப் பத்திரம் மூலம் வானொலிக் கூட்டுத்தாபனத்துக்கு மாற்றி உரிய திட்டத்தில் வருமானம் ஈட்டவும், அரசாங்கம் வழங்கும் பணத்தை நிறுத்தவும் இரண்டாவது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கிடையில், பிரதமரின் கண்காணிப்பு காலத்தில் தற்போதைய ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட கடைசி அமைச்சரவைப் பத்திரத்தின் பின்னர், வானொலிக் கூட்டுத்தாபனம் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன்படி குறித்த கனேடிய நிறுவனத்துடனும் வானொலிக் கூட்டுத்தாபனம் ஆரம்ப ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது.

அது தனது செயற்பாடுகளைத் தொடர்ந்தது.

இதன்படி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மேற்படி விதிவிலக்கு அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன், அனைத்துப் பரிந்துரைகளையும் பெற்ற பின்னர், இறுதி எழுத்துபூர்வ அனுமதியைப் பெறுவதற்காக காணி அமைச்சு அதற்கான கோப்பை 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திடம் கையளித்தது.

இதனைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதியின் செயலாளர், சுற்றுப்புறங்களைச் சரி பார்க்காமலோ அல்லது கோரப்பட்ட அனுமதியிலோ ஒலிபரப்பு நிலையத்தை மூடிவிட்டு காணியை விமானப்படையிடம் ஒப்படைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வொன்றை மேற்கொள்ள விமானப்படையினரையே நியமித்துள்ளார்.

அதன்படி விமானப்படையின் குழு ஒன்று மார்ச் 5ஆம் திகதி திருகோணமலை குச்சவெளிக்குச் சென்று இதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, இப்பிரதேசத்தில் மக்களின் வாழ்க்கைக்கு பிரச்னைகள் உள்ளதாலும், திருகோணமலையில் போதுமான முகாம்கள் உள்ளதாலும் இப்பகுதியில் விமானப்படை முகாம் தேவையில்லை என திருகோணமலை சிவில் உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

# அம்பனில் விபத்து; ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 21

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10:00 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

குறித்த நபர் இரவு 10:30 மணியளவில் தனது தோட்டத்துக்கு காவலுக்காகச் செல்வதாகக் கூறிவிட்டு வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் வெளியேறிய நிலையில் அம்பன் சமுர்த்தி வங்கிக்கு முன்பாக மதகுடன் மோதி படுகாயமடைந்து பாலம் ஒன்றினுள் வீசப்பட்டுள்ளார்.

இரவுவேளை என்பதால் யாரும் கண்டுகொள்ளமல் அதிக நேரம் விபத்துக்குள்ளான நிலையில் காணப்பட்டுள்ளார்.

அவ்வேளை, தற்செயலாக வருகை தந்த இளைஞர் ஒருவர் 1990 நோயாளர் காவு வண்டிக்கு அறிவித்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட் டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (அ)

## 10 பெரமுன...

சரவை ஸ்தாபிக்கப்படவில்லை. அமைச்சரவை விவகாரத்தில் பொதுஜன பெரமுனவின் பத்து சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தை பலவீனப்படுத்தக்கூடாது என்பதற்காக பொறுமையுடன் செயல்படுகிறோம்.

69 இலட்சம் மக்களின் தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிப்பதற்கும், மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கும் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் முக்கிய பங்கு வகித்தார்கள். ஆனால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை -என்றார். (அ)

## ஜனக...

கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவரை பதவி நீக்குவதற்கான யோசனை யோசனை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி இந்த யோசனைக்கு எதிராகவே வாக்களிக்கும். அவர் மக்களுக்கு நியாயமான விலைவில் மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கே முயற்சித்தார். அதை விடுத்து எந்த தவறும் இழைக்கவில்லை.

அவர் மக்களுக்கு வழங்கிய சேவைகளே தவறுகளாக சித்தரிக்கப்பட்டுள்ளன. மின் கட்டணத்தை 3 சதவீதத்தினால் குறைக்க முடியும் என்று அரசாங்கம் குறிப்பிடுகின்றது. ஆனால் 27 சதவீதத்தினால் குறைக்க முடியுமென அவர் குறிப்பிட்டார். இதற்காகவே அரசாங்கம் இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்துள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் என்ற பெயரில் அரசாங்கம் இவற்றை நியமித்திருந்தாலும், திரையின் பின்னால் பாரிய அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. சுயாதீன ஆணைக்குழுக்களின் செயல்பாடுகளை எதிர்கொள்ள தைரியம் இல்லாவிட்டால் அரசாங்கம் அவற்றை நியமித்திருக்கக்கூடாது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான தினம் தீர்மானிக்கப்பட்டதிலிருந்து, அரசாங்கத்தின் தேவைக்கேற்ப தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அதன் உறுப்பினராக செயல்பட்ட பி.எஸ்.எம்.சாள்ஸ் முழுமையான ஆதரவை வழங்கினார். அதற்கான அன்பளிப்பாகவே இன்று அவருக்கு ஆளுநர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

## வடக்கு - கிழக்கில்...

பிரதேசங்களில் இடம்பெறுகின்ற சம்ப வங்களின் மூலம் காணக்கூடியதாக உள்ளது. எனவே, அவற்றைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பில் தாங்கள் விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாக அஸ்கிரிய மகா விகாரை, ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பௌத்த விகாரைகள் அமைக்கும் பணிகளுக்கு எதிராகப் பரவலாகப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வரும் நிலையில் அஸ்கிரிய பீடத்தினால் அவசர அவசரமாக இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஏனைய...

ஜப்பான் விஜயத்தின் பின்னர் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட உள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

தற்போது ஆளுநர்களாக பதவி வகிப்போர் மாற்றப்படுவார்கள் அல்லது புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படுவார்கள் எனக் கூறப்பட்டது.

மேல்,தென், சப்ரகமுவ,வட மத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கே புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படுவார்கள் என தெரியவருகின்றது.

ஜனாதிபதி ஏற்கனவே வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்களை அண்மையில் நியமித்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (அ)

## மன்னாரில்...

மாணவி காணாமல்போனது தொடர்பாக பெற்றோர் சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இந்த நிலையில் மாணவி நேற்று முன்தினம் மாலை புத்தளத்தில் வைத்துக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள நிலையில், புத்தளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மாணவியின் தந்தை தெரிவித்தார். (அ)

## அரசியல்...

யில்,

“போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது.

எனினும், வடக்கு-கிழக்கு மக்கள் அபிவிருத்தியை மாத்திரம் எதிர்பார்க்கவில்லை. போர் ஏன் மூண்டதோ அதற்கான தீர்வையும் அவர்கள் விரும்புகின்றார்கள். இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் விருப்பமும் அதுவாக உள்ளது. எனது விருப்பமும் அதுவே.

இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 14 வருடங்கள் நிறைவடைந்து விட்டன. இன்னமும் தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படவில்லை.

தீர்வை நாம் விரைந்து காணவேண்டும். தமிழ்க் கட்சிகளுடன் நான் ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகளும் முழுமையான ஒத்துழைப்பை எனக்கு வழங்க வேண்டும்.”-என்றார். (அ)

## யாழ்ப்பாணத்தில்...

முன்னாள் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மே 15ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் பதவி நீக்கம் செய்யப்பட்டநிலையில் மே 17 ஆம் திகதி திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## இனப்படுகொலை விவகாரம்:

# கனடாத் தூதுவரை அழைக்கின்றது இலங்கை வெளிவிவகார அமைச்சு!

கொழும்பு, மே 21

**கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இலங்கை தொடர்பில் அண்மையில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கொழும்பில் உள்ள கனேடிய தூதுவருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.**

**'இலங்கையில் இனப்படுகொலை' நடந்தது எனக் கனடா பிரதமர் வெளிப்படுத்தியமை தொடர்பாக எதிர்ப்புப் பதிவு செய்ய கனேடிய தூதுவருக்கு அமைச்சர் அலி சப்ரி அழைப்பு விடுத்துள்ளார்.**

கடந்த வியாழன் அன்று (மே 18) கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்ட அறிக்கையை இலங்கை வெளிவிவகார அமைச்சு நிராகரிப்பதாக கூறியது.

அதில் இலங்கையில் இனப்படுகொலை நடந்ததாக கூறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டது.

கனேடியப் பிரதமரின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இலங்கை நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

ஒரு தேசத்தின் தலைவரின் இத்தகைய பொறுப்பற்ற மற்றும் துருவ முனைப்பு அறிவிப்புகள் கனடாவிலும் இலங்கையிலும் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக வேற்றுமையையும் வெறுப்பையும் வளர்க்கிறது என்று அமைச்சு மேலும் கூறியது.

கனடா மற்றும் அதன் தலைவர்கள் வெறுப்பு, தவறான தகவல் மற்றும் தீவிரவாத கருத்துக்களை ஊக்குவிக்கும் வகையில் கனடாவில் இருந்து அறிவிப்புகளை வெளியிடுவதை தவிர்க்குமாறும், திரிபுபடுத்தப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் இலங்கை மீதான உதவியற்ற கவனத்தை நிறுத்துமாறும் இலங்கை வலியுறுத்தியுள்ளது.

எனினும், இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதில் கனடா உறுதியாக உள்ளது. இந்த அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னதாக வெளிவிவகார அமைச்சுக்கு கனடா தகவல் வழங்கியது. இனப்படுகொலை தகவலை நீக்குமாறு இலங்கை விடுத்த வேண்டுகோளை கனடா கண்டு கொள்ளவில்லை. (அ)



## நடமாடும் வாக்கு நிலையங்கள் நிறுவுவது தொடர்பில் ஆராய்வு

கொழும்பு, மே 21

நடமாடும் வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்து வருவதாக அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அத்தகைய நபர்களின் வாக்குகள் அவரது இல்லத்துக்குச் சென்று சேகரிக்கப்படும் என்றும், அதற்காக தற்போதைய தேர்தல் சட்டங்கள் திருத்தப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பல தொழில்களில் பணிபுரியும் வாக்காளர்கள் தேர்தலுக்கு முந்தைய நாளில் வாக்களிக்க ஏதுவாக சட்டங்கள் உருவாக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (அ)

## இலங்கையின் கடன் பிரச்னை தீர்வு அமைப்புக்கு ஜி-7 நாடுகள் வரவேற்பு

கொழும்பு, மே 21

இலங்கையின் கடன் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக, இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைமையின் கீழான நடவடிக்கைக்கு ஜீ-7 நாடுகளின் கூட்டணி வரவேற்பு தெரிவித்துள்ளது.

ஹீரோஷிமா நகரில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஜீ-7 நாடுகளின் தலைவர்களது 49ஆவது மாநாடு இன்று வரை இடம்பெறவுள்ள நிலையில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் நடுத்தர வருமான நாடுகளுக்கு தீர்வு காண்பதற்கான எதிர்கால பல தரப்பு முயற்சிகளுக்கு ஒரு வெற்றிகரமான முன்மாதிரியாக விரைவான தேர்வு அவசியம் என்றும் அது லியுறுத்தியுள்ளது. (அ)

## மொட்டு தலைமையகப் பக்கம் தலை காட்டாத அமைச்சர்கள்!

கொழும்பு, மே 21

அரசாங்கத்தில் அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சு பதவிகளை வகிக்கும் பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான அமைச்சர்கள் பொதுஜன பெரமுனவின் கட்சித் தலைமையகத்துக்குச் செல்வதை தவிர்த்து வருவதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பதவிகளைப் பெற்றுக்கொண்டு கட்சித் தலைமையகத்துக்குச் செல்லாத அமைச்சர்கள் பலர் இவர்களில் அடங்குவதாக கூறப்படுகின்றது.

சிலர் பதவி கிடைத்து சில நாட்கள் கட்சித் தலைமையகத்துக்குச் சென்றபோதிலும் அதன் பின்னர் கட்சியின் தலைமையகத்தின் பக்கம் தலைக்காட்டவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இந்த அமைச்சர்களில் பெரும்பாலானோர் பொதுஜன பெரமுனவின் அரசியல் நடவடிக்கைகளில் இருந்து விலகி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருக்கமாக இருந்து வருகின்றனர்.

இந்த நிலையில், பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெறும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர்கள் எவரும் பங்கேற்காத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தொடர்ந்து பங்கேற்கும் ஒரு சிலரைத் தவிர, குறிப்பிடத்தக்க அமைச்சர்கள் அதில் பங்கேற்பதில்லை என்பதை அண்மைய காலமாக காணமுடிகின்றது. (அ)

## இலத்திரனியல் கடவுச்சீட்டு இவ்வருடம் முதல் அறிமுகம்!

கொழும்பு, மே 21

நாட்டில் இந்த வருடம் முதல் இலத்திரனியல் கடவுச்சீட்டை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மட்டுமன்றி பல்வேறு உலக நாடுகளும், இலத்திரனியல் கடவுச்சீட்டுக்கான வசதிகளை வழங்க முன்வந்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார். (அ)

# வவுனியா கட்டையர்குளம் காடழிப்பு; அறிக்கை கோருகின்றார் அரச அதிபர்

வவுனியா, மே 21

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் இடம்பெற்ற காடழிப்பு தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரச அதிபர் பிரதேச செயலாளரைக் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் வன இலாகாவுக்கு சொந்தமான சுமார் 12 ஏக்கர் வரையிலான காடு கிராம அலுவலர் ஒருவரின் ஆதரவுடன் அழிக்கப்பட்டிருந்தது.

இதனை கட்டையர்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் தடுத்து நிறுத்தியதையடுத்து, அதில் முன்னின்று செயல்பட்ட பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு எதிராக போலி முகநூலில் அவதூறை ஏற்படுத்திப் பதிவுகள் இடப்பட்டிருந்தன.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர் கொழும்பு சி.ஐ.டி மற்றும் வவுனியா இணையக் குற்றப்பிரிவு பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த கிராம அலுவலர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதன் தொடர்ச்சியாக கட்டையர்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் காடழிப்பு தொடர்பில் வவுனியா மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத் சந்திரவிடம் கொடுத்த முறைப்பாடு தொடர்பில், உடன் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசனிடம் கோரியுள்ளார்.

இதேவேளை, அண்மைக்காலமாக பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சில கிராம அலுவலர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு பிரதேச செயலகம் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழகத்தில் இலங்கையர் ஒருவருக்கு 22 வருட சிறை!

கொழும்பு, மே 21

13 வயதான சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் தமிழகத்தில் உள்ள இலங்கையர் ஒருவருக்கு 22 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டபத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசித்து வந்த இலங்கையருக்கே இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மகிளா நீதிமன்றம் அவருக்கு 22 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

வழக்கின் படி, குற்றம் சாட்டப்பட்ட 52 வயதான குறித்த இலங்கையர், 2022இல் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இதேவேளை பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 லட்சம் இழப்பீடு வழங்க தமிழக அரசு பரிசீலிக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

## தேர்தலுக்கு செலவிடப்பட்ட பணம் அச்சகத்துக்குக் கிடைக்கவில்லை!

கொழும்பு, மே 21

பிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்களை அச்சிட செலவிடப்பட்ட 20 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை இதுவரை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அரசாங்க அச்சகத்துக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அரசாங்க அச்சகத்தின் செயல்பாடுகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க அச்சக திணைக்களத்தின் தலைவர் கங்கானி லியனகே தெரிவித்தார்.

அத்துடன், இந்த வருடத்தில் ஏனைய செயல்பாடுகளுக்காக பணம் தேடுவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## கௌதாரிமுனை காற்றாலை நிலையம் மக்களின் கருத்தை கேட்டார் அங்கஜன்

கிளிநொச்சி, மே 21

கௌதாரிமுனை பகுதியில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் தொடர்பில் மக்கள் கருத்துக்களை கேட்டறியும் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

குறித்த பகுதிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது குறித்த காற்றாலை அமைப்பது தொடர்பில் மக்களின் எதிர்பார்ப்புக்கள், மற்றும் நன்மை தீமைகள் தொடர்பில் அவர் கேட்டறிந்து கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் குறித்த காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்துக்கு அனுமதி கோரப்பட்டது.

அந்த அனுமதிக்கு முன்னர் அவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து நன்மை, தீமைகள் பற்றி அறிந்த பின்னரே அனுமதி வழங்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த பகுதிக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் பிரதேச மக்களிடம் கலந்துரையாடியதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.